தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை



ஒக்டோபர் 1996

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கரைப் பூக்கள்

அன்புடையீர்,

வணக்கம். 'எரிமலை' ஜூன் மாத இதழ் கிடைத்தது. மகிழ்ச்சி. நன்றி. இதழ் கிடைத்து அனேக வாரங்கள் ஓடிவிட்டன. என் உடல் நிலை சீராக இல்லாததால், இதழைப் படித்து கடிதம் எழுதுவதில் காலதாமதம் ஆகிவிட்டது. அதற்காக என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எரிமலை' பதின்நான்காம் ஆண்டில் நடந்து கொண்டிருக்கிறது என்பது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய விடயம்.

'எரிமலை' விழிப்பும் உணர்வும் ஊட்டக்கூடிய விஷயங்களைக் கொண்ட நல்ல தரமான இதழாக விளங்குகிறது. ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்ட முயற்சிகளையும், மக்களின் விடுதலைக்கான போரின் ஈடுபாட்டையும், அவர்கள் சகித்துக் கொள்கிற சிரமங்களையும், தற்கால நிலைமைகளையும் கட்டுரைகள் நன்கு எடுத்துக்கூறுகின்றன. கவிதைகள் சிறப்பாக உள்ளன.

'பூவரசு பூக்கும் பூமிக்கு வெள்ளரசு விலங்கிட முடியுமா?' விசேசமான பாராட்டுதலுக்கு உரியது.

ஐ.எஸ்.சிங்கர் கதை 'அமெரிக்காவிலிருந்து வந்த மகன்' அருமை. தன் நிறைவு பெற்ற ஒரு கிராமத்தின் மக்களது மனநிறைவை – வெளியார் உதவிகள் தேவை இல்லாதிருக்கும் நிலையை அழகாகச் சித்தரிக்கிறது.

'கலை பண்பாடு அரசியல் சமூக ஏடு' என்பதற்கு ஏற்ப 'எரிமலை' அறிவூட்டும் – தகவல்கள் தரும் – ரசனைக்கு விருந்தளிக்கும் பல்சுவை விஷயங்களையும் தருவதில் வெற்றிபெற்றுள்ளது. வாழ்த்துக்கள்.

அன்பு வல்லிக்கண்ணன்

★★

அன்புள்ள எரிமலை ஆசிரியருக்கு,

ஒரு தமிழின தோழனின் வணக்கம்.

எரிமலையே! உன்னை வாழ்த்த; எனக்குத் தமிழினத்திற்குப் பாடுபடும் தங்கத் தமிழன் தனிப்பெரும் மாவீரனை நினைக்கும் பொழுது தமிழுணர்வு துடிக்கிறது. உன்னை வாழ்த்தி வணங்குகிறேன். என்ன செய்வேன் அடிமை விலங்கிட்டுள்ள தமிழ்நாட்டில் பிறந்துள்ளேன். நான் 15 வயது முதல் தமிழின. தமிழீழத்திற்காக என்னை அர்ப்பணித்து வருன்கிறேன். இந்திய ஏகாதிபத்தியத்திற்கு அனைத்துத் தலைவர்களும் அடிமைப்பட்ட போதும், சில உண்மை தமிழின தமிழீழ உணர்வாளர்களின் வழிகாட்டுதலுடன் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டி வருகிறேன். தளபதி கிட்டு நினைவு நாளை தொடர்ந்து 3 ஆண்டுகளாக கொண்டாடி வருகிறேன். தமிழ்நாட்டு விடுதலைக் குறியீடாகவும், தமிழீழத்தின் ஆதரவாளராகவும் விளங்கிய தமிழறிஞர் பாவலர் பெருஞ்சித்திரனார் முதலாமாண்டு நினைவு நாளை துண்டறிக்கை மூலம் கொண்டாடினோம். சேலம் மாவட்டம் முழுவதும் நினைவு நாள் கூட்டங்கள் நடைபெற்றது. இந்திய அரசால் கைதுசெய்யப்பட்ட சேலத்து வேங்கை கொளத்தூர் மணி கைதை கண்டித்து சுவரொட்டி மூலம் எதிர்ப்புத் தெரிவித்தோம். தமிழீழ விடுதலை ஆதரவாளன் பாவாணனை கைதுசெய்ததை எதிர்த்து துண்டறிக்கை – சுவரொட்டி மூலம் சேலம் முழுதும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாண – கிளிநொச்சி தாக்குதல்களை கண்டித்தும், துயர்படும் ஈழச்சகோதரர்களின் இன்னல்களைத் தடுத்து நிறுத்தக் கோரியும் ஆர்ப்பாட்டமும், கருத்தரங்குகளும் மேட்டூர், பள்ளியப்பாளையம், ஈரோடு, சென்னிமலை, காங்கேயம் ஆகிய இடங்களில் புரட்சிகர இளைஞர் முன்னணி மூலம் நடாத்தினோம். காந்தி தேசத்திற்கு அகிம்சையைக் கற்றுத்தந்த திலீபனுக்கு நினைவு அட்டை வெளியிட்டுள்ளோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உண்மை ஆதரவாளர்களான கார்முகிலன், நெடுமாறன், மருத்துவர் இராமதாஸ், தீரன், கொளத்தூர் மணி, பாவாண ஆறுசாமி, கவிஞர் இன்குலாப், அறிவுமதி போன்ற தமிழீழ உணர்வாளர்களை வழிகாட்டிகளாக ஏற்று உள்ளோம்.

அ) மேற்கண்ட போராட்டங்கள் போன்ற போராட்டங்களை நடாத்த வழிகாட்ட,

ஆ) தமிழீழ நடப்புக்களை உடன் அறிந்து செயல்பட

இ) தமிழீழ செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்ல

ஈ) எங்களின் உணர்வுகள் மென்மேலும் வளர 'எரிமலை' அவசியமாகிறது. ஆகவே தொடர்ந்து எரிமலையை அனுப்பவும்.

மேலும் தமிழின வெளியீடுகளான 'களத்தில்', 'உலகத் தமிழர்' போன்ற தமிழீழ வெளியீடுகளையும் அனுப்பவும்.

'எரிமலை' இதழின் பழைய பிரதிகள் கிடைக்கப் பெற்றால் மிகவும் நன்றாக இருக்கும்.

தங்களின் வெளியீடுகளை எதிர்நோக்கும் தமிழின இளைஞர்கள்.

துயர்படும் எம் இனத்திற்காகவும், எமது போராளிகளுக்காகவும், தமிழீழ தாயகத்திற்காகவும் எமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழக்கவும், தியாகம் செய்யவும் துடிக்கும்

தோழன் மேவி குமார்
சேலம்

★★

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

நான் சென்னையில் The News Leader என்ற சிறுபத்திரிகையில் துணை ஆசிரியராக (Sub-Editor) பணி புரிகிறேன். எனக்கு உடனே 'எரிமலை' காலம் தாழ்த்தாமல் அனுப்பிவைக்கவும். மேலும் தமிழீழ விடுதலைப் போரை ஆதரிக்கும் வேறு ஏதாவது இதழ்கள் வரும்படி எனது முகவரியை அந்த ஈழ இதழ்களுக்கும் அனுப்பலாம்.

நன்றி!
புலிப்படை வெல்லட்டும்!
தமிழ் ஈழம் மலரட்டும்!!

இப்படிக்கு
அன்பு நண்பன் சா. வேல்

★★

அன்புடையீர்,

தங்களது 'எரிமலை' இதழ் ஒன்று கிடைக்கப் பெற்றோம்.

இதழ் மிகவும் அருமையாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. எங்களால் முடிந்த ஆதரவை தொடர்ந்து செய்வோம்.

அன்புடன்
தமிழ் மைந்தர் மன்றம்.

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
ஒக்டோபர் 1996

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# சர்வதேச பிரச்சினையாக விரிவடையும் தமிழீழப்போராட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டம், சர்வதேசப் பிரச்சினையாக பரிமாணம் பெற்று வருகிறது. அண்மைக் காலத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளே இவ்வந்தஸ்தைப் போராட்டத்துக்கு வழங்குகின்றன. இவ் யதார்த்தத்தின் வெளிப்பாடாகவே, சந்திரிகா, மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்தை தான் ஏற்றுக்கொள்வதான மொழிவு அமைகிறது.

ஐ.நா. சபை, பொதுநலவாய நாடுகளின் செயலகம், நோர்வே, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து போன்றவை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிப்பதான கோரிக்கையை தொடர்ந்து முன்வைத்து வருகின்றமை இதில் முக்கியமானது. அண்மையில் சிறிலங்கா சென்ற பிரிட்டன் வெளிநாட்டு உதவிச் செயலாளர் லியாம் பொக்ஸ் (liam Fox) பிரிட்டனின் மத்தியஸ்த விருப்பத்தை வெளிப்படையாகத் தெரியப்படுத்தியமை இப்பரிணாம வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகிறது.

இதேவேளை, இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ரால், சிறிலங்கா அரசாங்கத்தின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில், அதற்கு உதவமாட்டோம் என்று கூறியமை இன்னொரு முக்கிய நிகழ்வாகும். தமிழீழத்திலிருந்து அகதிகள் வெளியேறி இந்தியாவுக்கு 1980ம் ஆண்டுகளில் போன போதே, இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்ற எல்லையைக் கடந்து விட்டது. பின்னர் இந்திய 'மத்தியஸ்தம்' ஏற்பட்டு இந்திய அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டபோது, இது சர்வதேசப் பிரச்சினை என்பது மேலும் உறுதியாகியது. தற்போது, மீண்டும் அகதிகள், இந்தியாவுக்குள் நுழைகின்ற சந்தர்ப்பத்தில், சிறிலங்காவுக்கு உதவமாட்டேன் என்று அதன் வெளிநாட்டமைச்சர் கூறுவது ஒரு சர்வதேசப் பிரச்சினையில் ஆதிக்க அரசுக்கு ஆதரவாக இந்தியா செயல்படாது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. இது இந்தியாவின் சிறிலங்கா தொடர்பான வெளிநாட்டு அரசியலில், ராஜீவ் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கையில் பாரிய மாற்றத்தைக் குறிப்பதாகவும் உள்ளது.

அமெரிக்க விசேஷ படையினர் சிறிலங்கா அரச படைகளுக்குப் பயிற்சி அளிப்பதை அமெரிக்க ராஜங்கத் திணைக்களம் ஒத்துக் கொண்டுள்ளது. ஆயினும் அமெரிக்கப் படைகள் நேரடியாக தேசிய இனப்போரில் கலந்து கொள்ளாது; ஒரு போதும் கலந்து கொள்ள மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா நிரல்படுத்துமானால் அமெரிக்காவின் இராணுவத் தலையீடு சிறிலங்காவில் விரிவுபடுத்தப்படும் என்பதையே இது முன்னெச்செரிக்கைப்படுத்துகிறது. இது சமாதானத்திற்கோ, பிராந்திய ஸ்திரத்திற்கோ வழிவகுக்காது; போரின் விஸ்தரிப்பிற்கே உதவும் என்பது மிக மோசமான விடயமாகும். சர்வதேச பிரச்சினை சர்வதேச நெருக்கடிக்கு இட்டுச் செல்லப்படுவது இதிலுள்ள பாரதூரமான விளைவாக இருக்கும்.

இதேவேளை, ஐ.நா. சபை செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கை சிறிலங்கா அரசாங்கத்துக்கு மிகுந்த அதிருப்பதியை அளித்துள்ளது. அவ்வறிக்கை, யாழ் குடாநாட்டிலிருந்து மக்கள் இடம்பெயர்வுக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையை குற்றம் சாட்டியுள்ளது. ஐ.நா. சபையின் அபிவிருத்தித் திட்ட அமைப்பு, புனர்வாழ்வு, நல்லிணக்கச் செயல்பாடுகளைச் செய்ய முன்வந்த போதும் சமாதானத் தீர்வுச் செயற்பாடுகள் பின் தள்ளப்பட்டதால், அது சாத்தியமாகவில்லை என்று அது தெரிவிக்கின்றது. இது குறித்துக் கண்டனம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ள சிறிலங்காவின் ஐ.நா. சபைக்கான தூதுவர், ஐ.நா சபையின் புனர்வாழ்வு, நல்லிணக்கச் செயற்பாடுகளை சிறிலங்கா அரசாங்கம் கோரவில்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்தது, வேற்று நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றியதைப் போன்று செயலாளர் நாயகத்தின் அறிக்கை அமைவதாகவும் அக்கண்டனம் தெரிவிக்கிறது. சிறிலங்கா, தமிழீழம் ஆகியவற்றுக்கு மாத்திரமல்ல சிறிலங்கா அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகியவற்றுக்கு சம அந்தஸ்து தந்துள்ளதாக அவ்வறிக்கையின் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் அந்நிய ஆக்கிரமிப்பு – உள்நாட்டு குடியேற்றவாதம் என்ற அடிப்படையில் – எமது தேசிய இனப்பிரச்சினை சர்வதேச சமூகத்தால் கருதப்படுவதாகவும் அர்த்தம் கொள்ளலாம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்த போதும், தனது கோயபல்ஸ் வகைப் பிரச்சாரத்தினாலும் செய்தித் தடையினாலும் தனக்குச் சாதகமான சூழ்நிலையை சர்வதேச ரீதியாக ஏற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் முனைகிறது. உள்நாட்டுப் பிரச்சினையாக தொடர்ந்து காட்டமுடியாத நிலையில் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் பிரச்சினையாக சர்வதேசத்தின் முன் வைக்க அரசாங்கம் முயற்சி செய்கிறது. இத் தருணத்தில், சர்வதேச தமிழர் சம்மேளனத்தால் உலக கவன ஈர்ப்பு வாரம் அனுஸ்டிக்கப்படுவது பொருத்தமானதொன்றாக விளங்குகிறது. தமிழீழ மக்கள் சிறிலங்கா அரசின் கொடூர அடக்குமுறை ஆட்சியில் படும் அவலங்களை உலகின் முன் கொணர்ந்து, உலகின் பார்வையை தமிழீழ மக்கள்பால் கொண்டு வரும் முயற்சியாக அமைகிறது. மக்களின் அவலங்களை நீக்குகின்ற முயற்சியாக மட்டுமல்ல, அவ்வவலத்திலிருந்து நிரந்தரமாக விடுபட்டு சமாதானத்தையும் சகஜ வாழ்வையும் கொண்டு வரும் முயற்சியாகவும் அமைகிறது. மேலும் விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப்புலிகளையும் சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதன் மூலமே சமாதானம் சாத்தியம் என்பதையும் இக்கவன ஈர்ப்பு வாரம் முன் வைக்கிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆன்மதிடத்தைத் தந்த நிகழ்வு




எமது சுதந்திரப்போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினம். தமிழீழத் தேசம் என்றுமில்லாதவாறு ஒரு பேரிழப்பைச் சந்தித்தது. அன்று எமது விடுதலை இயக்கத்தின் வீரத்தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரர்களை இழந்து நாம் இரத்தக் கண்ணீர் வடித்தோம்.

இவர்களது இழப்பால் தமிழீழத் தேசமே சோகத்தில் மூழ்கியது. ஆயினும் இவர்களது மரணம் எமது மனத்தைப் பீடித்திருந்த மாயைகளைச் சாகடித்தது. போலி நம்பிக்கைகளைக் கொன்றது. எமது மக்களின் நியாய பூர்வமான போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த விரோத சக்திகள் யார் என்ற உண்மையையும் எமக்கு உணர்த்திக் காட்டியது. எனவே இந்தப் பேரிழப்பு என்றுமில்லாதபடி ஒரு புதிய விழிப்புணர்வையும், சுதந்திர வேட்கையையும் எமக்குத் தந்தது. நாம் எந்த அந்நிய சக்தியிலும் தங்கியிருக்கக் கூடாது, எமது சுந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்ற அபாரமான சுயநம்பிக்கையை இவர்களது சாவு எமக்குக் கொடுத்தது. இந்த வகையில் இந்த மாவீரர்களின் உயிர்த்தியாகம் எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் பெரியதொரு திருப்புமுனையாக அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும். இந்த மாவீரர்களின் மரணத்தை அடுத்து இந்திய இராணுவம் எமது இயக்கம் மீது போர் தொடுத்தது. உலகத்தின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றை நாம் எதிர்த்துநின்று போராடினோம். பெரியதொரு வல்லரசை எதிர்த்து நின்று போராடும் அளவிற்கு ஆன்மீக திடத்தையும், அசையாத நம்பிக்கையையும் எமக்குப் பெற்றுக் கொடுத்தது இந்தப் பன்னிரண்டு மாவீரர்களின் அற்புதமான தியாகமாகும்.

இந்திய – இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்கு இந்த இளம்புலிவீரர்கள் மரணமானார்கள். ஆனால் அவர்களது மரணம் சாதாரண சோக நிகழ்வு அல்ல. தமிழீழ தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியைத் தூண்டிவிட்ட ஒரு வரலாற்று நிகழ்வாகவே அமைந்தது.

இழப்புக்களும் அழிவுகளும் எமது விடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம் ; சந்தித்து வருகிறோம். ஆனால் இந்த இழப்புக்களும், அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கிவிட முடியாது.

இன்று நாம் எமது வரலாற்று எதிரியை யுத்த களத்தில் சந்தித்து நிற்கிறோம். எமது எதிரியானவன் தனது முழு பலத்தையும் பிரயோகித்து ஓர் இனக் கொலை யுத்தம் நடத்தி வருகிறான். எதிரியிடம் ஆயுதபலம் உண்டு, ஆட்பலமுண்டு, ஆதரவளிக்க நாடுகளுண்டு. நாம் தனித்து நின்று போராடுகிறோம். எமக்கு எந்த நாட்டின் உதவியுமில்லை. ஆனால் எமக்குள்ள ஒரேயொரு பலம் எமது ஆத்ம பலம் தான்.....



ஆகாயத்திலிருந்து விழும் குண்டுகள் எமது கட்டடங்களை அழிக்கலாம்; கோவில்கள், பாடசாலைகளை அழிக்கலாம். ஆனால் எத்தகைய குண்டுவீச்சும் எமது மனோ பலத்தை அழித்துவிட முடியாது.

இன்று எதிரி ஆட்டம் காண்கிறான். பல யுத்த அரங்குகளிலிருந்து பின்வாங்கி ஓடுகிறான். எமது போராளிகளின் உருக்குப்போன்ற உறுதியும், வீரமும், தியாகமும், இலட்சியப்பற்றும் எதிரியின் மனபலத்தை உடைத்து வருகிறது.

நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயகப் பூமியை, எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம், எமது மடிந்த வீரர்களின் கனவை நனவாக்க நாம் தொடர்ந்து போராடுவோம்.

தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரெண்டு மாவீரர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தலைவர் விடுத்த அறிக்கையிலிருந்து.....

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அரச பயங்கரவாதத்தின் சர்வதேசப் பிரச்சாரம்

சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உடைத்துக்கொட்டும் நோக்கில், பல்வேறு முனைகளில், தந்திரோபாய அடிப்படையில் செயற்படுகின்றது. இதில் ஒரு கூர்முனை, சர்வதேச பிரச்சாரமாகும். நவீன உலகில் பிரச்சாரப் போர் ஏனைய நடவடிக்கைகளுக்கு சமனான முக்கியத்தைப் பெறுகின்றது. தொலைதொடர்பு சாதனங்கள், இலத்திரனியல் தகவல் பரிமாற்றம், அச்சியல் வளர்ச்சி ஆகியவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. இப்பிரச்சாரத்தின் மூலம், சிறீலங்கா அரசாங்கம் விரும்புவது யாதெனில், தேசிய விடுதலைப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாக உலக சமூகத்தின் முன்னர் சித்தரித்துக்காட்டுவதுதான். இதன்மூலம் பல ஆதாயங்களை அடையலாம் என்று சிறீலங்கா அரசு கருதுகின்றது.

1. விடுதலைப் புலிகள் இயக்கத்தை உலக ரீதியில் தனிமைப்படுத்துவது,
2. அதன் சட்டபூர்வ அங்கீகாரத்தை மறுப்பது,
3. தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு உலக நாடுகளின் நிதி, ஆயுத உதவிகளைப் பெறுவது,
4. விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்குமாறு மேற்குலக நாடுகளைத் தூண்டி, விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பு, தகவல் விநியோகம் போன்ற செயல்பாடுகளைத் தடைசெய்வது,
5. அதன் இறுதி இலக்காக விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் அழிப்பது.

சிறீலங்கா அரசாங்கம் இதனைச் செய்வதற்கான தார்மீக, சட்டபூர்வ காரணங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. காரணம், விடுதலைப் புலிகள் நடத்தும் ஆயுதப் போராட்டம் சர்வதேச சட்ட வரையறைகளுக்கு உட்பட்டதாகவும், நீதியானதாகவும், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. மேலும் சிறீலங்கா அரசாங்கத்தின் இனவாத, இனப்படுகொலை வடிவிலான நடவடிக்கைகளை உலகம் அறிந்துகொண்டுதான் வருகின்றது. ஆட்களைக் காணாமல் செய்வதில், சூடான் நாட்டிற்கு அடுத்து 2–ம் இடத்தில் சிறீலங்கா இருக்கிறது. மேலும், பொதுமக்கள் மீதான குண்டு வீச்சுக்கள், உணவு, மருந்துகளைப் போராயுதமாகப் பயன்படுத்தி மக்களை பட்டினி போட்டு பணிய வைத்தல் போன்ற நடவடிக்கையில், அரச பயங்கரவாதியாக சிறீலங்கா அரசு சித்தரிக்கப்படும் நிலை காணப்படுகிறது. எனவே, மிக மோசமான பொய்ப் பிரச்சாரத்தில் சர்வதேச ரீதியில் இறங்கியுள்ள அதேவேளை, இன்னொரு தந்திரோபாயத்தையும் சிறீலங்கா அரசு கையாள்கிறது. இச்செயல்பாட்டில், தமிழராகத் தோற்றம் தரும் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் எசமான விசுவாசம் கைகொடுத்து உதவுகிறது. உலக பயங்கரவாதம் என்ற வரையறைக்குள் விடுதலைப் புலிகளை அடக்குவதுதான் அத்தந்திரமாகும். தனிப்பெரும் வல்லரசாக அமெரிக்கா தற்போது உலகில் திகழ்வதால், “உலக பயங்கரவாதப் பூதத்தை” அடக்கும் வெற்றிநாயகனாக விளங்க அமெரிக்கா விரும்புகிறது. எனவே, அமெரிக்காவின் ஆதரவை இது தொடர்பாகப் பெறுவதில் சிறீலங்கா தீவிரமாகச் செயற்படுகின்றது. அமெரிக்கா இது தொடர்பாக நடவடிக்கை எடுத்தால், அது எல்லா நாடுகளிலும், குறிப்பாக மேற்குலக நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சிறீலங்கா எண்ணுகிறது. ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மேற்குல நாடுகள் அமெரிக்காவைப் பின்பற்றும் என்று சொல்லமுடியாது. அண்மையில், அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலின் போது, பிரிட்டனைத் தவிர்ந்த மேற்குலக நாடுகள் அதனை ஆதரிக்கவில்லை. ஆயினும், சிறீலங்கா இராணுவத்துக்கான அமெரிக்காவின் விசேட பயிற்சி என்பதை விட, இன்னொரு விடயத்தையும் அமெரிக்கா செய்யவேண்டும் என்று சிறீலங்கா விரும்புகிறது. அதாவது, அமெரிக்க அரசாங்கம் உலகின் பயங்கரவாத அமைப்புக்கள் என்ற நிரல் ஒன்றைத் தயாரித்து, அவற்றிற்கெதிரான சட்டம் ஒன்றை ஆக்க விரும்புகிறது. அந்த நிரலில் விடுதலைப் புலிகளையும் இணைத்துவிட அமெரிக்காவைத் தூண்டுவதுதான் அது. இந்த நிரலில் இடம்பெற்றால், அவ்வமைப்பின் பெயரில் அரசியல், நிதி சேகரித்தல் செயல்பாடுகளைச் செய்தல்முடியாது. மேலும் அவ்வமைப்பைச் சேர்ந்தவர்களை நாடுகடத்தவும் முடியும். ஒவ்வொரு அமைப்பையும் நன்கு ஆராய்ந்தே இந்நிரல்



கெய்ரோவில் நடைபெற்ற ‘பயங்கரவாதத்திற்கு எதிரான’ மகாநாட்டில்...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படுத்தல் வேலையைச் செய்தல்கூடும். இத்தகு ஆராய்வு வேலையின் பொருட்டே, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைத் திணைக்களத்தின் அதிகாரி பிலிப் வில்கொக்ஸ் (Phillipe Wilcox) கொழும்பு சென்றதாகக் கருதப்படுகின்றது. ஆயினும், நிதி அமைச்சின் சட்டவல்லுனர்களால் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கும் இச் சட்டவரைபும், நிரலும், செனட், கொங்கிரஸ் ஆகியவற்றில் விவாதத்துக்குள்ளாக்கப்பட்டு, அங்கு நிறைவேற்றப்பட்டே சட்ட அந்தஸ்தைப் பெறும். மேலும், தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளதால், அது முடிந்த பின்னரே, இச்செயற்பாடு தொடர்ந்து இடம்பெறும்.



லக்ஷ்மன் கதிர்காமர்

அமெரிக்கா இத்தகு சட்டத்தைக் கொண்டுவருவதற்கான பல காரணங்கள் உள்ளன. அமெரிக்காவில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள், இத்தகு சட்டத்திற்கான உள்ளூர்ச் சூழ்நிலையை உருவாக்கியிருக்க வேண்டும். முதலில் உலக வர்த்தக சந்தை (World Trade Centre) என்ற அமெரிக்காவின் அதி உயர்ந்த கட்டிடத்தை குண்டுவைத்துத் தகர்ப்பதற்கான முயற்சி இடம்பெற்றது. பின்னர், ஒக்லகாமா நகரில், அமெரிக்க புலனாய்வுத்துறையின் (FBI) தலைமைக் கட்டிடம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. பின்னர் TWA பயணிகள் விமானம், நாசகாரச் செயலினால் வானில் வெடித்துச் சிதறியதாக சந்தேகிக்கப்பட்டது. பின்னர், அண்மையில் அற்லான்ரா நகரில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் போது குண்டு வெடித்து ஒருவர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர்.

“சர்வதேச பயங்கரவாதத்தை” ஒழிப்பது தொடர்பான மகாநாடுகளும் அண்மைக்காலங்களில் நடைபெற்றுள்ளன. எகிப்திய தலைநகரான கெய்ரோவில், இஸ்ரேலிய அதிபர் ராபினின் இறப்புக்குப் பின்னர் மத்திய கிழக்கு நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் கலந்து கொண்ட மகாநாடு இடம்பெற்றது. சவூதி அரேபியாவில், டாரான் நகரில் அமெரிக்கத் தளம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டு பல அமெரிக்கத் துருப்பினர் கொல்லப்பட்டதை அடுத்து, பிரான்ஸ் லியோன் நகரில், யூன் மாதம் ருஷ்யா உட்பட 7 முக்கிய பொருளாதார பலம் மிக்க (G7) நாடுகளின் மகாநாடு இடம்பெற்றது. பின்னர் பாரிஸில் இந்நாடுகளின் தலைவர்களின் உச்சிமகாநாடு இடம்பெற்று, “சர்வதேச பயங்கரவாதத்தை” அடக்குவதற்கான வழிவகைகள் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான மேற்கு நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின் செயல்பாடுகளின் கீழ் விடுதலைப் புலிகளையும் இணைத்து விடுவதுதான் சிறீலங்கா அரசாங்கத்தின் நோக்கம். இதன் மூலம், விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக உலகின் முன் நிலைநிறுத்தி நீதியான போராட்டத்தை அழிப்பது தான் அதனது எண்ணம். ஒக்லகாமா குண்டு வெடிப்பு இடம்பெற்ற போது, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் பெயரில் அக்குண்டுத் தாக்குதலைப் பாராட்டி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. இது குறித்து விடுதலைப் புலிகள் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். இத்தகு கடிதம் ஒன்றை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அனுப்பவில்லை என்றும் இது ஒரு மோசடிக் கடிதம் என்றும், சிறீலங்கா அரசாங்கத்தின் உளவுத்துறையின் செயல் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கும் இது தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர், கொழும்பிலுள்ள ஜப்பானிய, மலேசிய தூதுவராலயங்களை குண்டுவைத்துத் தகர்க்கப் போவதாக விடுதலைப் புலிகள் மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டது. இதுவும் விடுதலைப் புலிகளால் மறுக்கப்பட்டது. மேலும், மோசடி வேலைகள் ஒருபுறம், மிக மோசமான பிரச்சாரம் மறுபுறமும் சதி நோக்கத்துடன் இடம்பெறுகின்றது. சர்வதேச செய்தி நிறுவனங்களின் கொழும்பிலுள்ள சிங்கள நிருபர்கள் இத்தகு மோசமான பிரச்சாரங்களில் துணைபுரிவதாக செயல்படுகிறார்கள். அண்மையில், Lankaweb என்ற, செய்திச் சேவை ஒன்று இலத்திரனியல் அஞ்சலில் (E-Mail) ‘ரொய்ரரி’ன் செய்தியை மாற்றி வெளியிட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது, கிளர்ச்சிக்காரர்கள் என்று இருந்த இடங்களிலெல்லாம் பயங்கரவாதிகள் என்ற பதத்தை Lankaweb போட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, ரொய்ரரின் தலைமைப்பீடத்திற்கு அறிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்தகு நாசகார சர்வதேச நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு முடுக்கிவிட்டிருப்பதை சுட்டிக்காட்டும் அதேவேளை விடுதலைப் புலிகளின் செயல்பாடுகள் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல; விடுதலைப் போராட்ட நடவடிக்கைகள் என்பதற்கான ஆதாரங்கள் அடுத்த இதழில் முன்வைக்கப்படும். அமெரிக்கா உட்பட்ட உலக நாடுகள் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வதன் மூலமும், அவ்வியக்கத்தை அங்கீகரிப்பதன் மூலமுமே – சமாதானத் தீர்வைக் கொண்டுவர முடியும் என்ற விளக்கமும் தரப்படும். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகச் சுட்டிக்காட்டும் செயற்பாட்டில், விடுதலைப் புலிகள் போதை வஸ்துக் கடத்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பிரச்சாரப்படுத்தலும் சிறீலங்காவின் முக்கிய செயற்பாடாக விளங்குகிறது. கதிர்காமர் எங்கு சென்றாலும் இதனை மந்திரம் போல் திரும்பத் திரும்பச் சொல்வதைக் காண்கிறோம். இது பற்றி, கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், “சிறிலங்கா அரசாங்கம் எங்களின் ஆதரவைப் பெறுவதற்கு எல்லா வழிகளையும் கைக்கொள்கிறது. இதன்மூலம், சர்வதேச சமூகம், தனது இராணுவத்திற்கான ஆயுத தளபாடங்களை வழங்கும் என்றும் அது கருதுகிறது” என்று குறிப்பிட்டார்.

**— வளவன்**

“கதிர்காமத் தம்பிரானின்”
திருவோடு யாசகம்
உத்தமியை உரத்துப் பேசவைக்கிறது
கொழும்பில் தொங்கும்
“துரோக வௌவால்கள்”
சொன்னதைச் செய்யும் என்ற துணிவு
சந்திரிகைவை சண்டித்தனத்துக்குத்
தூண்டுகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சிறிலங்காவின் இராணுவத் தந்திரோபாயம் அரசியல் வெற்றியை நெருங்குமா?

சிறிலங்கா அரசபடைகளின் 'சத்ஜெய–3' இராணுவ நடவடிக்கையுடன் கிளிநொச்சி நகரை இராணுவம் கைப்பற்றிவிட்டதான செய்திகள் கிடைத்த ஓரிரு நாட்களுக்குள் பூநகரி முகாமினை படையினர் மூடிக்கொண்டனர் என்ற செய்தியும் கிடைத்து விட்டது. கிளிநொச்சி நகரின் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கு மேலதிகப் படையினர் தேவைப்பட்டதாலேயே முகாம் மூடப்பட்டதாக ஒரு தகவல் கூறியது. பூநகரி முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக முகாம் மூடப்பட்டதாக இன்னொரு தகவல் கூறியது. அது என்னவாக இருந்தாலும் முகாம் மூடப்பட்டு விட்டாயிற்று.

கிளிநொச்சி நோக்கிய படையெடுப்பினைச் செய்து கிளிநொச்சி நகரைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதில் மூன்று தடவைகள் பகீரத முயற்சி எடுத்துக் கொண்ட சிறிலங்காப்படையினர் – தம்வசம் ஏற்கனவே இருந்த பூநகரிமுகாமினை விட்டுத் தாமாகவே விலகிக் கொண்டனர் என்றால் – சிறிலங்கா ஆயுதப்படையினர் இராணுவத் தந்திரோபாயம் எப்படியானது என்ற கேள்வி எழவே செய்யும்.

சிறிலங்கா ஆயுதப்படையினரின் இராணுவத் தந்திரோபாயத்தில் எத்தகைய அம்சங்கள முக்கியம் பெறுகின்றன? சிங்கள் பௌத்த இனவாதம் தனது அரசியல் இராணுவ இலக்கினை அடைய எவ்வாறு முயற்சிக்கின்றது? அம் முயற்சியில் அது வெற்றியினைத் தழுவிக்கொள்ளுமா? போன்ற விடயங்களை சற்று சுருக்கமாக நோக்குவோம்.

சிறிலங்கா ஆயுதப்படையினரைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு இராணுவ இலக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவ் இராணுவ இலக்கு என்னவெனில் தமிழ் மக்களின் எதிர்ப்புச் சக்தியினை அடக்குதல் என்பதே அதுவாகும். இன்னும் தெளிவாகக் கூறப்போனால் சிங்கள பௌத்த இனவாதத்தின் மேலாதிக்கத்திற்கு எதிர்ப்பு எதுவும் வழங்காமல் 'கீழ்படிவுள்ள' குடிமக்களாக தமிழ் மக்கள் வாழும் ஒரு சூழலை ஏற்படுத்தலே இராணுவ தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ள இலக்காகும். இவ்விலக்கினை அடைத்து கொள்வதாயின், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் தேசிய இயக்கமான விடுதலைப்புலிகளுடன் இராணுவ ரீதியாக மோதவேண்டும்; அவ்வாறு மோதுவதன் மூலம் விடுதலைப்புலிகளை பலமிழக்கச் செய்ய வேண்டும்; அதனூடாக விடுதலைப் புலிகளை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வுத்திட்டத்திற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும். அதற்கு புலிகள் தயாராக இல்லாத பட்சத்தில் தாழ்நிலை யுத்தத்தினையே நடாத்தக் கூடிய சிறு குழுவாக மாற்றி விட வேண்டும். இதுவே சிறிலங்கா ஆயுதப் படையினரின் இராணுவ இலக்காக இருக்கின்றது.

இந்த இராணுவ இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சூரியக்கதிரிலிருந்து அண்மிய சத்ஜெய வரை சிறிலங்கா படையினர் தமது இலக்கினை அடைந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் சில தந்திரோபாயங்களின் அடிப்படையில் படையினர் தமது நடவடிக்கையினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அத் தந்திரோபாயங்களில் குறிப்பிடத் தக்கவை பின்வருமாறு.

### 1) நகர்ப்புறங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்

வடகிழக்குப் பகுதியின் முக்கியமான மக்கள் செறிந்து வாழும் நகரங்களையெல்லாம் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதில் இராணுவம் தீவிர கவனம் செலுத்துகிறது. இவ்வாறு நகர்ப்பகுதிகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அப்பகுதிகளில் வாழும் மக்களைத் தனது பிடிக்குள் வைத்திருக்க இராணுவம் முயல்கிறது. அவ்வாறு பிடிக்குள் வைத்திருப்பதன்மூலம், புலிகளுக்கு ஆட்பலம் அதிகரிக்கக்கூடிய நிலைமையைக் குறைப்பதற்கு மக்களைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி விடலாம் என்று இராணுவம் எண்ணுகின்றது. மேலும் நகர்ப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் வர்த்தக முயற்சிகள் மூலமும், வரி விதிப்பு மூலமும் பெறக்கூடிய பொருளாதார பலத்தினையும் இல்லாதொழித்து விடலாம் எனவும் திட்டமிடுகின்றது. இவ்வாறு ஆட்பல ரீதியான அதிகரிப்பிற்கு தடை விதிப்பதுவும் பொருளாதார பலத்தினை முடக்குவதும் விடுதலைப் புலிகள் ஒரு மரபு ரீதியான


'தவளைப் பாய்ச்சல்' – 1993

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படையணியாக வளராது தடுப்பதற்கு அவசியம் என இராணுவம் கருதுகிறது போலும்.

**2) யாழ் குடாநாட்டிற்கு தரை வழிப் பாதையினை அமைத்தல்**

யாழ்குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரைத் தேவையான விநியோகத்தினை தற்போது கடல், ஆகாய வழிமூலமே மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு விநியோகத்தினைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், செலவு போன்றவை தரை வழிப்பாதை ஒன்றிற்கான அவசியத்தினை இராணுவத்தினருக்கு ஏற்படுத்தியுள்ளது. தரைவழிப்பாதை ஒன்றினை அமைப்பது மட்டுமன்றி அதனைப் பராமரிப்பது குறித்த விடயங்கள் இராணுவத் தந்திரோபாயத்திலும் திட்டமிடலிலும் முக்கிய இடம் பெறுகின்றன.

**3) அழித்தொழிப்பு யுத்தம்**

பாரிய மரபுரீதியான சண்டைகளுக்கு விடுதலைப்புலிகளை இழுப்பதன் மூலம், விடுதலைப்புலிகளின் ஆட்பலத்தினையும் ஆயுத பலத்தினையும் இயன்றளவு அழித்தொழித்து விட வேண்டும் என்பதும் இராணுவத் தந்திரோபாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எனினும் 'சூரியக் கதிர்', 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைகளில் புலிகளின் போர் நடத்தை, அழித்தொழிப்பு நடவடிக்கை சாத்தியமாகப் போவதில்லை என்பதனை படையினருக்கு உணர்த்தியுள்ளது. இதனால், புலிகள் தம்மீது அழித்தொழிப்பு நடவடிக்கையினை (முல்லைத்தீவுத் தளம் தகர்ப்பு போன்ற) மேற்கொள்ளாது தடுப்பதற்கு மரபு ரீதியான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையினை புலிகளுக்கு உருவாக்குவதனையும் இராணுவம் தந்திரோபாயமாகக் கொண்டுள்ளது.

**4 தொடர்ச்சியான வெற்றியினைப் பெறுவதான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தல்**

சிங்களப்படையினர் தொடர்ச்சியான வெற்றியினைப் பெற்று வருகின்றனர் என்ற உளவியல் தாக்கத்தினை சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் இராணுவ வெற்றிகளின் அரசியல் பரிமாணத்திற்கு அவசியம் என இராணுவத் திட்ட வகுப்பாளர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக விடுதலைப்புலிகளால் மணலாற்றில் *5முகாம்களை நோக்கி, யூலை 1995–ல்* மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை, சூரியக்கதிர் *1, 2, 3* இராணுவ நடவடிக்கைகள் – போன்றவை சிறிலங்கா இராணுவம் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று வருவதான தோற்றத்தினை ஏற்படுத்தியது. இது விடுதலைப்புலிகளை படிப்படியாக இராணுவ ரீதியில் வென்று விடலாம் என்ற உளவியல் நம்பிக்கையினை பலர் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியது. ஆனால் முல்லைத்தீவுத்தளம். மீது விழுந்த அடி, இது படையினருக்கு பாதகமான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தியது.



இதன் ஊடாகப் பெற்றுக்கொண்ட பட்டறிவின் மூலம், விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப் படக் கூடிய சாத்தியக் கூறு உள்ள முகாம்களை மூடிவிடலாம், தாம் புலிகளிடம் பலத்த அடியினைப் பெற்றதான உளவியல் உணர்வு ஏற்படாது என இராணுவம் கருதலாம். இதன் வெளிப்பாடாகவே பூநகரிமுகாம் உட்பட மூன்று முகாம்கள் மூடப்பட்ட நிகழ்வினை நோக்க முடியும்.

இத்தகைய தந்திரோபாயங்கள் இராணுவ திட்டமிடலில் முக்கிய இடம் பெறினும், இராணுவத்திற்கு மிக முக்கியமான வரையறையாக இருப்பது ஆட்பலமே, போதிய ஆட்பலம் இன்றி தனது இராணுவ இலக்கினை நிறைவேற்ற முடியாமல் இராணுவம் திணறுகின்றது.

இருப்பினும் *1997–ம்* ஆண்டு டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் விடுதலைப்புலிகளை தாழ்நிலை யுத்தத்தினையே நடாத்தக் கூடியவர்களாக மாற்றிவிட வேண்டும் என சந்திரிகா இராணுவ தரப்பிற்கு கூறியுள்ளதாக தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு வலைப்பின்னலைப் பலவீனப்படுத்துவதில் தான் தீவிர கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்திருப்பதாகவும் உணர முடிகின்றது. *1997* டிசெம்பர் மாதம் அளவில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை தமிழ் மக்கள் மத்தியில் நிலைநிறுத்தக் கூடிய தீர்வுத் திட்டத்தினை திணித்து வருவதற்கும் சந்திரிகா திட்டமிடுவதாக அறிய முடிகின்றது. அண்மையில் *Frontline* சஞ்சிகைக்கு சந்திரிகா வழங்கியுள்ள செவ்வியில் *(october, 04,96* பக்கம் *– 5)* யுத்தத்தின் பெரும்பகுதி *1997* இறுதிக்குள், முடிவுக்கு வந்து விடும் என்று அவர் கூறியிருக்கும் விடயங்களை அவதானிக்கும் போது இவற்றை உய்த்துணர முடிகிறது.

எனவே, சிங்கள பௌத்த இனவாதம், தனது மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தக்கூடிய ஒரு தீர்வினை, விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் *1997–ஆம்* ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் தமிழ் மக்கள் மீது திணித்து விடுவதற்கு திட்டமிடுகின்றது என்பதனை நாம் கவனத்திற் கொள்ளலாம்.

ஆனால், சிங்கள பௌத்தத்தின் இந்தத் திட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதனை நிறுவுவதற்கு பெரிய ஆய்வு எதுவும் தேவைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




படப் போவதில்லை. சிறிலங்கா அரசால் இலகுவாகக் கையாளக்கூடிய நிலையினைத் தாண்டிய நிலையிலேயே தமிழீழ விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்துள்ளது. இந்த உக்கிரம், சிறிலங்கா அரசினை அரசியல், இராணுவ, பொருளாதார முனைகளில் தாக்கி வருகின்றது. இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் சுமுகமான நிர்வாகத்தினை படையினரால் நடாத்த முடியாதுள்ளது. விடுதலைப்புலிகளை தாழ்நிலை யுத்தத்தினையே நடாத்தக் கூடிய சிறு குழுவாக மாற்றுவதன் மூலமே, சிங்கள பௌத்த இனவாதம் தனது திட்டத்தினை நிறைவேற்ற திட்டமிடுவதிலிருந்து – அவ்வாறு மாற்றுதல் சாத்தியமில்லை; மாறாக மேலும் பலமிக்க தேசிய இயக்கமாகவும் பாரிய தமிழர் படையணியாக விடுதலைப்புலிகள் இயக்கம் பரிணமித்துள்ளதை நோக்கும் போது – இனவாதத்திற்கு தனது திட்டத்தினை நிறைவேற்றிக்கொள்ள அதியுத்தத்தினை நம்புவதனைத் தவிர வேறு வழி எதுவுமில்லை என்பது நிச்சயமானது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினை அழிப்பதற்கு சிங்கள பௌத்த மேலாதிக்கம் எடுத்து வரும் முயற்சிகளில் அது தழுவி வரும் தோல்விகளையே நாளைய வரலாறு சிங்கள தேசத்தின் தோல்விகளாகக் குறித்துக் கொள்ளப் போவது வரலாற்றின் போக்கில் தவிர்க்க முடியாததே.

**— திலீபன்**

[11.05.96]

# ஓர் அகதியின் கடிதம்

— சுபா

சூரியனின் கீழிருக்கின்ற அம்மாவிற்கும்,
அம்மாவெனும் அன்பின் நிழலாயிருக்கும்
அனைவர்க்கும்
பிறவித் துயரை எழுதுகிறேன்.

சிரிக்க முயன்றும் தோற்றுப் போகிற
யந்திர மனிதன் நான்
நால் போட்டு சுறா பிடிப்பவர்க்கிடையில்
அகப்பட்டதென்னவோ
தலைவிதிதான்

எத்தனை நாளைக்குத்தானம்மா
சவாரி மாடென நிற்பது
நுகத்தடி கண்டிய காயங்கள் கழுத்தில்
மாலை போல்

ஊர் நினைப்பும், உற்றார், உறவினர் பற்றிய
துடிப்பும்,
எப்போதாவது ஒரு நாள்
மண்ணுக்கு திரும்பி வருகிறதான
கனவும் நினைவும்
நிழலாய்த் தொடரும் இரட்டை வாழ்க்கை

குளத்துநீரில் தாமரை இலைபோல்
ஒட்டவும் முடியாது வெட்டவும் முடியாது
தவிக்கிற மனது

அம்மா நீ சொன்ன கதை போல
அறுந்து படப் போகும்
அவலத்தில் நின்று கொண்டும்
தேன்வதைக்கு ஆசைப்பட்டவனாய்.......

இருந்தும்
வாழ்க்கையைப்பற்றி
கனவுகள் புதிதாய்
துளிர்ப்பதென்னவோ ஆச்சரியம்தான்

அகதிகளாய் வந்தும்
நம்மவர்க்கியல்பாகி விட்ட
ஐரோப்பியக் கனவுகள்,

கானல் நீர் பருகிட ஓடும்
புள்ளிமானாக மாய்கின்ற துயரில்
நான் மட்டுமா?

அம்மா
உனக்கோ பயம் வேண்டாம்
நீயோ சூரியனுக்குக் கீழிருக்கிறாய்

சூரியனுக்குக் கீழே நாம்
சுதந்திரமாய் குதூகலிக்கும் நாள்
வராமலா போகும்?
கலங்காதிரு.

— அன்னையின் மகன்

AIR MAIL


தொலைந்த நாட்கள்,
அகதி முகம்
அந்நிய தேசம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ்க் குழுக்களுக்கு அரசு மீது அதிருப்தி ஏன்?

சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக கொழும்பில் இயங்கிவரும் தமிழ்க் குழுக்கள் அண்மைக் காலங்களில் சந்திரிகா தலைமையிலான பொது ஜன முன்னணி அரசு மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி போன்ற பௌத்த சிங்கள பெருந்தேசிய இனவாத அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு, அவர்கள் நடாத்திவரும் தமிழின் அழிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த இத் தமிழ்க் குழுக்கள் இப்போது அரசு மீது தமது அதிருப்தியை வெளியிட்டு வருவது ஏன் என்ற கேள்வியை எழுப்பினால், அது தமிழ் மக்கள் மீதான நலன்களின் அடிப்படையில் அல்லாமல் தமது சுய நலன்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ள உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.



சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருடன் துரோகக் குழுவினர்...

சிறீலங்கா இனவாத அரசுகளின் அடக்குமுறைக்கெதிராக சாத்வீக அணுகுமுறையிலான போராட்டங்கள் ஆயுதமுனை கொண்டு அரச பயங்கரவாதத்தால் அடக்கியொடுக்கப்பட்டபோது, தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதமயமாக்கப்பட்ட போராட்டமாக பரிணமிக்கத் தொடங்கியது. ஆயுதப் போராட்டம் முகிழ்த்த காலத்தில் ஏறத்தாள 31 இயக்கங்கள் தோன்றியிருந்தன. இவற்றில் பல இயக்கங்கள் காலப்போக்கில் காணாமற் போய்விட்டதுடன், தற்போது அநேகமானவற்றின் பெயர்களும் மக்களால் மறக்கடிக்கப்பட்டுவிட்டது. 'தமிழீழ விடுதலை' என்ற பொதுவான கோஷத்தின் அடிப்படையில் உருவான இவ் இயக்கங்கள் விடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவான ஒரு வரைமுறையான கொள்கைகளையும் – கருத்துக்களையும் – செயற்பாடுகளையும் – உறுதிகளையும் கொண்டிராத காரணத்தால் யதார்த்தமான நடைமுறை உலகினுள் தம்மைத்தாமே தொலைத்துக் கொண்டு விட்டன.

இவற்றில் சில இந்திய – சிறீலங்கா அரசுகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து போனதால், அவர்களால் விலை கொடுத்து வாங்கப்பட்டு அவர்களது வளர்ப்புப் பிராணிகளாக ஆகிவிட்டிருந்தனர். அடக்குமுறைக்கெதிராக போராடப் புறப்பட்ட இந்த இயக்கங்கள் அடக்குமுறையாளர்களின் அடிவருடிகளாய்ப் போய்விட்ட நிகழ்வானது, போராட்டம் பற்றிய தெளிவற்ற சிந்தனையின் அடிப்படையிலும் உறுதியற்ற தன்மையின் அடிப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படையிலும் நிகழ்ந்தது எனலாம். காலப்போக்கில் சிதைவடைந்து சின்னாபின்னமாகிப் போன இயக்கங்களை விட, அடக்குமுறையாளர்களுக்கு தோள் கொடுக்க முற்பட்ட இயக்கங்கள் பின்னர் துரோகக் குழுக்களாக மக்களால் வர்ணிக்கப்பட்டனர்.

சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக தமிழீழப் பிரதேசத்தை இந்திய இராணுவம் ஆக்கிரமித்த காலகட்டத்தில், இந்தியப்படைகளின் பயங்கரவாதச் செயற்பாட்டுக்கு ஆதரவாக இக் குழுக்கள் இயங்கிவந்தன. இவர்களின் பிரதான செயற்பாடாக தமிழீழ விடுதலையை நேசிக்கும் மக்களையும், தேச பக்தர்களையும், தமிழீழ விடுதலையை எக்காரணம் கொண்டும் யாருக்கும் விற்காத, விட்டுக்கொடுக்காத தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், உறுப்பினர்களைக் காட்டிக் கொடுத்தும், சுட்டுக்கொன்றும் தமிழின அழிவு நடவடிக்கைகளுக்கு தோள் கொடுத்துச் செயற்பட்டுக்கொண்டிருந்தனர். இந்நேரத்தில் இந்திய இராணுவத்தால் ஒரு புதிய குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. உதிரிகளான துரோகக் குழுக்களில் உள்ளவர்களை இணைத்து ஈ.என்.டி.எல்.எப். என்ற 'தமிழ் தேசிய இராணுவத்தை' உருவாக்கி தனது அடிவருடிகளாக செயற்பட வைத்தது. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்தியப் படைகள் நாடு திரும்பிய போது இத் துரோகக் குழுவும் அவர்களுடன் இந்தியா சென்று, வழிப்பறி, கொள்ளை, கொலை போன்றவற்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் இச்செயற்பாட்டை விடுதலைப் புலிகளின் செயற்பாடாக இந்தியப் பத்திரிகைகள் சில திரித்து செய்தி வெளியிட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் களங்கம் விளைவித்துக் கொண்டிருக்கின்றனர்.

மறுபுறத்தில் சிறீலங்கா அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட கோமாளித்தனமான போலித் தேர்தல்களில் பத்து பதினைந்து வாக்குகளை மட்டும் பெற்று சில தமிழ்க் குழுக்கள் பாராளுமன்றத்தில் பதவி நாற்காலிச் சுகத்திற்காக அடிமைப்பட்டுப் போனார்கள். சிறுபான்மை பலத்துடன் பதவிக்கு வந்த அரசுகளுக்கு இந்த தமிழ்க் குழுக்களின் பாராளுமன்றக் கதிரைகளே அவர்களது பதவிக் காலத்தையும், ஆயுட்காலத்தையும் நீடிப்பதற்கு உதவி புரிந்தன.

பாராளுமன்றத்தில் இத் தமிழ்க் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைத் தாமே கூறிக்கொண்டு, பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்த காலத்திலேயே, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைகளையும், அதியத்தியாவசியப் பொருட்களுக்கான தடைகளையும் அரசு கொண்டு வந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மக்களை இராணுவம் சித்திரவதை செய்துகொண்டிருந்தது. ஒரே நாளில் 5 இலட்சம் மக்கள் வீடற்றவர்களாக நிர்க்கதியாக இடம்பெயர்ந்தனர். இந்த ஐந்து இலட்சம் மக்கள் தாங்கொணா வேதனையிலும் அவலத்திலும் நொந்துபோய் இருந்த போதும் இக் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் வாயைத் திறக்காமல் மௌனமாகவே இருந்துகொண்டிருந்தனர். அந்த அவலமான இடப்பெயர்வின் போது, அம் மக்களின் துயரங்களில் எந்தவிதமான பங்கெடுப்பும் இல்லாமல் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டனர்.

இன்றும் தாண்டிக்குளத்தில் மக்கள் போக்குவரத்துக்குத் தடையாக படையினரை விட இவர்களே மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கொழும்பில் உள்ள தமிழ் மக்களுக்கு பல்வேறு வகையான நெருக்கடிகளை கொடுத்துக்கொண்டு உள்ளனர். இராணுவத்திற்கும், பொலிசாருக்கும் உதவியாக கைதுகள், சித்திரவதைகள், கொள்ளைகள், கொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் வேண்டுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர். வடக்கு கிழக்கிலும் மற்றும் தமிழ் மக்கள் வாழும் இராணுவப் பிரதேசங்களில் எல்லாம் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கும் அடாவடித்தனங்களுக்கும் இக் குழுக்களைச் சார்ந்தவர்களே முற்று முழுக்க துணையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இவர்களுக்கும் சோதனை தரும் முகமாக அண்மையில், திருகோணமலையில் உள்ள இவர்களின் அலுவலகங்கள் படையினரால் சோதனையிடப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் தற்போது, தமது அதிர்ச்சியையும் அச்சத்தையும் அரசிற்கு வெளிப்படுத்தியுள்ளனர். இதுவரை காலமும் எல்லோரையும் புலிகள் எனக் காட்டிக்கொடுத்து பிழைப்பு நடத்திக்



டக்ளஸ் தேவானந்தா

ஐந்து இலட்சம் மக்கள் தாங்கொணா வேதனையிலும் அவலத்திலும் நொந்துபோய் இருந்த போதும் இக் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் வாயைத் திறக்காமல் மௌனமாகவே இருந்து கொண்டிருந்தனர். அந்த அவலமான இடப்பெயர்வின் போது, அம் மக்களின் துயரங்களில் எந்தவிதமான பங்கெடுப்பும் இல்லாமல் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டனர்.

கொண்டிருந்த இவர்களையும் சிறீலங்கா அரசு முற்றாக நம்பவில்லை என்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தாலும் இவர்களது நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் அவதானித்து வருபவர்களுக்கு இது அதிர்ச்சி தரும் தகவல் அல்ல என்பதே உண்மை.

இதுவரை காலமும் அரசுக்கு ஆதரவாக அதன் அடிவருடிகளாக இயங்கி வந்த தம்மீதே – தம் எசமான விசுவாசத்தின் மீதே இந்த அரசு சந்தேகப்படுகின்றது என்ற உண்மையை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதுடன், தமிழ் மக்கள் இவர்களை எப்பொழுதோ மறந்து கைகழுவி விட்டு விட்டார்கள். அரசும் கைகழுவி விட்டால் தமது போக்கிடம் எது என்ற அச்சமே அவர்கள் மத்தியில் தற்போது தலை தூக்கியுள்ளது. அந்த ஏக்கத்தின் எதிர்காலம் பற்றிய அச்சத்தின் வெளிப்பாடே சிறீலங்கா அரசின் மீதான அதிருப்தி எனலாம்.

**— ஆதிரையன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பூநகரிப் பின்வாங்கல்

பூநகரிமுகாமில் இருந்து இரவோடிரவாக இராணுவத்தை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு விலக்கிக் கொண்டுள்ளது. ஒரு கேந்திர நிலையத்தில் அமைந்திருந்த இவ்விராணுவ முகாமில் இருந்து இரவோடு இரவாக விலகிக் கொண்டதற்கு பல மானதொரு காரணம் இருந்தாக வேண்டும். ஆனால் அது சிறிலங்கா இராணுவம் வெளிப்படையாகக் கூறும் காரணமாக இருக்க மாட்டாது என்பது மட்டுமே நிச்சயமாகும். பூநகரி இராணுவ முகாமை மூடுவது என்பது, சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சினால் தீவிரமான பரிசீலனைக்கு உள்ளாக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டதொரு விடயமாக இருக்க முடியாது. இராணுவ நோக்கில் அதன் இலாப நட்டங்கள் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டே இருக்கும். ஏனெனில் பூநகரி இராணுவ முகாமிற்கு அத்தனை கேந்திர முக்கியத்துவம் உண்டு. பூநகரி இராணுவ முகாமில் இருந்து விலகலானது ஒரு பகுதியில் மேலதிகமாக இருந்த படையினரை விலக்கிக் கொண்ட ஒரு நடவடிக்கை அல்ல. ஒரு கேந்திரப்பகுதியில் இருந்து படையினரை விலக்கிக் கொள்வது சம்பந்தப்பட்டதாகும். ஏனெனில் அங்கிருந்து படைகளை விலக்கிக் கொள்வதன் மூலம் வட தமிழீழத்தில் பெரும் நிலப்பரப்பு இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடுவது மட்டுமல்ல ஒரு பெரும் கடல்பரப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவத்தரப்பு, 'பூநகரி முகாமானது யாழ் குடாநாட்டின் முற்றுகைக்காகப் போடப்பட்டது, தற்பொழுது யாழ் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய நிலையில், முகாம் இருப்பது அவசியமில்லை' என்ற ரீதியிலான காரணத்தைப் பிரதானமானதாக முன்வைக்கும் என்பது வெளிப்படையானது. ஆனால் இது ஒரு பொருத்தப்பாடான காரணமாக இருக்காது. ஏனெனில், இம்முகாம் தேவையற்றதாயின் யாழ்குடாநாடு கைப்பற்றப்பட்டதும், சுமார் 6 மாதங்களுக்கு முன்னரே அரசு இதை விலக்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆகையினால் இம்முகாமின் தேவையானது அதற்குப் பின்னரும் இருந்தது என்பதே சரியானதாகும். யாழ் குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையை முற்றாக தரைவழிப்பாதை என்றும் கூறிவிடமுடியாது. இவ்விராணுவ முகாமிருந்தாலும் யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்தை அதனால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றே கூறலாம். இம்முகாம் அமைக்கப்பட்ட பின்னர், தரை வழிப்பாதையற்ற ரீதியிலும் கூட சுமார் 5 வருடங்கள் வரை யாழ்குடாநாட்டிற்கு போக்குவரத்து இடம்பெற்றுக் கொண்டே இருந்தது. இந்த நிலையில் யாழ் குடாநாட்டின் மீதான முற்றுகை என்பதில் அதன் பங்கு குறைவாகவே இருந்து வந்தது. ஆனால் அவ்விடத்தில் இராணுவம் நிலை கொண்டிருந்ததினால் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை தடைப்பட்டதோடு பெருநிலப்பரப்பின் மேற்குப் பகுதியில் தரைவழிப் போக்குவரத்துக்கும் பெரும் நெருக்கடி இருந்து வந்தது. மேலும் இம் முகாமின் செயற்பாடானது பெருநிலப்பரப்பின் மேற்குக் கடற்பரப்பினதும் யாழ் கடல் நீரேரியின் கண்காணிப்பிற்கும் மிகவும் முக்கியமானதாக இருந்தது.

அதிலும் குறிப்பாக யாழ் குடாநாடு இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் வந்ததன் பின்னர் இம்முகாமின் முதன்மை அதிகரித்துள்ளது என்றே கூறமுடியும். அதாவது புலிகள் பெருமளவு நிலை கொண்டுள்ள வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து கடல்வழியாக குடாநாட்டிற்குள் ஊடுருவதைக் கண்காணிக்கும் செயல்பாட்டில் அது ஈடுபட்டு வந்தது. இந்த நிலையிலும் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சானது பூநகரி இராணுவ முகாமை விலக்கிக் கொள்ள முடிவெடுத்தமையானது ஏற்கனவே கூறிய இராணுவ அனுகூலங்களை விட இங்கிருந்து மீளப் பெறப்படும் துருப்புகளினாலும் இன்று இருப்பதை விட அதிக பயன் பெறலாம் என்ற ரீதியில் இருக்கவேண்டும். அல்லது இம்முகாமை வைத்திருத்தல் ஆபத்தாக முடிந்து விடும் என்ற அச்சம் காரணமாக இருக்கவேண்டும். சிறிலங்கா இராணுவம் பெரும் ஆள் பற்றாக்குறையுடன் இருப்பதனால் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கும் புதிதாக ஆக்கிரமித்துள்ள இடங்களில் நிலைகொள்ள வைப்பதற்கும் பெருமளவிலான துருப்புக்கள் தேவைதான். ஆனால் அதற்காக கேந்திர நிலையில் இருந்து படைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளத் தீர்மானம் எடுத்திருக்க முடியாது. ஆகையினால் தனித்துப் போயிருக்கும் பூநகரி முகாமிற்கு முல்லைத்தீவு முகாமிற்கு ஏற்பட்ட ஒரு துயர் போன்று ஏற்பட்டு விடக்கூடாது என்பதே இம் முகாமை வாபஸ் வாங்க பிரதான காரணியாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது மேற்சொன்னது போல் வேறு காரணங்களினால் இம்முகாம் மூடப்பட்டிருக்குமேயானால் அது ஒரு முன் யோசனை அற்ற விடயமாகும்.

★★

### விழிகளில் நெருப்பினை மூட்டு

ஒருமுறை விழிகளில் நெருப்பினை மூட்டு
உலகத் திசைகளி லேமுகம் காட்டு
புலிகள் சேனையில் போய் நிமிர்ந்தாடு
புலரும் வேளைபூ பாளங்கள் பாடு.

கரும்புலி கடற்புலி பெரும்புலி ஆகி
களத்தில் எங்கணு மேநிலை ஆகி
பெருமை யோடவர் போவதைப் பாரு
பிரபா கரனெனும் வீரனைச் சேரு.

எதிரிகள் பாசறை எரித்திட வென்று
எழுந்து மேவர வேண்டுமே யின்று
விதியினை மாற்றிட புலியென ஆகு
விடுதலைக் கேயுயிர் கொடுத்துடல் வேகு

தலைவனின் வழியினில் அணிவகுத்த தாடு
தம்பி ஆனவனைத் தினம் பாடு
மலையென நிமிர்ந்தவன் புகழினைக் கூறு
மலரும் ஈழத்தில் காவடி ஆடு.

—புதுவை இரத்தினதுரை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஏன் புளித்தது?

இராணுவ நடவடிக்கைகளின் பிரதான நோக்கங்களில் ஒன்றும் முதன்மை ஆனதும் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதே ஆகும். இது சிறிலங்கா அரசின் கடந்த காலப் பிரச்சாரங்களில் பிரதானாமானது ஆகும். யாழ்நகர் கைப்பற்றப்பட்ட போது இப்பிரச்சாரத்துக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமானது விசேட தன்மை கொண்டது ஆகும். ஆனால் தற்பொழுது அரசாங்கம் இவ்வாறான பிரச்சாரத்தைக் கைவிட்டுவிட்டது மட்டுமல்ல இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்துக்குள் குறிப்பாக கிளிநொச்சிக்குள் வாழ்வதற்கென மக்கள் சென்றாலும் கூட அரசாங்கமோ அன்றி இராணுவ தரப்போ அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பது யதார்த்தமாக உள்ளது. இது குறித்து பத்திரிகை மாநாட்டில் பிரஸ்தாபித்த ராணுவப்பேச்சாளர் சரத் முனசிங்க ‘கிளிநொச்சி மீதான தாக்குதல் இராணுவ நோக்கத்தையே கொண்டிருந்தது. அங்கு மக்களை உடனடியாக வரவழைக்கத் திட்டம் எதுவும் இல்லை’ எனத் தெரிவித்திருந்தார். அவ்வாறானால் அரசாங்கத்தின் கடந்தகால நிலைப்பாடு ஏன்மாற்றம் கண்டது? இந்தப் பழம் புளிக்கும் என்ற முடிவை அரசாங்கம் என்று கற்றுக்கொண்டது? என்பது போன்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாது போகும். எனெனில் அரசாங்கம் இராணுவத் தீர்வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யக்கூடிய முக்கிய அம்சம் ஒன்றை இதன் மூலம் கைவிட்டு விட்டது என்பதினாலேயே ஆகும்.



யாழ்குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியபோது யாழ்ப்பாணத்தில் நிர்வாகம் நடத்துவதோ அன்றி அரசியல் நடத்துவதோ கடினமானதொன்




றாகவே இருக்கும் என சந்திரிகா அரசாங்கம் கருதவில்லை ஆகையினால் விரைவிலேயே நிர்வாகப் பணிகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் அதைத் தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கலாம் எனவும் அரசு கருதியது. அதற்கான நடவடிக்கைகளிலும் அது இறங்கியது. ஆனால் யாழ் குடாநாட்டில் அரசு நினைப்பது போன்று சிவில் நிர்வாகத்திற்கான ஒத்துழைப்பு தமிழ் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லை. இந்த நிலையிலேயே 10000 தொண்டர்களைக் கொண்ட சமாதானப்படை ஒன்றை அமைத்து யாழ் குடாநாட்டின் நிர்வாகப் பணிக்கென அனுப்ப அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால் அம் முயற்சி கூட இறுதியில் கைகூடவில்லை. இதை ஒத்த நிலையே அரசியலிலும் ஏற்பட்டது. வலிகாமத்திற்குள் இராணுவ நடவடிக்கை மூலம் மக்களைக் கொண்டு வந்த பின்னர் தனது அரசியல் பணியை விரிவாக்கலாம் எனவும், அரசியல் ஏகபோகத்தை நிறுவலாம் எனவும் சந்திரிகா அரசாங்கம் எண்ணியது. இதனால் தமது அரசியல் நடவடிக்கைகளை நிலை நிறுத்த முயன்ற தமிழ் குழுக்களைக் கூட யாழ் செல்ல அரசாங்கம் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்க முனைந்தது. மறுவளமாக வெண்தாமரை இயக்கம் என்ற பெயரில் யாழில் கிளையைத் திறந்து ஆழும் கட்சி அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அடிக்கடி யாழ்ப்பாணம் அனுப்பிவைத்து சிங்கள அரசியல்வாதிகளின் முகங்களை பரிசுத்தமாக்கும் முயற்சியில் இறங்கியது. ஆனால் அதுவும் அங்கு நீண்ட நாட்கள் நீடிக்கக்கூடிய அரசியல் இராணுவ சூழ்நிலை இருக்கவில்லை. இந்த வகையில் யாழ் குடாநாட்டில் மக்களை இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு தமது அரசின் நிர்வாகத்தை நடத்த மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்தே தற்பொழுது கிளிநொச்சி மீதான நடவடிக்கை இராணுவ நோக்கத்தை மட்டுமே கொண்டது என அரசு அறிவிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அதாவது இதுவரை எதற்காக இராணுவ நடவடிக்கை என்று அரசு கூறிக்கொண்டதோ அதைக் கைவிட்டு விட்டு அரசின் நோக்கத்திற்கான உண்மையான காரணத்தை கூறியுள்ளது. இதை சற்றுத் தெளிவாகக் கூறுவதானால் அரசு கிளிநொச்சி மக்களை அவர்கள் குடியிருப்பில் இருந்து விரட்டி விட்டு அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது என்பதை வெளிப்படையாகவே கூறிவிட்டது. ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அழிவை நோக்கிய பயணம்!



## பெரும் தோல்வியை நோக்கிய நிழல் வெற்றி

‘சத்ஜய’ இராணுவ நடவடிக்கை சிறிலங்காப் படையினரை கிளிநொச்சிவரை கொண்டு வந்து நிறுத்திவைத்துள்ளது. ஒரு ஆபத்தை எதிர்கொண்டபடி, மரணப் பொறிக்குள் தாங்களாகவே வந்து தரித்துள்ளனர் என்பது யாராலும் புரிந்து கொள்ளக்கூடிய வெளிப்படையான உண்மை. கிளிநொச்சியை ஆக்கிரமித்ததை தமது இராணுவ வெற்றியாக சிறிலங்கா கொண்டாடிக் கொண்டாலும், அவமானகரமான மோசமான தோல்வி ஒன்றிற்கு அருகிருந்து கொண்டு தான் இந்தக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக அமைகின்றது.

சத்ஜய ஒன்று, இரண்டுகளில் விடுதலைப்புலிகளிடம் பெற்ற செமத்தியான அடி, மூன்றாவது எடுப்பைப் பெரும் படை பலத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்ற படிப்பினையை சிங்களப் படைக்கு கொடுத்தது. மூன்றாவது நடவடிக்கை பரந்தனில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. சுமார் இருபதினாயிரம் இராணுவத்தினரைக் கொண்ட பெரும் படையணிகள், விமானப்படையின் உதவியுடன், டாங்கிகள் கவசவாகனங்களின் துணையுடன் இரு திசைகளில் முன்னேறியது. தென்மேற்காகவும் தென்கிழக்காகவும் இரு திசைகளில் தனது நகர்வை அமைத்துக்கொண்ட சிங்களப்படை, விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை எதிர்கொண்டது. இருவேறு சந்தர்ப்பங்களில் பெரும் அழிவை விளைவித்த இரு அதிரடித் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர். பெரும்பலத்துடன் சிங்களப்படையணி நகர்ந்த போதும், விடுதலைப்புலிகளின் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தது. பரந்தனில் இருந்து கிளிநொச்சியை சென்றடைய ஒன்பது நாட்களை எடுக்கவேண்டிய நிலைக்கு தளநிலைமை இருந்தது. இந்த நகர்வில், பெரும் இழப்பை சிங்களப்படை சந்தித்தது. தற்போது சிறிலங்காப் படையினர். கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ளனர். மக்களில்லாத, அழியுண்ட நிலப்பரப்பை ஆக்கிரமிக்க, குடாநாட்டில் அநேக பகுதியை கைவிட வேண்டிய நிலைக்கு சிறிலங்காப்படை



உள்ளானது. குடாநாட்டில் அதிக பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன. அதே வேளை, குடாநாட்டில் பல தாக்குதல்களை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். பிரயோசனமற்றமுறையில், தன்னை ஐதாக்கிப் பெரும் பிரதேசத்தில் பரவி, விரவி நிலைகொண்டுள்ள இராணுவம், தப்ப முடியாத பொறியில் சிக்கிக்கொண்டுள்ளது என்பதை மேலைத்தேச தூதரக வட்டாரங்களே சுட்டிக்காட்டுகின்றன. கொழும்பைச் சேர்ந்த பிரபலமான செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டது போல், இராணுவத்தை இறுக்கமான கோட்டைகளுக்குள் இருந்து வெளியே இழுத்து தாக்குவதற்கு இலகுவாக ஐதாக்குவது என்ற விடுதலைப் புலிகளின் நோக்கத்திற்கு வளம் சேர்க்கும் வகையிலேயே சந்திரிகா படையினரின் நகர்வுகள் அமைகின்றன என்பது தெளிவான உண்மையாகும்.

### பலன் என்ன?

கிளிநொச்சியை ஆக்கிரமித்துக் கொண்டதன் மூலம் சந்திரிகா படை எதைச் சாதித்துக் கொண்டது? இந்தக் கேள்வி தென்பகுதியில் பல மட்டங்களில் எழுப்பப்படுகின்ற போதும், சந்திரிகா அரசிடம் அதற்கான பதில் இல்லை. ஆனால் முல்லைத்தாக்குதல் மூலம் ஒரு மோசமான தாழ்ந்த நிலைக்கு சரிந்த சிங்களப் படையினரதும் சிங்களத்தீவிரவாதிகளினதும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மனோநிலையை பிடித்து நிறுத்த இந்த நடவடிக்கையின் உதவியை சந்திரிகா அரசு நாடியிருக்கக்கூடும். சந்திரிகா அரசு தெற்கில் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு ஒரு ஆறுதல் தேடவும் இதன் மூலம் செய்யப்பட்ட பிரச்சாரங்கள் உதவியிருக்கக்கூடும்.

## பூநகரி முகாம் மூடப்பட்டது ஏன்?

கிளிநொச்சியை இராணுவம் ஆக்கிரமித்த பின்னர், அதன் அடுத்த நகர்வு பூநகரி நோக்கியதாய் அமையும் என இராணுவ நோக்கர்கள் கருதினர். கிளிநொச்சியில் இருந்து பூநகரிவரை ஒரு இராணுவ வேலியை அமைப்பதன் மூலம் கிளாலிக்கடல் நீரேரிப்பாதையை விடுதலைப்புலிகள் பாவிக்க முடியாதவாறு ஒரு இறுக்கமான தடுப்பை இராணுவம் இடும் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். இதன்மூலம் குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தலாம் என இராணுவம் கருதுவதாகவும் கூறினர். கிளிநொச்சி பூநகரி ஆனையிறவு என்ற திரிகோண வடிவத்திலும் மறுபுறத்தே ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்ற திரிகோண அடிப்படையிலும் அதன் ஆக்கிரமிப்பை விஸ்தரிக்க சிங்களப் படை திட்டம் வகுத்திருந்ததாக சொல்லப்பட்டது. ஆனால், ஏற்கனவே முல்லைப்படைத்தளம் ஓயாதஅலைகளால் மூழ்கடிக்கப்பட்டதால் முல்லை நோக்கிய நகர்வு சாத்தியமில்லாமல் போய்விட்டதாகவும், ஆனால் பூநகரி முகாமைத் தொடுத்து ஒரு இராணுவ வேலி அமைப்பதே இராணுவத்தின் அடுத்த குறி என, விசயம் தெரிந்த இராணுவ ஆய்வாளர்களெல்லாம் சுட்டிக்காட்டினர். ஆனால் முடிவுகள் வேறாய் அமைந்துள்ளன, இதற்குக் காரணம் என்ன? தமது அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு ஏதுவாக பூநகரி முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் எடுக்கப்பட்டனர் என, இராணுவ தரப்பில் கூறப்படும் காரணம் எடுபடுவதாய் இல்லை.



ஆக்கிரமித்த கிளிநொச்சியை பலப்படுத்த, பூநகரி இராணுவத்தினர் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி விடுதலைப்புலிகளால் எக்கணமும் தாக்கப்படும் என்னும் ஆபத்தை உணர்ந்ததாலேயே இந்த நடவடிக்கை என ஒரு சாரார் சொல்லுகின்றனர். எனினும், முல்லை போன்ற பெரும் தாக்குதலை எதிர்கொள்ளும் இலக்காக பூநகரி கருதப்பட்டதாலும் இந்த அவசர முடிவு எனச் சொல்லப்படுகின்றது. எது எப்படியிருப்பினும், குடாநாட்டை ஆக்கிரமிக்க, கிழக்கின் பெரும்பகுதியை இழந்த சிறிலங்காப் படையினர், தற்போது கிளிநொச்சி வரை விரவி, தம்மிடையே பலவீனங்களை விட்டுச் சென்றுள்ளனர். குடாநாட்டில் விடுதலைப்புலிகள் சுயாதீனமாக நடமாடும் அளவிற்கு சிங்களப் படையின் பூரணகட்டுப்பாடு நிலவுகின்றது. கரந்தடிப்போர் முறையில் உலகம் வியக்கின்ற வகையில் வல்லமை பெற்றவர்களான விடுதலைப் புலிகளின் நிலப்பகுதியில் சிங்களப் படை நிலைகொண்டுள்ளதென்பதை எதிர்காலம் குறித்த விளைவுகளுக்கு விடையாக அமையும்.

## பூநகரிமுகாமும் சமாதானப் பேச்சுவார்த்தையும்

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற அமைதிப் பாதையில் துருத்திக் கொண்டுநின்ற முரண்பாடுகளில் இந்தப் பூநகரிமுகாமும் ஒன்று. மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழியேற்படுத்த பூநகரிமுகாம் அகற்றப்படவேண்டும் என்று விடுதலைப்புலிகள் வலியுறுத்தினர். இந்த முகாமை அகற்றுவதோ அன்றி சற்று தூரத்திற்கு நகர்த்துவதோ பாதுகாப்புப் படையினருக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறி சிறிலங்கா அரசு இது விடயத்தில் முரண்பட்டு நின்றது. பேச்சுவார்த்தை ஒன்றின் முடிவுக்கும், உக்கிரமான போர் ஒன்றின் தொடக்கத்திற்கும் காரணமானவைகளில் ஒன்றாக இருந்த இந்த பூநகரிமுகாம் தற்போது மூடப்பட்டுள்ளது. அரசு கூறுவதுபோல் அதன் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு ஏதுவாக பூநகரிமுகாம் இராணுவத்தினர் எடுக்கப்பட்டனர் என எடுத்துக் கொண்டால், அதன் இராணுவ ஆக்கிரமிப்பு வாதம் நன்கு புரிகிறதல்லவா. ஒரு சமாதான தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் போது மக்களின் நலனோடு சம்பந்தப்பட்ட முகாம் அகற்றல் என்ற விடயத்தை முரட்டுப்பிடிவாதத்துடன் மறுதலித்த சந்திரிகா அரசு, ஒரு யுத்த விஸ்தரிப்பிற்கு அந்த முகாமை மூடியதாக சுய வாக்குமூலம் தருகின்றது.

- சுப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முகிழ்த்து நிற்கும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வானத்தில் தொடர்ச்சியாகப் பறந்துகொண்டிருந்த சுப்பர் சொனிக், கிபீர், புக்காரா குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் ஒரு புறமும், மண்கிண்டிமலை இராணுவ முகாமில் இருந்து விட்டுவிட்டு ஏவப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஆட்லறி எறிகணைகள் ஒரு புறமுமாக அந்தச் சின்னஞ்சிறிய நகரம் ஒரு யுத்தகளமாகவே இருந்தது.

இடையிடையே முகாம் பகுதியிலும் கிறனேற் வெடிகுண்டுகளின் சத்தமும் துப்பாக்கிக் குண்டுகளின் சத்தமும் கேட்ட வண்ணமாகவே இருந்தன. முகாம் தகர்ப்பின் போது தப்பி ஓடிய சிப்பாய்களைஆங்காங்கே பரந்துள்ள கட்டிடங்களுக்குள்ளும், பற்றைக் காடுகளுக்குள்ளும் ஒழிந்திருந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர், டிப்போவுக்கு அருகில் இருந்த பழைய இராணுவ முகாம் பகுதிக்குள்ளும், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக் கட்டிடத்திற்குள்ளும் ஓடிப்போய் ஒளிந்துகொண்டிருப்பதாகக் கூறிய ஒரு போராளி.

"இன்று இரவுக்குள்ளை அவங்கள் எல்லோரையும் பிடிச்சுப்போடுவம்..." என்று சிரித்துக்கொண்டே கூறியபடி தனது றைபிளைத் தூக்கி தோளில் மாட்டிக்கொண்டு போனான்.

ஏ.கே.எல்.எம்.ஜீ. இலாவகமாகத் தூக்கித் தோளில் மாட்டியபடி மேற்குத் திசையை நோக்கி நடந்த அந்தப் போராளியின் உறுதியையும், தன்னம்பிக்கையையும் பார்த்துக் கொண்டிருந்தவர்களினது மனதிலும் ஒரு உறுதி பிறந்தது.

அந்தப் போராளிக்கு சுமார் 20 வயதுதான் இருக்கும். மட்டக்களப்பைச் சேர்ந்தவர். 1994ம் ஆண்டு சிங்கள இராணுவத்தின் கொடூரச் செயலினால் தனது தாயையும் தந்தையையும் பறிகொடுத்துக் காட்டுப்பாதையூடாக தப்பி வன்னி மண்ணுக்கு வந்து



போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டவன். தனது சொந்த மண்ணில் இருந்து ஆதிக்க வெறியர்களை விரட்டிச் சுதந்திரமாக நடமாடவேண்டும் என்ற இலட்சிய தாகத்துடன் அவன் இன்று ஒரு போராளியாக அந்த முல்லை மண்ணில் உலாவருகின்றான்.

ஒரு இலட்சியத்துக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள் தாம் கொண்ட இலட்சியத்தை அடையும் வரை ஓயப்போவதுமில்லை, மரணத்திற்கும் அஞ்சுவதில்லை என்பதை அவனது போக்கு எடுத்துக்காட்டியது.

அன்று காலையில் இருந்தே போராளிகளுடன் இணைந்து தோளோடு தோள் கொடுத்து இயங்கிக்கொண்டிருந்த அந்த மக்களின் மனதிலே பிறந்த

**வல்வை ஆனந்தன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# முல்லைத்தீவு



உற்சாகம், ஒரு புதிய தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான அத்திவாரமாக இருந்தது.

அன்றைய ஆனந்தக் களிப்பில் தன்னையும் அர்ப்பணித்து வானத்தில் வலம் வந்து ஒளிவீசிக்கொண்டிருந்த சூரியனும் மெல்ல மெல்ல மேற்கு வானினுள் பிரிய மனமின்றி மறையத் தொடங்கிய நேரம்...

"நல்லாக் களைச்சுப் போனியள்.... இண்டைக்கு நீங்கள் செய்த இந்தப் பணி எங்கடை போராட்டத்திலை ஒரு திருப்பு முனையாகத்தான் இருக்கப் போகுது.... எங்கடை போராளிகளுக்கும் ஒரு உற்சாகத்தையும் தாங்கள் கைவிடப்பட்டவர்கள் அல்ல என்ற உணர்வையும் ஏற்படுத்தி விட்டியள்".

யுத்த முனையில் ஒரு பிரிவுப் போராட்ட அணியின் கட்டளைத் தலைவனாக நின்று வழிநடத்திக் கொண்டிருந்த ஒரு போராளி அங்கே நின்ற அந்த மக்கள் கூட்டத்தை நோக்கி வந்தார்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து அந்நியப்படுத்தி தாம் எந்தத் தீர்வையும் திணித்து தமிழர் தாயகத்தையும், தமிழர்களையும் அடிமை கொண்டுவிடலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்த சிங்களப் பேரினவாதத்திற்கு அங்கே முனைப்போடு நின்ற ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பங்களிப்பு மரண அடி கொடுத்தது போல் இருந்தது.

"தம்பிமாரே!.... இந்த ஸ்டோரில இருக்கிற உங்களுக்கு விருப்பமான எதையாவது எடுத்துச்சாப்பிடுங்கோ.. ஆனால், அங்கே இருக்கிற சாராயம், பியர் ரின்கள், வைன் ரின்கள், சிகரட் பக்கட்டுக்களைத் தொடாதீங்கோ..."

அந்தப் போர்க்கள நெருக்கடியிலும், வெற்றிக்களிப்பிலும் கூடத் தனது இனம் தவறான வழிக்கு இழுத்துச் செல்லப்படக்கூடாது என்பதில், மிகவும் நிதானத்துடன் இருந்த அந்தப் போராளியை அங்கே நின்ற இளைஞர்கள் வியப்புடன் பார்த்தார்கள்! அந்தப் போராளி அங்கே நின்ற இளைஞர்களையும் கூட்டிக்கொண்டு தபால் கந்தோர் கட்டிடத்திற்குள் போனார்.

பெருமளவு உணவுப் பொருட்களை ஏற்றி முடித்தும் கூட இன்னும் பெருமளவு அங்கே குவிந்திருந்தது. அந்த அறையினுள் சென்றதும் அவரவர் தமக்கு விருப்பமான உணவுப் பொருட்களை எடுத்துச் சாப்பிட்டார்கள். சிலர் அங்கே வந்ததன் நினைவுச் சின்னமாக, சீஸ்ரின், இறைச்சி ரின், கண்டோஸ் பக்கற் போன்றவற்றுள் சிலவற்றை எடுத்து தமது காற்சட்டைப் பைகளுக்குள் போட்டுக்கொண்டனர்.

அவர்களது செய்கைகளை தள்ளி நின்று பார்த்துக்கொண்டு நின்ற போராளிகளுக்கு சிரிப்புத்தான் வந்தது.... அவர்கள் முன்னால் பிளாஸ்ரிக் வாளிகளில் பிரியாணிப் பார்சல்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

அவற்றிலிருந்து "கமகம" என்று இறைச்சி வாசனை மூக்கைத் துளைத்துக்கொண்டிருந்தது. முல்லைத்தீவுச் சந்தியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த வட்ட வடிவ குரோட்டன் மேடையருகில் அவற்றை வைத்து விட்டு ஏனைய போராளிகளையும் கூவி அழைத்தனர். எவருமே அந்தப் பிரியாணிப் பார்சல்களை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. அந்தளவிற்கு அந்தக் கட்டிடங்களுக்குள்ளும் பற்றைகளுக்குள்ளும் ஓடி ஒளிந்திருந்த நூற்றுக்கணக்கான சிங்களப் படையினைத் தேடி அலைவதில்தான் உற்சாகமாக இருந்தார்கள்.

மெல்ல மெல்ல இருள் கவியத் தொடங்கியதும், அந்த மக்களை அழைத்து வந்த போராளிகள் அவர்களை நோக்கி வந்து, அண்ணை.... இருட்டுப்பட்டுக் கொண்டு வந்திட்டுது... உங்களுக்கான ரக்ரர்கள் ரெடியாய் இருக்கு. ஏறுங்கோ என்று கூறியதும் சற்றுத் தள்ளி நிப்பாட்டப்பட்டு நின்ற ரக்ரர்களில் ஏறத்தொடங்கிவிட்டனர்.

இருளும் நேரத்தில் அங்கே இவ்வளவு பெருந்தொகையான பொதுமக்களை வைத்திருப்பது ஆபத்தானது என்று அவர்கள் எண்ணியிருக்க வேண்டும்... விரைவாக அவர்களை அழைத்து வந்த பாதை வழியே கூட்டிச்சென்றார்கள்.

ஆறு வருடங்கள் மக்களை இழந்து வாடி வதங்கிய... முல்லை மண்



'ஓயாத அலைகள்'

போரெனில் உள்ளம் பூரித்து புயலென வீசிய புலி வீரர்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்று புத்துயிர் பெற்றது போல் பூரித்திருந்தது.

நீண்ட காவலரண் சுவர்கள் முள்ளுக்கம்பிகளையும் கடந்து அவர்களை ஏற்றிய ரக்ரர்கள் கடற்கரை வழியாக நந்திக்கடல் வரை சென்றது. அங்கிருந்து ரக்ரர்களில் இருந்து இறங்கி நந்திக்கடலைக் கடந்து நடந்து சென்றவர்களை ஏற்றிச்செல்வதற்காக வெட்டுவாய்க்கால் பாலத்திற்கு அப்பால் சுமார் 20 பஸ் வண்டிகள் ஆயத்தமாக இருந்தன....

பஸ் வண்டிகளில் ஏறியிருந்த ஒவ்வொருவர் மனதிலும் உற்சாகமும், குதூகலமும் இருந்தாலும் அந்த வளம் கொழிக்கும் முல்லை நகரை விட்டு விட்டு வெளியேறிக்கொண்டிருப்பது ஏதோ ஒரு இனம் புரியாத கவலையைக் கொடுத்திருக்க வேண்டும். எவருமே ஒருவரோடு ஒருவர் எதுவும் பேசிக்கொள்ளவில்லை....

அந்தச் சுமை நிறைந்த உள்ளங்களை ஏற்றியபடி ஒன்றின் பின் ஒன்றாக அந்த பஸ்வண்டிகள் புதுக்குடியிருப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தன.

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் – நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்"

அந்த வண்டித் தொடரில் முதலாவதாக விரைந்துகொண்டிருந்த பஸ் வண்டியில் பூட்டப்பட்டிருந்த வானொலிப் பெட்டியிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்த தேனிசை செல்லப்பாவின் வெண்கலக் குரலிலான அந்தப் புகழ்பெற்ற பாடல் காற்றினூடாகப் பரவி முல்லைவரை விரைந்து சென்று கொண்டிருந்தது.



முல்லைத்தீவு இராணுவத்தளம் கைப்பற்றப்பட்டதும், 18ம் திகதி 1ம் நாள் போரிலே பெருந்தொகை இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் அங்கிருந்து பலவகை பெருந்தொகையான நவீன கனரக புத்தம் புதிய ஆயுதங்கள், கவசவாகனங்கள், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டதும் கனவு போல் இருந்தது. இது தொடர்பாக உண்மையை அறிவதற்காக அன்று பதினெட்டாம் திகதி இரவு இலங்கை வானொலியில் செய்தியறிக்கையைக் கேட்டவர்கள் மலைத்துப்போய் இருந்தார்கள். "வடபகுதியில் முல்லைத்தீவு முகாம் மீது இன்று அதிகாலை தெற்குப் புறமாகவும் கிழக்குப் புறமாகவும் இருந்து எல்.ரி.ரியினர் புதிய ரக ஆயுதங்களைக் கொண்டு தாக்க எடுத்த முயற்சி படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. இப்பொழுது இராணுவ முகாம் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் எல்.ரி.ரியினரை தேடி அழிப்பது தொடர்பாகவும் பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது." இவ்வாறு இலங்கை வானொலியில் செய்தியறிக்கையில் குறிப்பிட்ட போது அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. எனவே புதுக்குடியிருப்பிலிருந்தும் அயலிலிருந்தும் பெருந்தொகையான பொதுமக்கள் புலிகள் கைப்பற்றிய இராணுவ முகாமுக்குள் போய் ஆயுதப் பெட்டிகளையும் உணவுப் பொருட்களையும் எடுத்துக்கொடுத்துவிட்டு வந்ததாகக் கூறி ஒருவர் தான் போனதற்கு அடையாளமாக ஒரு சிறிய ரின்னை எடுத்துக்காட்டி அங்கு நடந்த சம்பவத்தை விபரித்து 5 நிமிடம் கூட ஆகவில்லை, அதற்குள் இலங்கை வானொலி இப்படிக் கூறியது அங்கிருந்தவர்களுக்கு பெரிய குழப்பமாய் போய்விட்டது. இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்து இருந்தபோதும் இப்படியான உண்மைக்குப் புறம்பான செய்திகளைத் திரித்துக்கூறி மக்களையும் உலகத்தையும் குழப்பி வந்தனர். அன்று மூடி மறைத்த உண்மைகளெல்லாம் பின்னர் வெளிவந்த போது இந்தியா தனது முகத்தில் தானே கரியைப் பூசிக்கொண்டது. சிறீலங்காவில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் செய்தித் தணிக்கையை கடுமையாக அமுல்படுத்தி தமிழீழப் பகுதிகளில் மேற்கொண்டு வருகின்ற இனப்படுகொலைகளையும் கொடூரங்களையும் உலகின் ஊனக் கண்களில் இருந்து மறைத்து வருகின்ற கொடுமை உலகில் வேறு எந்த ஜனநாயக நாட்டில்தான் இருக்க முடியும். சிறீலங்காவில் எதேச்சாதிகாரமான அடிப்படை மனித உரிமைகளையும் மீறல்களையும் போக்கிரித்தனத்தையும் கண்டித்து சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் அதன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பேசுகையில் "முல்லைத்தீவு இராணுவ முகாமில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுவிட்டனர். எவ்வளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்பதை அரசு இன்னமும் வெளியிடவில்லை. பெருந்தொகையான ஆயுத தளபாடங்களை வாங்கி வைத்தும் சக்தி வாய்ந்த முப்படைகளையும் வென்றுவிட விடுதலைப் புலிகளால் முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. புலிகள் மாபெரும் சக்தி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது தவிர்க்கப்பட முடியாததாகி விட்டது. புலிகள் பயங்கரவாதிகள் அல்ல. இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசு பத்திரிகைத் தணிக்கையை வைத்துக்கொண்டு உண்மையினை மறைப்பது அப்பட்டமாகத் தெரிகிறது. பத்திரிகையை சுதந்திரமாக எழுத விடுங்கள். அவற்றின் பணி விமர்சனம் செய்வதுதான். எந்தவிதமான கசப்பான செய்திகளையும் உண்மைகளையும் நாம் சந்திக்கத் தயாராகவே உள்ளோம்." என்று குறிப்பிட்டது அரசின் கபடத்தனத்தை வெளிக்காட்டுவதுடன் சிங்கள அரசின் தலைவர்கள் போராட்டத்தை உணர்ந்து வருவதையும் வெளிக்காட்டுவதாகவும் இருந்தது. உள்ளூர் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டுள்ள சிறீலங்கா அரசு முல்லைத்தீவு சமரின் உண்மைகளை எழுதிய வெளிநாட்டுப் பத்திரிகைகளைக் கூட இலங்கையில் விற்பனையாக விடாது தடுத்ததை இந்த அரசின் மீது உலக நாடுகள் வைத்திருந்த நம்பிக்கையை சிதறடித்துள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


‘ஓயாத அலைகள்’ ஆரம்பித்து இரண்டாவது நாளன்று வன்னி பெரு நிலப் பரப்பில் ஒரே பரபரப்பும் பதட்டமுமாகவே இருந்தது. பரவலாக எல்லா இடமும் விமானக் குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் மிக மோசமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அன்றுகூட ஆனையிறவு முகாமிலிருந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட ஆட்லறி எறிகணைகள் கிளிநொச்சி வைத்தியசாலை, செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை, பாடசாலைகள் போன்ற மனிதர் நடமாடும் பகுதிகளில் விழுந்து வெடித்ததில் பலர் படுகாயமடைந்ததுடன் ஆறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உடல் சிதறிக் கொல்லப்பட்டனர். முல்லைத்தீவு இராணுவ முகாமில் அரச படையினருக்குள் ஏற்பட்ட படுதோல்விகளை சீரணிக்க முடியாது சிங்களப் பேரினவாதிகள் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் வைத்தியசாலைகள் மீதும் குண்டு வீசி அப்பாவிப் பொதுமக்களை கொன்று பழிதீர்த்துக்கொள்ள முனைகிறது.

அன்று காலை எட்டு மணிக்கு மல்லாவியைச் சேர்ந்த ஒரு அதிபரின் மோட்டார் சைக்கிளில் முல்லைத்தீவு போவதற்குத் தயாரானோம். எங்களுடன் கல்வி உயர் அதிகாரி ஒருவரும் புறப்படத் தயாரானார். முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களக் கட்டடம் எப்படியிருந்தது என்று பார்த்தோம். அங்கு எவ்வளவு இலட்சக்கணக்கான கல்வி உபகரணங்கள், தளபாடங்கள் எல்லாம் இருந்திருக்கும். அந்தப் பிராந்தியத்தில் சிதைந்துபோன கல்வியையும், கல்வி அபிவிருத்தியையும் கட்டி எழுப்பவேண்டும் என்ற ஆவல் அவரை அங்கு போவதற்குத் தூண்டியது. நாங்கள் மூவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் ஏறி முகாம் பகுதியை அடைந்து விட்டோம். வெட்டுவாய்க்கால் பாலத்தில் ஒரு சில அடி தூரத்தில் அங்கே காவலரண் அமைத்து இருந்த ஒரு போராளியால் தடுத்து நிறுத்தப்பட்டோம். “ஐயா குறைநினைக்காதீர்கள். நாங்கள் இன்று ஒருவரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. உங்ளையும் போக விடேலாது” அந்தக் காவலரணுக்குப் பொறுப்பாக இருந்த அந்தப் போராளி சிறிது கடுமையாகவே கூறிக்கொண்டிருந்தார். எங்களுடைய மோட்டார் வாகனத்திற்குப் பின்னால் வந்து கொண்டிருந்த போராளிகளைக் கூட திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தனர். “முகாம் தாக்குதல் நடந்த பின் இர



‘ஓயாத அலைகள்’ பூநகரியில் கைப்பற்றப்பட்ட ‘டாங்கி’ எதிரியின் ஆயுதம் எதிரியை நோக்கி

வோடிரவாக தப்பி ஓடிய சில ஆமிக்காரங்கள் பற்றைக்காட்டுக்குள்ளும் வீடுகளுக்குள்ளும் ஒளித்திருந்து ரவுண்ஸ் அடிக்கிறார்கள். அதுதான் நாங்கள் யாரையும் உள்ளே போகவிடவில்லை. அவங்களைத் தேடிப் பிடித்து அழிக்கிற வேலை தொடர்கிறது”. அங்கேயிருந்த இன்னுமொரு போராளி கூறியதும் நிலைமையைப் புரிந்துகொண்டோம். அந்த இடத்தில் நிற்கும் பொழுது அந்தப் பகுதியெங்கும் எறிகணைத் தாக்குதலும் விமானக்குண்டு வீச்சுமாக ஒரே இரைச்சலாக இருந்தது. அந்தக் காவலரணின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மினி வானில் வாகனத்தில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களை இன்னொரு லொறிக்கு அங்கிருந்த போராளிகள் மாற்றிக் கொண்டிருந்தனர். டொங்கான், மோட்டார்கள், ஏ.கே. ரைபிள்கள் என்று பலவகையான ஆயுதங்கள் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன. போரின் போது இறந்த இராணுவத்திரின் ஆயுதங்கள்தான் அவை என்று அங்கிருந்த ஒருவர் கூறிக் கொண்டிருந்தார்.

போர் ஓய்ந்தபாடில்லை. முல்லைத்தீவு மாவட்டம் எங்கும் ஒரே ஷெல்களும், விமானங்களின் இடியோசைகளும் அதிரவைத்துக் கொண்டிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் முகாம் கைப்பற்றப்பட்டு அங்கிருந்து தப்பியோடிய எஞ்சிய படையினரை மீட்கவும் இழந்து போன முகாமை மீண்டும் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. களத்தில் காயமுற்ற படையினரை மீட்க முடியாது திண்டாடும் படையினருக்கு அந்த முகாமின் நிலை அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். மேலும் பெருந்தொகையான படையினரை முகாமுக்குள் அனுப்பிவிட்டால் புலிகளை நிலைகுலையச் செய்து முகாமைத் தமது பிடிக்குள் கொண்டுவந்து விட முடியும் என்ற ஒரு வரட்டுத் துணிவினால் முல்லைத்தீவிலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் தொலைவிலேயே உள்ள சிலாவத்துறையில் இரண்டு ஹெலிகொப்டர்கள் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் தரையிறக்கப்பட்டனர். அதேவேளை அலம்பில் பகுதியிலும் நூற்றுக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் திடீரென தரையிறக்கப்பட்டனர். இரண்டாவது நாள் முற்றுகையின் போது, உலங்கு வானூர்திகளினால் தரையிறக்கப்பட்ட கொமாண்டோப் பிரிவினர் மீது போராளிகள் மிக உக்கிரமாக தாக்குதல் மேற்கொண்டதும் அந்தப் படையணிக்குப் பொறுப்பான படைத் தளபதி லெப். கேணல் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 40–க்கும் மேற்பட்ட இராணுவக் கொமாண்டோக்களும் அழிக்கப்பட்டனர். தளபதியை இழந்துவிட்ட அந்தப் படையணி நாலாபக்கமும் சிதறியோடத் தொடங்கியது. போராளிகள் இல்லாத ஒரு இடத்தில் இரகசியமாக படைகளை இறக்கி முகாம் நோக்கி நகர்வைத் தொடங்க இருந்தவர்களுக்கு திடீரென

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



'ஓயாத அலைகள்' வீரத் தளபதிகள் – உதயத்தின் சிற்பிகள்

நாலா புறத்திலும் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பேரதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. அந்தப் பகுதியில் மட்டும் பொறிக்குள் அகப்பட்ட நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் போராளிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டனர். கடற்படையின் பாரிய போர்க்கப்பலும் பெருமளவுக்கு துருப்புக்களைக் காவியிறக்கும் 'லான்டிங் கிறாஃப்ற்' என்னும் கப்பலும் 'டோரா' அதிவேகக் கப்பல்களுமாக சுமார் 20க்கும் மேற்பட்ட கடற்படைக் கலன்கள், பாரிய ஆயுதங்கள் சகிதம் 6 உலங்குவானூர்திகள் 50 கலிபர் துப்பாக்கிகளினால் வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டிருக்கையில் படையினரைத் தரையிறக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கே கடலில் காத்து நின்ற கடற்புலியினருக்கும் சிறீலங்காப் படையினருக்கும் இடையே நேருக்கு நேரான கடும் கடற் சமர் நடைபெற்றது.

இரண்டு பக்கங்களிலும் இருந்து எழுந்த வெடியோசைகள் வானமே இடிந்து விழுவது போல் அதிர்ந்து கொண்டிருந்தன. அந்த அளவிற்கு இரண்டு பக்கங்களிலிருந்தும் அதிநவீன ஆயுதப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நேரம் வெடிமருந்து ஏற்றிய கடற் கரும்புலிகளின் மூன்று படகுகள் கடற்படைக் கப்பல்களின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும், உக்கிரமான தாக்குதல்களை நிகழ்த்திக்கொண்டிருந்த அதிவேகப் போர்க் கப்பலான பாரிய சீன சங்காய் 3 ரகத்தைச் சேர்ந்த 'ரணவிரு' கப்பலின் மோதி வெடித்துச் சிதறின. அந்தப் பாரிய போர்க்கப்பல் தீப்பிழம்பென வெடித்து மூழ்கத்தொடங்கியது. அதிலிருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட படையினரும் அப்படியே கடலில் மூழ்கி தம்மை சங்கமித்துக்கொண்டிருந்தனர்.

அளம்பிலில் தரையிறங்கி முன்னேற முடியாமல் தவித்துக்கொண்டிருந்த படையினருக்கு உதவுவதற்காக மூன்றாவது நாள் வந்த எம்.ஐ–24 வகைக் ஹெலிக்கொப்டர் போராளிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. தொடர்ந்தும் அடிக்கு மேல் அடி வாங்கிக்கொண்டிருந்த படையினரால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். அலம்பிலில் இறக்கப்பட்ட படையினரில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு விட்டனர். அவர்களில் எஞ்சியிருந்தவர்களுடனான தகவல் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் சரியான கட்டளை அதிகாரி இல்லாததால் சிதறியோடிக் கொண்டிருந்தனர். சிலர் அங்கிருந்து காட்டுப்பகுதிக்குள்ளும் ஓடிக்கொண்டிருந்தார்கள். மேலும் 6வது நாளாவதாக கடல் வழியாகப் பெருமளவு படையினரை தரையிறக்க ஆயத்தப்படுத்தினர். தரையில் நின்ற போராளிகளினால் மோட்டார் தாக்குதல்கள் கடற்படைக் கலன்கள் மீது மேற்கொள்ளப்பட்டதில் எறிகணைகளில் ஒன்று கப்பலின் முன் பகுதியில் வீழ்ந்ததில் அப்பாரிய கப்பல் பலத்த சேதத்திற்கு உள்ளாகியதுடன் அதிலிருந்த 30 படையினர் கொல்லப்பட்டதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. இந்தத் தொடர்ச்சியான நெருக்கடியின் மத்தியிலும் கொழும்பிலிருந்து இயங்கும் சிறீலங்கா வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க "அலம்பிலில் தரையிறக்கப்பட்டுள்ள படையினர் முல்லைத்தீவை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் ஒரு சில மணித்தியாலங்களுக்குள் முகாமுக்குள் இராணுவத்தினருடன் முன்னேறிச் செல்லும் படையினர் இணைந்துகொள்வர். இது வரை நடந்த போரில் நூறுக்கு மேற்பட்ட எல்.ரி.ரி.யினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்." என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்துகொண்டிருந்தமையால் கேட்பதற்கு பரிதாபகரமாக இருந்தது. 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு' என்னும் தமிழ்ப் பழமொழி போல் இப்போது பாதுகாப்பு அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் எவ்வளவு பொருத்தம் என்பது அவர்களது யோசனை அற்ற செயல்கள் சாட்சி அளிக்கின்றன. ஏற்கனவே தாக்கியழிக்கப்பட்ட முகாமில் படையினர் பெருந்தொகையாகக் கொல்லப்பட்டும் முகாம் முற்றாகத் தாக்கப்பட்டும் கூட அங்கு இருப்பவர்களோடு எந்தத் தொடர்புமில்லாத நிலையிலும் புதிய இடத்தில் பல படையினரை இறக்கி அவர்களுக்கு கைகொடுக்க முன்வந்த பாதுகாப்பு அமைச்சின் போக்கு சிறீலங்காவின் நிதானமற்ற போக்கை உலகிற்கு அம்பலப்படுத்தியது.

18ம் திகதி அதிகாலையிலேயே முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதும் அங்கே கொல்லப்பட்டும், சிதறி தப்பியோடியபோது சுடப்பட்டும் இறந்த இராணுவத்தினரது சடலங்கள் ஆங்காங்கே சிதறிக்காணப்பட்டன.

இறந்த இராணுவத்தினரின் சரியான தொகையை மூடிவைத்து மறைத்துவந்த அரசு போர் நடந்து 11 நாட்களின் பின் 28ம் திகதி செய்தியாளர் மகாநாடு ஒன்றில், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரினால்,

"முல்லைத்தீவு முகாம் முற்றாக புலிகள் வசமானது உண்மைதான். அங்கு சுமார் 1500 படையினர் வரை இருந்தனர். அவர்களில் எல்லோருமே கொல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


லப்பட்டிருக்க வேண்டும்" என்ற உண்மை வெளியிடப்பட்டது.

"பிணநாற்றம்...!" என்று சொல்வார்களே?.... அங்கு ஒரு பிணமல்ல ஆயிரத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் அழுகி உடல் உப்பி பெருத்த நிலையில் அங்குமிங்குமாக தேடி எடுக்கப்பட்டு பக்குவமாக லொறிகளிலும் ரக்ரர்களிலும் ஏற்றி கிளிநொச்சி சந்திரன் பூங்காவுக்கு கொண்டுசெல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

அங்கே நின்று சடலங்களைத் தூக்கிக்கொண்டிருந்தவர்களில் ஒருவர், "இந்தச் சடலங்களைப் பேசாமல் இஞ்சேயே எரித்துப்போட்டுப் போறதுக்கு வீணாகச் செலவழித்து இதைக் கொண்டுபோய் கொடுக்கிறதோ? இதுகளைக் கொண்டு போறதை விட இங்கிருந்து ஏதாவது மிச்ச சொச்ச ஆயுதப்பெட்டிகளையாவது கொண்டுபோய் சேர்த்தால் பிரயோசனமாக இருக்கும்" என்று சலிப்புடன் கூறினார்.

"ஐயா! நீங்கள் அப்படிக் கதைக்கிறது சரியில்லை. எங்கட எதிரியாக இருந்தாலும் அவன் போர்க்களத்தில் இறந்துவிட்டால் அதற்குரிய மரியாதையை நாங்கள் செய்ய வேணும். என்ன இருந்தாலும் அவர்களும் போர்வீரர்கள்தானே. எங்கட தலைவர் இந்த விடயத்திலை எவ்வளவு நிதானமாக செயல்படுகிறார் என்று தெரியும்தானே." அந்த மக்களுடன் சேர்ந்து இராணுவத்தினரின் சடலங்களைத் தூக்கிக்கொண்டு நின்ற ஒரு போராளி கூறியதும் எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

"இந்த சின்ன வயதில் இப்படியொரு உயர்ந்த சிந்தனை உள்ளவனாக இருக்கிறானே! எல்லாம் தலைமைத்துவப் பண்பின் சிறப்புத்தானே"

அங்கே நின்றவர்கள் அந்தப் போராளியின் உணர்வை வியந்து தமது செயலுக்காக வருத்தப்பட்டுக்கொண்டனர்.

வலிகாமம் பகுதி இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர், அந்த ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் நடந்துகொண்ட மிலேச்சத்தனமான அநாகரிகமான செயல்களைப் பார்த்தால் அவர்கள் நாகரிகமான ஒரு இனமா என்றுதான் கேட்கத் தோன்றும்.

இந்த மண் மீட்புக்கான போரிலே, தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து வீரச்சாவடைந்த மாவீரர்களின் கல்லறைகளை உழுது தரைமட்டமாக்கி வெறித்தனம் ஆடியமை!

அரச அழுத்தங்களினால் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உளப்பாதிப்புற்று வாழும் எமது குழந்தைகளுக்கென அமைக்கப்பட்ட பூங்காக்களை இடித்து அழித்து கொடுமைகள் புரிந்தமை..!

இந்திய – இலங்கை கூட்டுச் சதியினால் தம்மை அழித்து ஆகுதியாக்கிவிட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளுக்கு வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டதூபியை வெடிவைத்து தகர்த்த கொடுங்கோண்மை.... !



இவர்கள்தான் யுத்தம் மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவினால் அனுப்பிவைக்கப்பட்ட வேடம் போட்ட வேட்டை நாய்கள்.

தீருவில் பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபி 1988ம் ஆண்டு இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலப் பகுதியில் முழுக்க முழுக்க மக்களின் பங்களிப்பினாலேயே உருவாக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவாலயம். ஆரம்பத்தில் அதனைக் கட்டுவதற்கு பல தடைகளை இந்திய இராணுவத்தினர் ஏற்படுத்தி, பலரை மிரட்டி கைதுசெய்து சித்தரவதை செய்தபோதும், ஒன்றுதிரண்ட மக்கள் சக்தியினால் அந்த மாபெரும் நினைவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர் அது பூசிக்கப்பட்ட நினைவாலயம் ஆக்கப்பட்ட பின்னர் எந்த ஒரு இந்திய ஜவானும் அதன் மேல் பாதணிகளுடன் ஏறியது கிடையாது.... அந்தளவுக்கு கல்லறைகள் பூசிக்கப்பட வேண்டியதொரு தார்மீகக் கோட்பாட்டைக் கொண்டிருந்தன.

அங்கிருந்து மீட்கப்பட்ட 1208 சடலங்களையும் ஏற்றிக்கொண்டு சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட லொறிகளும் ரக்ரர்களும் முல்லைத்தீவுச் சாலை வழியாக கிளிநொச்சிக்குப் போய்க் கொண்டிருந்தன.

முல்லைத்தீவுச் சமரில் கொல்லப்பட்ட பல படையினரின் சடலங்களை மனிதாபிமான முறையில் கையளிக்க முன்வந்த போதும் அவ்வளவு பெருந்தொகையான சடலங்களை பொறுப்பேற்க அரசு மறுத்து விட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து 55 சடலங்களை மட்டுமே அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. மிகுதிச் சடலங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களிடம் கையளிக்கப்பட்டு அவை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுவிட்டன.

போர் வெறி கொண்ட சிங்கள தேசத்திற்காக இனங்களுக்கிடையிலான சௌசன்யம் வளரக்கூடாது என்ற நோக்கில் நித்திய சுபபோகத்தை அனுபவிக்க முனையும் சிங்கள ஆட்சியாளர்களுக்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த அந்த ஏழைச் சிங்கள சிப்பாய்களின் உடலைக்கூட அரசு பொறுப்பேற்க மறுத்துவிட்டது அரசின் மீதான சிங்களவர்களின் நம்பிக்கையை சிதறடித்துவிட்டது. வெறும் பணத்திற்காக ஏழைச் சிங்களத் தாய்மார்களின் பிள்ளைகளை தமிழர்களின் தாயக விடுதலைக்கு எதிரான போரில் இன்று மடிந்து கொண்டிருகின்றார்கள்.

'பாதுக்கை' என்ற ஒரு சிங்களக் கிராமத்தில் தித்தெனிய என்ற இடத்தைச் சேர்ந்த சோமாகுல என்ற ஏழைத்தாய் முல்லைத்தீவு முகாமில் போர்க்கள முனையில் நிற்கின்ற தன்னுடைய மகனுக்கு 5–12–95ல், "ஆதரயே மமே சுது புத்தா" என்ற ஆரம்பித்து எழுதிய கடிதத்தில் அந்த சிங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களக் குடும்பம் ஏன் இந்த யுத்தத்தில் பலியாக வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சார மாயையில் தமிழீழ விடுதைப் போராட்டத்தின் யதார்த்தத்தை அறியாது, தமிழர்கள் எந்த இலட்சியத்திற்குப் போராடி வருகின்றார்கள் என்று கூடப் புரியாத ஆயிரக்கணக்கான சிங்களத் தாய்மாரின் பிரதிபலிப்பாகவே சோமாவும் இருக்கின்றாள் என்பதில் வியப்பில்லை.


சிங்களப் பேரினவாதிகளினதும் மூர்க்கத்தனமான போக்குடைய பிக்குகளின் போதைனைகளின் மத்தியிலும் அவலப்படுகின்ற அவர்களால் எப்படித்தான் உண்மையை அறிந்து கொள்ளமுடியும்? மீகவத்தை, பாதுக்கை என்ற கிராமத்தில் இருக்கும் சோமா என்ற அந்தத் தாயின் கடிதத்தில்

'உனது சுகம் அறிய ஆவல் ...உனக்கு இப்போ காலம் சரி இல்லையாம் சனி தோஷம் இருப்பதால், போதி பூஜை செய்து கிரகத் தோத்திரம் பாடி ஏழு நாட்கள் இன்றுடன் முடிவடைகிறது... மகனே உனக்குக் கூடாத காலம் அவதானமாக நடந்து கொள்... எமது சிறீலங்கா இராணுவ வீரர்கள் திராவிட இனத்திடம் இருந்தும் பிரிவினைவாதிகளிடமிருந்தும் இருந்தும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதில் எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனால் எதற்கும் நீ அவதானமாக நடந்து கொள். அனது அக்காவின் கடனில் 10600 ரூபா கொடுத்தது நீ அனுப்பிய 10000 ரூபாவைத்தான் பெற்றுக் கொண்டேன்.. எனது தங்கமகனே!..நீ உயிரோடு சுகமே திரும்ப வேண்டும் கவனமாகவும் நிதானமாகவும் செயல்படவும், உனது அம்மா சோமா"

அந்தத் தாயின் கடிதத்தில் போருக்குச் சென்றுவிட்ட தன் மகனின் சுகம் பற்றியே மீண்டும் மீண்டும் குறிப்பிட்டிருந்தது. பலத்த இராணுவச் சோதனையின் பின்பு தான் அந்தக் கடிதம் தன் மகனிடம் சேர்ப்பிக்கப்படும் என்று சோமா அறிந்திருந்தும், மகனை உயிரோடு பார்க்கவேண்டும் என்ற ஆவலில்" கண்டபடி போருக்கு முன்னுக்குச்செல்லக் கூடாது" என்று மறைமுகமாக எச்சரிக்கத் தவறவில்லை!

அத்தகைய சிங்களத் தாயின் அபிலாசைகள் எங்கே..? அவளுடைய இறந்து போன அந்த மகனைப் பொறுப்பேற்று உயிரற்ற உடலைக்கூட கொடுக்க மனம் இல்லாத சிங்களப் பேரினவாதிகளுக்காகவா அவனைப் போன்ற சிங்கள இளைஞர்கள் தமிழீழ மண்ணிலே மடிய வேண்டும்...?

தமிழீழ இளைஞர்கள் ஒரு இலட்சியத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்துக்கொண்டிருக்க சிங்கள இளைஞர்களோ ஆட்சியாளர்களின் அர்த்தமற்ற "சமாதானத்திற்கான யுத்தம்" என்றபோர்வையில் பணத்திற்காகவும், குடியிருப்புக்கான வீட்டுக்



காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் மடிகின்றனர். ஆனால் களத்தில் நின்றும் விலகியிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களோ லண்டன் நகர விடுதிகளிலும், கொழும்பு ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலும் உல்லாசமாகப் பொழுதைப்போக்குகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் இந்த யுத்தம் முடிவுக்கு வந்து விட்டால் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கின்ற எல்லாச் சுகபோகங்களுமே பறிபோய் விடும் என்ற அச்சத்தில் பிரச்சினைகள் முடியாதிருக்க யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துகின்றார்கள். ஆனால் "எங்கள் பிள்ளைகளைக் காட்டுங்கள்" என்று அழுது புலம்பி சோமா போன்ற ஆயிரக்கணக்கான ஏழைச் சிங்களத் தாய்மார்களுக்கு அவர்கள் என்ன பதிலைச் சொல்லப் போகின்றார்கள்...?

அந்த உண்மையை அறிவு பூர்வமாக உணரும் வரை சிங்கள இளைஞர்களின் சடலங்களும் தமிழீழ மண்ணிலே, புதைக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகவே போகும்...!

முல்லைத் தீவு நகரை மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும், அந்த நகரத்தின் மூலை முடுக்கெங்கும் சுற்றிவர வேண்டும் என்ற ஆவல் எழ ஏழாவது நாளான அன்றும் புறப்படுவதற்குத் தயாரானேன்.

"முல்லைத்தீவுப் பக்கம் போனால் எங்கடை வீட்டையும் ஒருக்கால் போய்ப் பார்த்து வாங்கோ" முல்லைத்தீவில் இருந்து தன் அழகான கல்வீட்டை இழந்து அகதியாய் ஓடிவந்து புதுக்குடியிருப்பில் மண் குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்ற தோட்டக் கல்வி அதிகாரி ஒருவர் தன் ஆவலை வெளிக்காட்டினார். தான் வாழ்ந்து, உண்டு, படுத்து எழும்பிய அந்த வீட்டை மீண்டும் பார்க்கத் துடிக்கும் ஆதங்கத்தை அவரது முகம் காட்டிக்கொண்டிருந்தது.

அன்று பிற்பகல் ஐந்துமணி போல் எனது ஒன்றுவிட்ட சகோதரனான செல்வராஜாவுடன் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுப் போகும் பொழுது, ஆளரவம் குறைந்த நேரத்தில் தனிமையில் செல்வது சிறிது பயமாக இருந்தது.

அந்த நகரம் ஆவிகள் உலாவும் நகரம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது!

"சே!........ பயப்படாதயுங்கோ அண்ணை! என்ன ஆகப் போனால் கால்தான் போகும்.."

செல்வராஜா பகிடியாகக் கூறிய படி, மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கூட்டியதும், அது காற்றையும் கிழித்துக் கொண்டு பறந்தது.

வெட்டுவாய்க்கால் (வட்டு வாசல்) பாலத்தில் இருந்து முல்லைத்தீவு முகாம் நோக்கி நீண்டு செல்கின்ற தார் றோட்டின் இரு புறமும் விடத்தல் முள்ளுப் பற்றைகளும்,சாரல் பற்றைகளும் படர்ந்து வளர்ந்திருந்தன அந்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தப் பகுதிகளைப் பல போராளிகள் நின்று துப்புரவு செய்து கொண்டிருந் தார்கள்.

"அளம்பில் சிலாவத்துறையில் இறக் கிவிட்ட ஆமி முகாம் நோக்கி முன் னேறி வாறாங்களாம் அதுக்கிடை யிலை ஏன் இப்ப பாதையை வெளி யாக்கிறியள்?"

அந்தச் சாலையின் இருபக்கத்தி லும் நின்று செம்மண் புளுதி படிந்த வெள்ளை பெனியனுடனும், அரைக் காற்சட்டையுடனுமாக வேலை செய்து கொண்டு நின்ற ஒரு போராளியிடம் கேட்டோம்.

"ஐயா!...இஞ்சை இருந்தவன் சும்மா செத்துப் போகேல்லை..பதினையா யிரத்திற்கும் மேற்பட்ட நிலக்கண்ணி வெடிகளையும், ஆயிரத்திற்கும் மேற் பட்ட வாகனக் கண்ணிவெடிகளையு மெல்லோ புதைத்து வைச்சிருக்கி றான்... நேற்றுக்கூட மைன்ஸ் கிளியர் பண்ணேக்கை எங்கடை பெடியன் ஒருத்தனுக்குப் பாதம் போச்சுது..."

அந்தப் போராளி மிக்கச் சாதா ரணமாகக் கூறிவிட்டு பாதையை மெது மெதுவாகச் சுத்தப்படுத்தத் தொடங்கி விட்டான். இரண்டு பக்கமும் மூடி வளர்ந்திருந்த விடத்தல் முள்ளு கள் எங்களுடைய கன்னங்களையும் சட்டைகளையும் பதம் பார்த்து விட்டன.!

வெட்டு வாய்க்கல் பாலத்தை யும் கடந்து வளைவான பாதை யில் திரும்பும் பொழுது சிறிது தூரம் தள்ளி இடதுபுறமாக அமைதியான ஒரு சூழலில் இருந்த கன்னிமார் கோயில் பாழடைந்து போய் இருந்தது. சப்த கன்னி கைகளும் ஆலயம் அமைத்து வழி பட்டு வந்த அந்தப் பெண் தெய்வ வழிபாட்டு முறை முல்லைத்தீவில் இருந்திருக்கிறது. அந்த ஆலயத் தைச் சுற்றி முட்கம்பி வேலி போடப்பட்டு, பற்றைகளும், மரங் களும் வளர்ந்து ஒரே புதிராகக் காட்சியளித்தது.

அங்கிருந்து சிறிது தூரத்தில் வெட்டு வாய்க்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை புதர் களால் மூடிப்போய் இருந்தது. முல்லை நகர் ஆக்கிரமிக்கப் பட்ட பொழுது அங்கு காலம் காலமாக வளர்ந்த மக்கள் மட்டும் அகதிகளாக்கப்படவில்லை.... அந்த மக்களால் பூசித்தும் நேசித் தும் வளர்க்கப்பட்ட கல்விச் சாலைகளும் கூடவே அகதிகளாக்கப் பட்டன. அந்தப் பாடசாலைகளை அழித்துக் கல்வி கற்பதன் மீது நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தியமை, தமிழரின் கல்வி சிதைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றியதாகத்தான் இருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நூற்றி நான்கு பாடசாலைகளில் கரை துறைப்பற்றுக் கோட்டத்தில் உள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முல் லைத் தீவு றோ.க. பெண்கள் பாட சாலை முல்லைத்தீவு முஸ்லீம் வித்தி யாலயம் வெட்டுவாய்க்கால் அ. தா.க பாடசாலை, கள்ளப்பாடு அ.த.க பாட சாலை. முல்லைத்தீவு இந்து வித்தியா லயம். சிலாவத்தை இந்து தமிழ் கலவன் பாடசாலை, சிலாவத்தை றோ.க.பாடசாலை ஆகிய எட்டுப் பாடசாலைகளும் இராணுவ முற்று கைக்குள் கொண்டுவரப்பட்டிருந்தன! அதனைத் தொடர்ந்து, அந்தப் பாட சாலைகளில் கல்வி கற்றுக் கொண்டி ருந்த 2400 மாணவர்களும் நிர்க்கதி யாக்கப்பட்டனர்.

இந்த நாட்டில் சகல இன மக்களும் சமமான கல்வி வசதி வளப் பங்கீடு என்பவற்றை ஏற்படுத்தி, நாட்டின் 10000 பாடசாலைகளையும் இன மொழி வேறுபாட்டின்றி தரம் உயர்த்த உழைப் போம் என்று கூறிப் பெருமளவு வெளி நாட்டு உதவிகளைப் பெற்றுக்குவிக் கும் ஆட்சியாளர்கள், இங்கே ஒரு தூய தமிழ்க் கிராமத்தில் உயிர்ப்போடு இயங்கிய எட்டுப் பாடசாலைகளை யும் முடக்கி விட்ட அந்தக் கொடு மையையும் உலகுக்குக் கூறுவார் களா...?

கன்னிமார் கோயிலையும் கடந்து அந்தத் தார் றோட்டு வழியே செல் லும் பொழுது ஆயிரக்கணக்கான சீமேந்து கற்கள், மண் ஆகியவற்றால் உரமாக அணைகட்டி, முகாமின் வெளிப்புற வளையமாக பலமான காவலரண்கள் நூற்றுக்கணக்கில் 20 அடிக்கு ஒன்றாக அமைக்கப்பட்டிருந் தன!... அதில் இருந்து சில மீற்றர்கள் தூரம் சென்றதும் அடர்ந்த முட்கம்பி வளையங்கள் ஒரு பாதுகாப்பு வலய மாக இருந்தன.

அந்தப் பாதையின் இரு பக்கங்க ளிலும் உள்ள வயல் வெளிகளில் ஆங் காங்கே இறந்து பொருமிப்போன பல சடலங்கள் இன்றும் அங்கே கிடந்தன.

"வயல் வெளிகளில் நிறைய மைன்ஸ் இருக்கிறதாலை அந்தச் சடலங்களை



'ஓயாத அலைகள்' உதயத்தின் திசையை நோக்கி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எடுக்கேல்லையாம்.."

மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருக்கும் பொழுதே செல்வராஜா அந்தப் பகுதியைக் காட்டிக் கொண்டு போனார் அந்த முகாமின் மூன்றாவது பாதுகாப்பு வலயத்தையும் கடந்து மையப்பகுத்திக்குத் சென்றோம். அந்தப் பகுதியில் உள்ள புல் நிலங்கள் நெருப்பு வைத்துக் கொழுத்தப்பட்டிருந்தன.

"ஷூ..... இவ்வளவு பாதுகாப்பு வலயங்ளையும் கடந்து இந்தப் பெரிய முகாமை எங்கடை பொடியள் எப்படித்தான் தாக்கியளித்தார்களோ?"

அந்த வியத்தகு சாதனையை நினைத்துப் பார்க்கவே உடல் புல்லரிக்கின்றது. சிறுவயதில் வேதாளன் கதைகள், மாயாவிக் கதைகளைப் படித்து அதில் வரும் அற்புதமான வெற்றிகளையெல்லாம் நினைத்து மெய்மறந்திருக்கிறேன்.

அது கற்பனை... ஆனால் எமது கண்முன்னால் நியமாகவே ஒரு அற்புதத்தை, நினைத்துப் பார்க்கவே முடியாத ஒரு தீரத்தைக் கண்டுவிட்ட பிரமை இன்னும் மாறவில்லை!

'அண்ணை! கெதியாய் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வாங்கோ... நான் ஒரு பொடியனிட்டை போட்டுவாறன்..' செல்வராஜா என்னைத் துரிதப்படுத்திவிட்டு, ஆலமரத்தின் கீழ் நின்ற சில போராளிகளை நோக்கிப் போனார்.

அழகான கடற்கரை.. வெண்மணற் பரப்பை முத்தமிடும் வகையில் பொங்கி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. அங்கே பல போராளிகள் ஓடிப்பாடித் திரிந்துகொண்டிருந்தார்கள். சிலர் குளித்துக்கொண்டும் இருந்தார்கள்.

கடைத்தெருப் பக்கமாக நீளத்திற்கு அழகாக இருந்த கடைகளில் அப்துல் சமது, கன்கோவஸ்தியாம் பிள்ளை வைன் ஸ்ரோர்... ஆகிய பல கடைகள் மேற்கூரைகள் களற்றப்பட்ட நிலையில் இருந்தன. அங்கே இராணுவத்தினரின் கொத்தடிமைகளாக இருந்தவர்களால் கைவிடப்பட்ட நூற்றுக்கணக்கான ஆடுகள் அநாதரவாக நின்று மேய்ந்துகொண்டிருந்தன. அந்தக் கடைகளுக்கு எதிர்ப்புறமாக உள்ள ஒரு வீட்டில் மேல் கூரையில் ஒரு சிங்கள சிப்பாய் காய்ந்து கருகிப்போன உடல் முகம் குப்புறக் கிடந்தது. அதன் கீழ் அஸ்பெஸ்ரஸ் சீற்றுக்கும் ஓட்டுக்கும் இடையில் ஒரு சிப்பாயின் உடல். இப்படி ஒன்றா இரண்டா ஏற்கனவே கணக்கில் அடங்காத சடலங்கள் இன்றும் மீட்கப்படாமல் இருந்தன.

'ஐயா... அங்காலை ஒரு பங்கருக்குள்ளை இருபத்தேழு ஆமிக்காரங்கடை சடலங்கள் கருகிப் போய்க் கிடக்குது. அதுக்குள்ளே இருந்த அவங்கடை ஆயுதங்கள் கூடக் கருகிப் போய்க் கிடக்குது.... வாருங்கோ காட்டுறன்..'

நான் ஒரு பத்திரிகையாளன் என்பதை அறிந்தோ என்னவோ ஏதோ ஒரு ஆர்வத்தில் இந்தப் போராளி என்னை அழைத்தான்....

"இல்லைத் தம்பி இவ்வளவும் போதும் நன்றி.." அந்த அழகான நகரத்தை ஆசைதீரக் கண்டுகளித்த எனது

'ஓயாத அலைகள்' முகங்களில் சிலிர்க்கும் முல்லைச் சிரிப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மனம் மீண்டும் அந்தக் காட்சியைக் காணவிரும்பவில்லை!

முல்லைத்தீவு...! மாமன்னன் சூரபத்மனின் அற்புதமான மகேந்திரபுரி போன்று மிக மிக அழகாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டு இன்று களை இழந்து ஒளி இழந்து போய் இருக்கின்றது..... வடக்கே பொங்கிப் பிரவகிக்கும் கடல் தெற்கே ஒரு புறமாக அரச திணைக்களக் கட்டடங்கள், கிழக்கே அழகான வீடுகளும், கடைகளும் அமைந்த கடைத்தெரு. விசாலமான விளையாட்டரங்கு, திரையரங்குகள்.... என்று மிக அற்புதமாகத் திட்டமிட்டு, அழகாக அந்த நகரம் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழீழ சிங்கள தேசப் போரில் முல்லைத்தீவு ஒரு கேந்திர முக்கியத்துவம் பெற்றது மட்டுமன்றி அது ஒரு பூர்வீக வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது என்ற பெருமையையும் உடையது.

ஆம்! பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தமிழீழப் பகுதியின் பல்வேறு நிலப்பரப்புக்களையும் ஆண்டு வந்த சங்கிலியன் தொடக்கம் குளக்கோட்டன் வரையிலான பல தமிழ் அரசர்கள் எல்லோரும் தோற்கடிக்கப்பட்ட போது 'வன்னி'யை மட்டும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு அடங்க மறுத்தது. தனித்தமிழர் இராச்சியமாக நிமிர்ந்து நின்றது. அன்று கடைசித் தமிழ் மன்னனாக வீரத்துடன் வாழ்ந்த பண்டாரவன்னியன் ஆளுமைக்குள் இருந்த தமிழர்கள், தன்மானத்துடனும், வீரத்துடனும், செல்வம் கொழிக்கும் வளத்துடனும் வாழ்ந்தார்கள்....! ஆனால், யாழ்ப்பாணத்தில் சங்கிலியன், தோற்கடிக்கப்பட்டதும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கொடூரங்களுக்கு அஞ்சிய தமிழர்கள், வன்னிப் பெருநிலப்பரப்புக்கே ஓடி வந்து முல்லைத்தீவுப் பகுதியில் தஞ்சமடைந்தனர்!

கரிக்காட்டு மூலை என்ற இடத்தில் தன் தளத்தை அமைத்து பிரித்தானிய அரசுக்கு எதிராக இறுதி வரை போராடிய பண்டார வன்னியன், பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களினால் சுற்றிவளைக்கப்பட்டுக் கற்சிலை மடுவரை போராடியபடி பின்வாங்கிச் சென்று இறுதியில் அந்தத் தனித் தமிழ் மறவன் அங்கே வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

இன்றும் கூட கற்சிலைமடுவில் அந்த மாவீரன் பண்டாரவன்னியனின் கல்வெட்டு வன்னியின் அடங்கா வீரத்தைக் காட்டி நிற்கிறது!

மாலை மயங்கும் நேரத்தில் அந்த மாவீரன், புனித பாதம் பட்ட பூமியில் நிற்கும்பொழுது என் நெஞ்சிலெல்லாம் பூரித்தது. சந்திக்கு எதிர்புறமாக இருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைப் பணிமனை கட்டிடத்தின் முன்னால், சில போராளிகள் குவிந்து நின்றனர். அந்தப் பெரிய கட்டிடத்தின் முன்னால் மிக உயரமான ஒரு கொடிக்கம்பத்தில் சிங்கள ஆக்கிரமிப்பின் சின்னமாக ஆறு வருடங்களாகப் பறந்துகொண்டிருந்து துப்



பாக்கிச் சன்னங்கள் பட்டுத் துளை விழுந்துசுருங்கிப் போய்க் கிடந்த வாளேந்திய சிங்கக் கொடியை ஒரு போராளி இறக்கிக்கொண்டிருந்தான்!

*1995*ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தூய தமிழ் அரசோச்சிய யாழ் மண்ணிலே சிறீலங்காப் பாதுகாப்புத் துணை அமைச்சர் அநுருத்த ரத்வத்தை ஆக்கிரமிப்பின் சின்னமாக சிங்கக் கொடியை ஏற்றித் தென்னிலங்கையில் தன்னை ஒரு துட்டகைமுனுவாகக் காட்டி பெருமை பெற்ற அந்தச் சிறுமையை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஓ.... இன்று ஒரு முகாம் மட்டும் கைப்பற்றப்படவில்லை பேயாட்சி செய்த ஒரு தமிழ் நகரமும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுவிட்டது!

அந்தப் பூரிப்பில் முல்லை மக்கள், தாம் இழந்துவிட்ட வீடுகளை, தவழ்ந்து, ஓடி உருண்டு விளையாடிய மண்ணைப் பார்த்து மகிழத் தயாராகி விட்டார்கள்.

"முல்லைத்தீவு முகாம் முற்றாகப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அளம்பில் பகுதியில் பெரும் எடுப்புடன் தரையிறக்கப்பட்ட முப்படைகளின் 'திரிஹர' இராணுவ நடவடிக்கை மூலம் மீண்டும் முல்லைத்தீவை முற்றுகையிட முனைந்த இராணுவத்தினர் தமது பெருமளவு ஆயுதங்களையும் இறந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்களையும் கைவிட்டு கடல் மூலம் ஓடித் தப்பிவிட்டார்கள்...."

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் தமிழீழ மண் ஒருகணம் துள்ளிக் குதித்தது.

ஓ... அன்று குளக்கோட்ட மன்னனால் திருகோணமலையில் செதுக்கப்பட்ட கல்வெட்டின் தீர்க்கதரிசனம் இன்று நிதர்சனமாகி வருகின்றது....

"முன்னே குளக்கோட்ட மன்னனால் திருகோணமலையில் செதுக்கப்பட்ட கல்வெட்டின் தீர்க்கதரிசனம் இன்று நிதர்சனமாகி வருகின்றது.

"முன்னே குளக்கோட்டன்
மூட்டும் திருப்பணியை பின்னே
பறங்கி பிரிக்கவே மன்னவ பின்
பொண்ணாததனையியற்ற
வழித் தேவைத்து எண்ணாரே
பின்னரசர்கள்..."

என்ற அடியைத் தொடர்ந்து வரும் அடியில்

"பறங்கிக்கண், பூனைக்கண், புகைக்கண், மான் கண் மாறிய பின்னே வடுகாய்விடும்..." என்ற இந்த அடிகள் மூலம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் என அன்னிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சிக்குள் சிக்குண்டு தவிக்கும் தமிழீழம் மீண்டும் இறுதியில், 'வடுகா' என குறிப்பிடும் தமிழர்கள் வசமாகும் எனக் குறிப்பிடப்பட்ட அந்தத் தீர்க்கதரிசனமான அந்தக் கோணேசர் கல்வெட்டு எங்கள் குனிந்த தலைகளை மீண்டும் நிமிரச் செய்யும்!

அப்பொழுது இன்று மீட்கப்பட்ட களிப்பில் முகிழ்த்து நிற்கும் முல்லைத் தீவில் மட்டுமல்ல தமிழ் வாழும் தமிழீழம் எங்கும் எங்கள் புலிக்கொடி பறக்கும்! அவை வானில் பட்டொளி வீசி எங்கள் வீரத்தின் புகழ் பாடும்!! ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பொங்கி எழுந்தினிப் போராடுவோம்! எம்மூரில் வந்த பகைவிரட்டி வரலாற்றை வெல்வோம்!

பெரிய வாழ்வொன்றுக்கு அதிபதிகளாக
இருந்தோம் ஒருகாலம்.
பனிநீரில் குளித்தெழும் அதிகாலையாக
அழகாய் இருந்ததெம் ஊர்.
ஊரெல்லாம் திருவிழா
உறவெல்லாம் வீதியுலா என்று
ஆயிரம் பேதங்கள் எமக்குள் இருந்தாலும்
அதற்குள் இருந்தது ஆனந்தம்.
இன்று எங்கே போனது அந்த இனிய வாழ்வு?
எவர் பறித்தார் எம் எழிலை?




தமிழா! கிடந்தது போதும் எழுந்து கேள்விகேள்.
எவர் பறித்தார் எம் வாழ்வையென்று
எட்டுத் திக்கும் எதிரொலிக்க
உரத்துக் கேள், உனக்கொரு பதில் வேண்டும்.
நாம் பிறந்த மண்ணில் நடக்க முடியாது,
நிமிர முடியாது,
பூக்க முடியாது,
புன்னகைக்க முடியாது.
யாரோ ஒருவரின் கட்டளைக்கு நடுங்கி
நகரத்தில் கிடந்துழலும் வாழ்வினி
என்று தொலையும்?
காற்றுக் கொதுங்கிய போர்த்துக்கீசனின்
கண்ணிலெம் தாயகம் தெரியும்வரை
தலையில் கட்டிய தலைப்பாகையை
முகில் தொட்டுப் போவதென

உயர்ந்த வாழ்வுக்குரியவராய் இருந்தோம் நாம்.
எம்மை நாமே எழுதினோம்.
வெடிமருந்துடன் வந்தவனை
வேலும், வாளும் வெல்லமுடியவில்லை.
வேற்றொருவனின் காலில் விழுந்தோம்.
கிணற்றில் விழுந்த குங்குமச் சரையாய்
கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைந்தோம்.
யானைகள் மிதிக்கும் சேனைப்புலவாய்
மாறி மாறிப் பலரின் மகுடத்தின் கீழ்
நாறிக்கிடந்தது நம் வாழ்வு.
வெள்ளைக்காரன் வெளியேறிய போது
சேனநாயக்காவுக்கு சிம்மாசனம் கிடைத்தது.
அன்று தொடங்கிய அவலம்
இன்றுவரை தொடர்கிறது.
ஆள்பதிகள் மாறினர்
எங்களுக்கு எந்த மாற்றமும் எட்டவில்லை.
தமிழரின் வாழ்வைத் தணலிலிடுவதிலேயே
அவர்களின் அதிகாரப் போட்டி,
இப்போது சந்திரிகாவின் முறை
படைகளே ஆட்சி செய்யும் அடக்குமுறை உச்சம்.
தமிழனே! அழுவதை நிறுத்து
உன்னை உள்ளுக்குள்ளேயே இழுத்திழுத்து
ஆமையாய்க் கிடந்தது போதும்.
மிதித்த இடத்துப் புல்லுச் சாகுமெனக்
குதிக்காதிருந்தாய். என்ன நடந்தது?
"நீளுமுன் ஊரினில் ஊரடங்கும் – உன்
நாய்களும் ஊமையாய் வாயடங்கும்
வாழுமுன் உரிமையும் போயடங்கும் – தமிழ்
வாசல்கள் யாவிலும் பேயுறங்கும்."
கண்ணீர் விட்டு வளர்த்த விடுதலைப்பயிரை
கருகவிடலாமா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


குருதி சொரிந்து ஏற்றிய சுதந்திரக் கொடியை
எரியவிடலாமா?
பல்லாயிரம் பிள்ளைகளின் கல்லறைகள்
வெறும் புதைகுழியல்லவே.
கருத்தரிக்கும் கருவறை என்றெல்லவா எழுதினோம்.
பொய்யாய், புனைகதையாய் மெல்ல, மெல்ல இருண்டு
இல்லாமற் போகுமா எம்வாழ்வு?
கலங்காதிரு மனமே!
என்ன நடந்துவிட்டது இப்போது?
நாளைக்கே உலகம் அழியுமென யார் தேதி குறித்தது.
காற்றினி வீசாதென யார் சொன்னது.
நெஞ்சின் உறுதியும், நிமிரும் சக்தியும்
தொலைந்து போகாதிருக்கக் கடவது.
பல்லைக்கடித்துத் துயரைத்தாங்கு
பகற்பொழுது இனிமேற்தான் வரப்போகிறது.
துப்பாக்கிகளும், பீரங்கிகளும்
சுதந்திர தேவியைச் சுட்டெரிக்க முடியுமெனில்
உலகம் ஒரே நாடாகவல்லவா இருந்திருக்கும்.
அமெரிக்காவின் ஆயுத பலத்திற்குப் பணிந்திருந்தால்



வியட்னாம்நாடு விழிதிறந்திருக்க முடியாதே.
சுதந்திரத் தீயைச் சுட்டெரிக்க இன்னொரு
நெருப்பில்லை
விடுதலை என்பது அடிவற்றிப்போகும்
ஆற்றுநீரில்லை.
பீறிட்டுக் கிளம்பும் பூகம்பம்.
தெருவிற் கிடந்தெடுப்பது சமரசம்;
உயிர் கொடுத்து வாங்குவதே உரிமை.
போராட்டமே வாழ்வான பூமியில்
வாரோட்டம் எதற்கு?
விடுதலைப் போரென்பது தலைமுறைக்கான
விலைகொடுப்பு
அடிமை வாழ்வை அறுத்து
நெடிய பனை போன்ற நிமிர்ந்த வாழ்வுக்காக
உயிரைக் கொடுக்கும் ஒரு வேள்வி.
நித்திரைக்கு இதுவல்ல நேரம்.
போராடும் தேசத்தில்
சாய்மனைக் கதிரைகளைத் தடைசெய்யவேண்டும்.
பாயையும், தலையணையையும்
கொளுத்தலாம்....குற்றமல்ல
தாயாள் பசித்திருக்க
எமக்கு தங்கத்தில் நகை எதற்கு?
ஆடாத காலும், அசையாத உடற்சதையும்
கூடாது தமிழனுக்கு.
குருதியிலே தமிழ் வீரர்
ஓடாததாய்க்குப் பிறக்காத தமிழ்மறவா!
பொங்கியெழுந்திங்கு புலியாகு
எம்மூரில்...
வந்தபகை துரத்தி வரலாற்றை வென்றெடுப்போம்.
"விழிகள் திறந்து வெளியிற் பறக்க
வருக புலிகள் சேனையில்.
விடியும் அழகை விரைவிற் பருக
எழுக புலிகள் சேனையில்
தலைகாட்டும் வழியில் எழுந்து
வருக புலிகள் சேனையில்
தமிழர் தேசம் நிமிரும் நேரம்
எழுக புலிகள் சேனையில்!"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

★ தமிழர்களும் சிங்களவர்களும் தேசமக்கள்

★ தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரின் இறைமை மீள நிறுவப்பட்டுவிட்டது

★ தமிழீழ விடுதலைப் போராட்டம் நீதியானதும் சட்டபூர்வமானதுமாகும்

★ இராணுவத் தீர்வல்ல அரசியல் தீர்வே தேவை

★ சுதந்திரமான முறையில் மனிதாபிமான உதவிகளைச் செய்க

★ படைகளை விலக்கி அமைதிவழிப் பேச்சுவார்த்தைக்கு பாதை விடுக

# இலண்டன் சர்வதேச மகாநாட்டில்

## விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரிக்க கோரிக்கை

இலண்டன் ஈவில் நகர மண்டபத்தில் செப்டெம்பர் 26 – 27ம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச மகாநாடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கையின் நியாயப்பாட்டை தெட்டத்தெளிவாக உலகுக்கு விளக்கியதும் அல்லாமல் பின்வரும் ஆறு முக்கிய தீர்மானங்களையும் மேற்கொண்டது.

01. வித்தியாசமான மொழி, மத, கலாச்சார, பழக்கவழக்கங்களை கொண்டு குறித்த புவியியல் எல்லைகளில் ஆதிகாலம் முதலாக இலங்கைத்தீவில் வாழ்ந்து வரும் சிங்களவர்களும் தமிழர்களும் இரு வேறு வேறான தேசமக்களாக அடையாளம் காணப்படுவதற்கான சகல நிபந்தனைகளையும் பூர்த்திசெய்கின்றனர்.

02. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சமத்துவமான முறையில் வாழ்வதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் 1948ம் ஆண்டு முதல் சிங்கள அரசாங்கங்களினால் தொடர்ச்சியான முறையில், மூர்க்கத்தனமான முறையில் மறுக்கப்பட்டு வருவதினால், தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதற்கான சகல முயற்சிகளும் இயலாமல் போய்விட்டது. இதனால் தமிழ்ப் பிரதேசங்களில் இறைமையை நிறுவிக்கொள்வதற்கான தமது சுதந்திர விருப்பை தெரிவிக்கும் குடியொப்பமாக 1977 பொதுத்தேர்தலைக் கருத்திற்கொண்ட தமிழ் மக்கள் இதற்கான அதிக எண்ணிக்கையான வாக்குகள் மூலமான சம்மதத்தைத் தெரிவித்தனர்.

03. தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி சமத்துவமுள்ளவர்களாக வாழ்வதற்கு முயற்சிக்கையில் அவர்களின் பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கி சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறைகள் சர்வதேச வழமைகள், ஜனநாயக தத்துவங்கள், மனிதாபச் சட்டங்கள் என்பவற்றுக்கு வன்முறைக்கு எதிரானதாக அமைகிறது. இந்தச் சகித்துக்



மகாநாட்டில் பார்வையாளர்களாக வருகை தந்தோர்

www.tamileelamarchive.com

கொள்ளமுடியாத தேசிய ஒடுக்கு முறைக்கும் காட்டுமிராண்டித்தன மான அரச பயங்கரவாதத்திற்கும் எதிராக தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் ஆயுதப்போராட்டம் நீதியானதும் சட்டபூர்வமானதுமாக அமைகிறது.

*04.* தமிழர்களின் தேசிய முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வுதான் தேவையாக உள்ளதே தவிர இராணுவத் தீர்வல்ல. "அமைதிக்கான யுத்தம்" என்ற பெயரில் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மேல் நடாத்தும் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் நேர்மையற்றதும் மனிதத்தன்மையற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும். இந்த யுத்தம் மனித அவலங்களையும், ஜனநாயக மனித உரிமை மீறல்களையுமே விளைவாக ஏற்படுத்தி இலங்கைத் தீவு முழுவதற்கும் பொருளாதார வீழ்ச்சியைக் கொடுத்து வருகிறது.

*05.* இந்த மகாநாடு யாழ். குடாநாடு, வன்னி, கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தமிழ் மக்களின் உள்ளக இடப்பெயர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறது. வன்னப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் உயிர்வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளான உணவு, மருந்து என்பவற்றைக் கூட தடைசெய்வதன் மூலம் சிறீலங்கா உணவையும் மருந்து வழங்கலையும் யுத்த ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. மக்கள் வாழும் பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் போல் நடாத்தப்படுகின்றன. இந்த மகாநாடு, பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளுக்குச் செய்தியாளர்கள், தகவல் சேகரிப்பவர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் உடனடியாக மனிதாபிமான உதவிகளையும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் அரசாங்கங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சுதந்திரமான முறையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது.

*06.* இந்த மகாநாடு, தமிழ் மக்களின் தேசிய முரண்பாடானது சுமூகமான அமைதிவழி தீர்வுமூலமே தீர்க்கப்பட வேண்டும்; அரசாங்கம் தனது சுய விருப்பத் தீர்வுகளைத் திணித்து அல்லது ஆக்கிரமிப்புச் செய்து தீர்க்க முயலுமானால் அது ஆக்கிரமிப்பு நிலை ஒன்றைத்தான் உருவாக்கும் எனப் பலமாக நம்புகிறது. மேலும் இந்த மகாநாடானது சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமிப்பு நோக்கில் கைப்பற்றியுள்ள தமிழ்ப் பகுதிகளிலிருந்து விலகி வழமை நிலைமை மூன்றாவது தரப்பு நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் திரும்ப வழி செய்யுமானால் அது சிறீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தாம் விரும்பும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபட வழி பிறக்கும் என்ற உறுதியான கருத்தை வெளிப்படுத்த விரும்புகிறது.

மேலும் இந்த இருநாள் சர்வதேச மகாநாட்டில் பிரித்தானிய நிழல் வெளிவிவகார அமைச்சர் டேரக் பெட்ச்செட் *(DEREK FATCHETT MP)* பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களான பி. காபரா *(P.Khabra MP)*, றொபேர்ட் ஹியூஸ்ஸ் *(Robert Hughes MP)* ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்டீன் ஓடி *(Christine oddy MEP)*, பிரித்தானிய லேபர் கட்சியின் பிரண்ட் பாராளுமன்ற தொகுதி பாராளுமன்ற வேட்பாளர் பரி கார்டினர், பிரண்ட் நகர மேயர் லதா பட்டேல், இந்திய சட்டசபை உறுப்பினர் பேராசிரியர் தீரன், இந்திய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ், எல்சல்வடோர் தேசிய விடுதலை முன்னணி *(FMLN)*ன் செயலாளர் நாயகம் சக்ரீடோ ரேய்ஸ், தென்னாபிரிக்கா *(Paslo)* வை சேர்ந்த கோபல் வீரபத்திரன், நேபாளத்தைச் சேர்ந்த ஹல பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சூரிய சுபேதி, சிறீலங்கா நவசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, முன்னாள் சிறீலங்கா ரூபவாஹினிக்கூட்டுத்தாபன தலைவரும், முன்னாள் பி.பி.சியின் சிங்களச் சேவை தயாரிப்பாளருமான வசந்தராஜா, தமிழர் மனித உரிமை அமைப்பைச்



டாக்டர் ராமதாஸ்



பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் பி. காபரா குத்துவிளக்கேற்றி மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்

சேர்ந்த செல்வி மதுரா ராசநாயகம், திரு. எட்ரியன் விஜயமானே, திரு. சூ. யோ. பற்றிமாகரன், தமிழீழக் கத்தோலிக்கத் திருச்சபையின் குருமுதல்வர் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவல் ஆகியோர் ஆய்வுரைகளும் கருத்துரைகளும் நிகழ்த்தினர். அமர்வுகளுக்கு திரு. ஜேம்ஸ்கரன், திரு. சி. சிதம்பரப்பிள்ளை, கலாநிதி அர்ச்சுனா சிற்றம்பலம், வைத்தியக் கலாநிதி என். சச்சிதானந்தன் ஆகியோர் தலைமை தாங்கினர். முதல்நாள் நிகழ்ச்சியினை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் *p.* காபிரா ஆரம்பித்து வைக்க திரு. எஸ் மகரசிங்கம் வாழ்த்துரை வழங்கினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சியினை பிரண்ட் நகர மேயர் லதா பட்டேல் ஆரம்பித்து வைக்க திரு.சி. ஜே.டி. தாமோதரம் வாழ்த்துரை நல்கினார். இரு தினங்களும் ஞானபூஷணம், திருமதி. அம்பிகா தாமோதரம் பண்ணிசை பாடினார். மகாநாட்டின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நடுவில் இம் மாநாட்டினை சிறப்புற ஒழுங்கு செய்த அனைவர்க்கும் குறிப்பாக திரு. ஜெயதேவா, திரு. காங்கேயன் ஆகியோருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்து. இம் மாநாட்டில் "தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் சட்டபூர்வமான சுய நிர்ணய உரிமைப் போராட்டம்" என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்திய திரு. சூ. யோ. பற்றிமாகரன் "தேசிய சுயநிர்ணய உரிமை என்பது இறுதி ஆய்வில் மக்களின் விருப்பமேயாகும். அந்த மக்களின் விருப்பை தீர்மானிப்பதற்கு வழிகாட்டுவதில் தேசியவாதம் முதலாம் இடத்தை வகிக்கிறது" என விளக்கி இச்சுயநிர்ணய உரிமை எல்லா மக்களுக்கும் உண்டு. எனவே அவர்கள் சுதந்திரம் அற்றவர்களாக இருந்தாலும் கூட உண்டு என எடுத்து வாதிட்டார். அது மட்டுமல்ல ஐரோப்பாவின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான மகாநாடானது, தேசிய சிறுபான்மை இனம் எனப்படுபவர்களின் பிரச்சினைகள் ஒரு நாட்டின் உள்விவகாரம் மட்டுமல்ல என்று எடுத்துக்கூறுவதாகச் சொன்னார். இதனால் சர்வதேச உறவுகளை ஏற்படுத்துவதற்கும், மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கும் உதவும் வழியாகவும் அம்மக்களது விடுதலை இயக்கத்தை உள்நாட்டு யுத்தங்களின் போதும் சர்வதேச நாடுகளின் அமைப்புக்கள் அங்கீகரிப்பது வழமையாகிறது. ஆகவே தமிழீழ மக்களது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை 1974ம் ஆண்டின் ஐ.நா. வரைபுக்கமைய "தேசிய விடுதலை இயக்கமாக" சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பது ஒன்று மட்டுமே தமிழ் மக்களின் துன்பம் தீர்வதற்கு முதல்வழி என்றார். மேலும் அமைதிக்கான யுத்தம் எனும் சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்பு நியாயப்பாட்டு சுலோகம் பொய்யானது என்பதனை விளக்குவதற்கு யாழ் குடாநாட்டுக்கு உள்ளேயும் கொழும்பிலும் இந்தியாவிலும் உள்ள தமிழ்ப் பெண்கள் அளித்த சர்வதேச செவ்விகளை மேற்கோள்காட்டியதும் அல்லாமல் ஐக்கியநாடுகள் சிறுபான்மையினர் கமிட்டி அங்கத்தவர் லியோ கூப்பர் *(Leo Kuper - United Nations minority group worker)* ஐ.நா. சபை தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியமையினாலேயே சிங்கள இராணுவம் தமிழர்களை இனக்கொலை செய்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக் காட்டினார். மேலும் 1994 – 1995ம் ஆண்டுக்கான சர்வதேச தந்திரோபாய அறிக்கை விடுதலைப் புலிகளுக்குத்தான் தமிழ்ப் பிரதேசங்களில் உண்மையான இறைமை உண்டு. அவர்களுக்கு இல்லாதது சர்வதேச அங்கீகாரம் ஒன்று மட்டும்தான் என்பதையும் குறிப்பிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச உலகு அங்கீகரிக்க வேண்டிய தேவையையும் அது தமிழ் மக்களது துன்பம் துடைக்க வழியாக அமையும் என்ற யதார்த்தத்தையும் விளக்கினார். அத்துடன் 'நீதியான அநீதியான யுத்தங்கள்' என்னும் நூலை எழுதிய மைக்கல் வல்ஹர் கூறுவது போல, "ஆக்கிரமிப்பு என்பது யுத்தக் குற்றச் செயல்களுக்கு நாம் கொடுக்கும் பெயர் ஆகும். யுத்த நிறுத்தத்தால் மட்டும் அமைதியை உருவாக்க முடியாது. ஏனெனில் ஆக்கிரமிப்பு என்பது அமைதியை நீக்குவதற்கும் ஒன்று. சுதந்திரமும் பாதுகாப்பும் உள்ள சூழ்நிலை தோன்றுவதற்கு ஆக்கிரமிப்பு இல்லா நிலை முன்நிபந்தனையாக உள்ளது". ஆகவேதான் எங்கள் தேசிய தலைவர் பிரபாகரன் சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் விலகலை வற்புறுத்தி வருகின்றார். இந்த உண்மைகளைப் புரிந்து தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று அவர்களுடைய சுதந்திர போராட்ட வீரர்களான தமிழீழ விடுதலைப் புலிகளை ஐ.நா. 1974ம் ஆண்டின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரைப்புக்கமைய அங்கீகரித்து சிறீலங்கா தமிழீழ மக்களுக்கு செய்துவரும் இனப்படுகொலைகளுக்கும் உட்கட்டுமான அழிவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென இந்த சபை உலக நாடுகளையும் ஐ.நா. சபையையும் கோருகிறது" என்றார்.

**- பற்றிமாகரன்**



***FLMN* செயலாளர் நாயகம் சுக்ரீடோ ரேய்ஸ் உரையாற்றுகிறார்**



**பிரித்தானிய நிழல் வெளிவிவகார அமைச்சர் டேரக் பெட்ச்செட் உரையாற்றுகிறார்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அநீதியான உதவி

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிறீலங்கா உளவுப் படையினருடன் இணைந்து சில இந்தியப் பத்திரிகை நிறுவனங்கள் செயல்படுவதாக தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. தமிழீழத்தில் ஆயுதக்கலாச்சாரம் ஒன்றை உருவாக்கும் வழியில் விடுதலைப் புலிகள் செயல்படுகின்றார்கள் எனவும், அது இந்திய தேசிய நலனிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் என்ற ரீதியிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட முனையும் இப் பத்திரிகைகள், இதன் மூலம் இலங்கையில் சிங்களப் பேரினவாதத்திற்கு துணைபோகும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக சிங்கள அரசும் அதன் புலனாய்வுத்துறையும் செயற்படுவதும் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயம் அல்ல. இவ்வாறானதொரு நடவடிக்கையை அவை நீண்டகாலமாகவே மேற்கொண்டும் வருகின்றன. அத்தோடு காலத்திற்குக் காலம் பிரச்சாரம் நலிவடையும் போது, பெருந்தொகையை ஒதுக்கீடு செய்து அதனை முனைப்படுத்தும் நடவடிக்கையில் அவை ஈடுபடுவதுண்டு. இதற்காக உலகின் எப்பகுதியிலும் தமக்குச் சாதகமான வழிமுறைகள், மூலகங்கள் உள்ளதோ அவற்றையெல்லாம் பயன்படுத்துவதோடு பகைமையினால் ஏற்படும் நட்பு சக்திகளுடன் செயலாற்றுவதும் உண்டு. இந்த வகையில், தற்பொழுது இந்தியப் புலனாய்வுப் படையினர், இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றுடன் சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவினர், நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. அதுவும் இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் ஆயுதப் போராட்டம் புதியதொரு கட்டத்தை அடைந்துள்ள நிலையில் சிறீலங்காப் புலனாய்வுத் துறையினர் கொண்டுள்ள உறவானது இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அரசு அக்கறை காட்டுவதாக இல்லை என்ற நிலையிலும் இராணுவத் துன்புறுத்தல்களால் மக்கள் இலங்கையை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கும் காலத்திலும் விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான செயல்பாட்டினை இந்தியப் பத்திரிகை நிறுவனங்கள் மேற்கொள்வது சிறீலங்கா அரசுக்கு மிகவும் சாதகமான ஒன்றேயாகும். இந்தியப் பத்திரிகைகள் சில தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமையானது தற்பொழுதுதான் உருவானதென்ற நிலையல்ல. இந்தியா – சிறீலங்கா உடன்பாட்டிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே சில பத்திரிகை நிறுவனங்கள் இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனவையாக இருந்து வந்துள்ளன. அத்தோடு ஒருசில பத்திரிகை நிறுவனங்கள் இவ்வாறான நிலைபாட்டைக் கொண்டுள்ளவையாக இருந்து வந்துள்ளன. அத்தோடு ஒரு சில பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் இந்திய – சிறீலங்கா சமாதான உடன்பாடு உருவாகுதற்கு முன்பு இந்திய இராணுவத்தினை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்றதான நிலைமையை உருவாக்குவதற்கும் காரணமாக இருந்துள்ளன. இதனால் பின்னர் ஏற்பட்ட அரசியல் விளைவுகளுக்கு காரணமாய் இருந்தனர். ஆனால் இவ்வாறான ஒரு செயற்பாட்டில் இப் பத்திரிகைகள் செயற்படுவது என்பது தவறான கற்பிதத்தின் அடிப்படையிலேயே ஆகும்.




தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் இந்தியத் தேசிய நலனுக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என அவர்கள் கொண்ட கச்சிதம் ஆதாரம் எதுவும் அற்றதாகும். ஆனால், தற்பொழுது அவர்கள் எடுக்கும் செயற்பாடானது கடந்த காலத்தின் தமது சிந்தனைகளில் இருந்து அவர்கள் எதுவிதத்திலும் மாறுபட்டதைக் காட்டுவதாகத் தெரியவில்லை. இவர்களினால் இந்தியாவின் நட்பு சக்தி எது? பகையான சக்தி எது? என்பதை அடையாளம் காணமுடியாது இருப்பதே இதற்குக் காரணம் ஆகும். ஆனால் அவர்களின் இத்தவறான முடிவை ஒத்ததாகவே இந்திய அரசின் முடிவும் இருப்பதினாலேயே இனப்பிரச்சினை விவகாரம் அங்கு காலத்திற்கு காலம் தாக்கத்தை விளைவிப்பதற்கும், இந்தியா இவ் விடயம் பற்றி காலத்திற்கு காலம் சிந்திக்க வேண்டி ஏற்படுவதற்கு காரணம் ஆகும். இந்தியா ஒரு சரியான வழியைக் கடைப்பிடித்திருக்குமானால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருக்காது.

இதைவிடுத்து மீண்டும் மீண்டும் தவறான சிந்தனையின் அடிப்படையில் இந்தியப் பத்திரிகைகள் செயற்பட முனைவதும், சிறீலங்கா புலனாய்வுத்துறையின் நோக்கத்தை நிறைவு செய்வதும் இந்திய தேசிய நலனுக்கு விளைவிக்கும் கெடுதலாகவே இருக்கும் என்பதை உணர்த்துவதற்கு மேற்கு நாடுகளிடம் குறிப்பாக அமெரிக்காவிடம் சிறீலங்கா இராணுவ உதவியைப் பெறுவதில் முனைப்பாக செயல்படுவதைச் சுட்டிக்காட்டலாம். அதாவது தென்னாசியப் பிராந்தியத்துக்குள் அமெரிக்காவிற்கு மற்றுமொரு இராணுவ அனுகூலத்தை உருவாக்க சிறீலங்கா வாய்ப்பளித்திருப்பதைக் குறிப்பிடலாம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இளைஞர்களின் புலம்பெயர் வாழ்வு

## வேரறுகின்ற அபாயம்

ஒரு நாடும் அதன் மக்களும் எதிரியின் முழுமையான ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கும் காலத்தில் அந்தச் சமூகத்தைப் பாதுகாப்பதும், முன்னின்று வழிநடாத்திச் செல்லும் பிரதான பொறுப்பும் அவ்வவ் சமூகத்திற்குரிய இளைய தலைமுறையினரையே சாரும். இக்கடமை தமிழீழத்திற்கு மட்டுமல்ல எல்லாத் தேசிய இனங்களுக்குமே பொதுவானது. தமிழீழப் போர் ஆரம்பித்த காலத்திலிருந்தே எதிரியானவன் நமது இளைய வளங்களை தமிழீழ எல்லையை விட்டுச் சிதறச் செய்வதில் குறிப்பிடத்தக்க வெற்றியை எட்டியுள்ளான். தமிழீழ மக்களின் மொத்தக் குடித்தொகையோடு புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைய தலைமுறையினரின் எண்ணிக்கை ஒப்பீடு செய்து பார்த்தால் நமது மக்களின் வெளியேற்றம் எதிரிக்கு எத்தகைய சாதகத் தன்மையை அளித்துள்ளதென்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்விதம் இலட்சக்கணக்கான இளைஞர்கள் புலம் பெயர்ந்து விட்ட நிலையிலும்கூட சிங்கள அரசு தான் நினைத்துக் கொண்ட இராணுவ வெற்றியை அடைய முடியாது தடுத்தும்; அவர்களை அரசியல் பொருளாதார ரீதியில் பெரும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளியும் வைத்திருப்பது களத்தில் நிற்கும் நமது இளைஞர்களின் வளமும், ஒரு முகப்படுத்தப்பட்ட வழி நடாத்தலுமே என்பதற்கு புதிதாகச் சான்றுகள் வேண்டியதில்லை. நாளும் நாளும் புதிதாகப் போர்க்களம் செல்லும் நமது இளைஞர்கள் எதிரியின் இராணுவ இயந்திரத்தை நிலைகுலையச் செய்துகொண்டிருக்கும் சாதனைகளிடையே நாம் புலம்பெயர்ந்துள்ள இளைஞர்களின் வளம் பற்றியும்; அவர்களின் போர்க்காலக் கடமை; அதற்கான நெறிப்படுத்தல்கள் பற்றியும் சிந்தித்தல் அவசியம்.

சமூகத்தினதும், இனத்தினதும் வெற்றிக்கான விசை தனிமனிதனிலிருந்தே ஆரம்பிக்கிறது. ஆனால், அது கூட்டு வேலைத்திட்டத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் போதுதான் தேசத்தினை உருவாக்கிக் கொள்ளக்கூடிய அசாதரண சக்தியைப் பெற்றுக்கொள்கிறது. தேனீக்கள் ஒவ்வொன்றுமே தனித்தனியாக செயலூக்கம் உடையவைதான் – ஆனால் தேன் கூட்டை அமைப்பதற்கு உதவுவது அவைகளின் கூட்டு முயற்சியே. இதுபோல இளைஞர்கள் சமூக அமைப்பென்பது தமிழீழத்திற்கு வெளியே சிதறிக்கிடந்தாலும், உலகளாவிய ரீதியில் ஓர் கூட்டு வேலைத் திட்டத்திற்கான தகுதிப்பாட்டை உருவாக்கிக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இன்று புலம்பெயர் தமிழ் இளைஞர்களின் சக்தியானது பல்வேறு இடர்ப்பாடுகளுக்குள் சிக்குண்டிருப்பதால் இத்தகைய இலக்கு நோக்கி அபாரத்துவம் நிறைந்த அவர்களது ஆற்றலை நெறிப்படுத்த முடியாது போய் அவர்கள் திறமைகளும் காட்டில் எறித்த நிலவாகிவிடுகிறது.

வாழ்புலப் பின்னணியை மையமாக வைத்து புலம்பெயர் இளைஞர்களை பல்வேறு தளங்களில் ஆய்தல் வேண்டும். இளைஞர் பிரச்சினை என்ற ஒற்றைத் தலைப்புக்குள்ளாக அவற்றை மதிப்பீடு செய்தல் முடியாது. தாய் தகப்பனின் பராமரிப் பற்று தனியாக வாழும் இளைஞர்கள் – இவர்களில் பலர் பொருளாதார காரணிகளுக்காக தமது இளைய வாழ்வை அர்ப்பணித்து வேலை புரிவோர். தாய் தகப்பனுடன் வாழ்ந்து, மேலைத்தேயச் சூழலுக்குள் கரைந்து போகக்கூடிய அபாயத்தை எதிர் நோக்கியுள்ள இளைஞர்களெனவும் இவர்களிடையே இரு தலைமைப் பிரிவுகளை உடனடியாக அவதானிக்கலாம். கூர்ந்து நோக்கினால் இவற்றில் மேலும் பல உப பிரிவுகளை அடையாளங்காணலாம்.

ஏன் எமது இளைய தலைமுறையினரிடையே ஆரோக்கியமான கருத்துப் பலத்தை வளர்த்தெடுக்க முடியவில்லை என்பதற்காக டென்மார்க்கில் பல எழுமாற்றுரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தொகுப்பாகக் கிடைத்த தகவல்களின் படி, மனிதனை ஆளுமை உள்ளவனாக உருவாக்கக்கூடிய கேள்விச் செல்வத்தை பெரும்பாலான இளைஞர்கள் முற்றாகவே இழந்து போயிருந்ததைக் காணமுடிந்தது. மிகமிகக் குறைவான தகவல்களுடனேயே அவர்கள் வாழ்ந்து வருவதும் தெரிந்தது. எவ்வளவுதான் கல்விச் செல்வம் உடையவராக இருந்தாலும், குடும்பத்தினருடன் இணைந்து, தாய் தந்தை, உறவினர், பேரன் பேத்தி, போன்றோரின் தொடர்பால் உருவாக்கப்படும் சிந்தனைகளும், ஆளுமைகளுமே ஒருவனை எதிர்காலத்தில் ஆரோக்கியமான மனிதானாக உருவாக்கும் பிரதான அடிப்படைகளாகும். இத்தகு அவசியமான பக்கம் நமது இளைஞரிடையே பெருமாபாலும் மூடப்பட்ட பக்கமாகவே இருந்து வருகிறது. ஏன் இந்நிலை? ஒரு பிரிவினருக்கும் பெற்றோர் இருந்தும் அவர்களுக்கு பிள்ளைகளை உருவாக்க நேரமற்ற வாழ்வு; அல்லது இயலாமை. மறு பிரிவினருக்கோ பெற்றோரையும் பிரிந்த வாழ்வு.

உறுதியான வாழ்வை உருவாக்க வல்ல இத்தகைய தகவல் வங்கியின் குலைவுபட்ட நிலை இளைஞர்களுடைய வாழ்வை பல்வேறு மட்டங்

ive numbers of sol-
liers, which this
country doesn't
readily have.
CENSORED
For example, the
ast major operation
vas in late April and
arly May, when the

சந்திரிகா அரசு ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் முதன்மை வகிக்கின்றது என்ற கருத்து தென்னிலங்கை அரசியல் வாதிகள், பத்திரிகைகள், அரச சார்பற்ற பொது நிறுவனங்களைச் சார்ந்தோர் பலரதும் அபிப்பிராயமாக இருக்கிறது.

பத்திரிகைத் தணிக்கை மூலம் இராணுவ இழப்புக்களை மறைக்க முயல்கின்றார் என்றால் அதன் பக்க விளைவுகள், அதன் பிரதிபலிப்புக்கள் எப்படிப் பூதாகரமாக எழும்பும் என்பதை அறியாத ஒருவராக இருக்கின்றார் சந்திரிகா. 'சிங்களப் பேரினவாதத்தின் வீழ்ச்சியை வெளிச்சம் போட்டுக்காட்டுவதா? இருட்டறைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


களிலும் பாதிப்படையச் செய்துள் ளது. அறியாமையின் மறு வெளிப்பா டுகளாக பலர் மிக ஆபத்தான காரி யங்களில் இறங்கிவிடக் காண்கிறோம். இவை சிலருக்கு ஆத்திரமூட்டுவதா கவும்; அதேவேளை சரியான அணுகு முறையின்மையால் இளைஞர்களுக் கும் சமூகத்திற்குமிடையே உருவாகும் இடைவெளியானது வருடாவருடம் அதிகரித்துச் செல்வதையுமே காண முடிகிறது. மேலும் இளந்தம்பதியரி டையே உருவாகும் பீதிகலந்த வாழ்வு; ஒழுக்கம் சம்பந்தமாக ஒருவர் மீது மற்றவருக்கு உருவாகும் சந்தேகங்கள், மன அழுத்தங்கள், தமிழருடன் உற வைத் துண்டித்துக்கொண்டு தனிமைப் பட்ட குடும்பங்கள், தற்கொலைகள், வன்முறையென இளைய தலைமுறை யினரின் வாழ்வு திருமணத்திற்குப் பின்னரும் நெருக்கடிகளையே சந்திக்க நேர்ந்து விடுகிறது.

சமூக ஒழுங்கமைப்பிற்காக எண் ணற்ற வாராந்த, மாதாந்த வெளியீடு கள் வந்தாலும் அவற்றினாலும் சிக் கல்களை வெற்றிகொள்ள முடிவ தில்லை. காரணம் இளைஞரிடையே வாசிப்புக்கலை பெரும் வீழ்ச்சி கண் டுள்ளது. தற்போது புலம்பெயர் நாடு களில் வெளிவரும் சஞ்சிகைகளின் எண்ணிக்கையைக் கேட்டாலே பிரமை தட்டும். அதேபோல வாசிப்போர் தொகையைக் கேட்டால் அதைவிடப் பெரிதாகப் பிரமையடையநேரிடும். தமது பிள்ளைகள் ஏன் தபால் எழுதுவதில்லையென தமிழீழத்தில் உள்ள பெற்றோர் பலருக்கு அங்க லாய்ப்பு. இவர்களின் பிள்ளைகள் ஏன் கடிதமெழுதுவதில்லை என்பதை அறிய இரகசியமாகப் பலரை ஒற்றா டியபோது பலர் தமிழை எழுத்துக் கூட்டி வாசிப்பதற்கே பெரும் சிரமப் படுவதை அறிய முடிந்தது. இந்த நிலையில் இவர்கள் எப்படிக் கடிதங் களை எழுதுவது? வேலைத்தளங்களி லும், வீதிகளிலும் பலருடைய சட் டைப்பைகளில் வெளிநாட்டுத் தபால் கள் மின்னக் காணலாம். இவர்கள் பல நாட்களாகத் தமக்கு வரும் கடி தங்களை எழுத்தெண்ணிப் படிக்கி றார்களென்பதை தமிழீழத்தில் உள்ள பெற்றோர் அறிந்திருக்க நியாயமில்லை. இந்நிலையில் புத்தகங்களை வாங்கு வது கௌரவமாகவும்; வாசிக்காமை யும்; வாசிக்கமுடியாமையும் உண்மை யாக இருந்துவருகிறது. எனவேதான் நூல்கள் வழி ஆரோக்கியமான தகவல் களைப்பெற்று வாழ்வைச் சீரமைக்க வும் பலருக்கு வாய்ப்பில்லை.

பெரும்பாலோரின் ஓய்வுநேரங்க ளைச் சீரழிவுச் சினிமாக்களும், ரீ.டீக் களுமே ஆக்கிரமித்துள்ளன. இவற்றின் பிரதான சந்தைகளாக புலம்பெயர் தமிழ் இளைஞர்களே அமைந்திருப் பதை மறுதலிக்க முடியவில்லை. சதை உணர்வுகளைத் தூண்டுவதாகவும், பங்குபற்றாத வெறும் பார்வையாளர் களாக மக்களைச் சித்தரிப்பதையுமே தலைமை உபாயமாகக் கொண்ட இத்தகு சினிமாக்களில் பெரியோ ருக்கு, சிறியோருக்கென எந்தவித பாகு பாடும் கிடையாது. ஓடும் வாகனத் திலிருந்து வெளியே பாய்ந்த சிறுவர்க ளையும்; பாடசாலை மாணவர்களின் ஜாக்கெட்டுக்களைத் தீயிட்டுக் கொழுத்திய சிறுவர்களையுமே இன்று இச்சினிமாக்கள் உருவாக்கிக்கொண் டிருக்கின்றன. ஆடை முதல், ஆசை வரை வழிகாட்டியாக சினிமாவே இருக்கிறது. நிறையப் பேரின் வீடுக ளில் சின்னத்திரையாகக் குடிபுகுந்தி ருக்கும் இச்சினிமா எண்ணற்ற தவறுக ளுக்குத் தூண்டுதலாயுமுள்ளது.

இவ்விதமாக நாம் சாதகமற்ற பக் கங்களையே தொடர்ந்தும் நோக்கிச் செல்வதும் பொருத்தமானதல்ல. கல்வி, தொழில்நுட்பம், விளையாட்டு, கணணி, கலைகள் போன்றவற்றில் மிக ஆரோக்கியமான வளர்ச்சிகண்ட இளைஞர் குழுவொன்றையும் புலம் பெயர் நாடுகளில் நாம் பெற்றிருப்பது அதிர்ஷ்டவசமானது என்பதை மறுப் பதற்கில்லை. எனினும் புலம்பெயர் வாழ்வு முடிவிலி நிலைகொண்டது. எதிர்காலத்தில் சாதகத்தை விட கூடு தலாகப் பாதகத்தன்மைகளையே கொண்ட வாழ்வாகும். எனவேதான் நெருக்கடிகளின் இறுதிப்புள்ளியைத் தொட்டுவிட முன் இளைஞர் சக்தியை ஒன்றுதிரட்ட வேண்டியதே இன்று வெளிநாடுகளில் முதன்மைப்படுத்த வேண்டிய சமுதாயக் கடமையாகும். திறந்தவெளிச் சிறைகளாகிக்கொண்டி ருக்கும் புலம்பெயர் வாழ்வை என்ன விலை கொடுத்தாயினும் ஆரோரக்கி யப்படுத்தியாக வேண்டும். நெல்சன் மண்டேலா 27 வருடங்கள் சிறையில் இருந்தாலும் தமது மக்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கைக்காகவே சகல இம்சைகளையும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தார். இறுதியில் அவர் தனது சிறைவாழ்வை அர்த்தப்படுத்திக் கொண்டார். இதுபோல புலம்பெயர் இளைஞர்களும் தமது வாழ்வுக்கு ஒரு விடிவுப் புள்ளியைத் தேடிக்கொள்ள வேண்டும். அது அவர்களின் தாயக விடிவாகவே இருத்தல் வேண்டும். தாயகத்தில் புதிது புதிதாகப் போர்க களம் புகும் இளைஞர்களின் தியாகத் திற்கும் மதிப்புக் கொடுக்கும் ஒரு வாழ்வை வாழ்ந்து காட்ட வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை புலம் பெயர்ந்த இளைய தலைமுறையினரி டையே ஏற்படுத்த வேண்டியது அவ சியப் பணியாகும்.

**- கி.செ.துரை**

## பொய் ஒற்றைக் காலில் நிற்கிறது மெய்க்குக் கால்கள் இரண்டு


ldiers held o
ainst the hordes
ousands of Tiger
NSORED
CENSORED
ENSOREDcou
ly land a few hu
ed Special Forc
diers several mil

குள் இட்டுப் பூட்டுங் கள்' என, இந்தத் தணிக் கையை மீறிச் செயற் படும் பத்திரிகைகள் மீது சீற்றம் கொண்டுள்ள சந்திரிகா குமா ரணத்துங்கா, தன்னுடைய அதிகா ரத்தின் மூலம் அவற்றைத் தடை செய் யவும் தயங்கமாட்டேன் என அத்தன கலையில் முழங்கவும் செய்திருக்கி றார். இதை அவர் செய்வதற்கு கிஞ் சித்தும் தயக்கம் காட்டமாட்டார்; அவர்களது அரச குடும்ப பாரம்பரி யமாக அது இருக்கும்; அவரது அதி காரத்தின் மூலம் உண்மைகளை மூடி மறைப்பது அவ்வளவு கடினமாக இருக்காது; அது அவர்களுடைய பரம் பரை வழி வந்த கலை என்ற கருத்து உள்ளது. எது எப்படியிருப்பினும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கி ரமசிங்க சும்மா விடுவதாயில்லை. சந்திரிகாவின் தேர்தல் பொய்ப்பிரச் சாரம், சிங்கள மக்களை ஏமாற்றி வோட்டுப் பொறுக்கி ஆட்சி பீடம் ஏறிய கதை – இராணுவ இழப்புக் களை மூடி மறைத்து வருகிற விதம், உள்ளூருக்கு ஒரு பொய், வெளி யூருக்கு இன்னொரு பொய் போன்ற பித்தலாட்டம் – பத்திரிகைத் தணிக்கை – மிரட்டல்கள் எனத் தொடரும் பல குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போகிறாராம்.

எதிர்ப்பலைகளை, விளைவுகளைச் சந்திக்கின்ற காலத்தை சந்திரிகாவே உருவாக்கி விட்டிருக்கிறார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மோத்ஹவுஸன்

அசைவுகளில் உயிர்த்து
மனிதத்துக்கு அழைப்புக் கூறும்
கணணிகள் கோர்க்கப்பட்ட
மௌனவெளிகளிலும்
சனத்திரள் நெழியும் முனைகளிலும்
"மோர்க்கன், குட்தன்தாக்"
எந்த வார்த்தையேனும்
என்னிடமிருந்தெளின்
எதிரொலியாய் முடிவுறும்.

கரைந்து வடியும் பனிப்பூக்களை அழைந்து
கனவுகளைக் கிழித்து எழும்
ஒவ்வொரு கணமும்
ஒரு குரல் உரத்துக் கேட்கும்.

"எங்கள் குழந்தைகள் செல்லும் வீதிகளில்
அன்னையர் தொழும் ஆலயங்களில்
தம்பதியராடும் காபரேயரங்குகளில்
உனக்குள் புகுந்து வரும் சுவாசம்
அசுத்தமாய்த் தேங்குகிறது"

இலைகள் இறைத்து
மரங்கள் தூங்கும் இந்த வேளையுடன்
நிறக்குருடாகி
வரும் வசந்தம் பாடும்.

கறுப்பானது இருட்டு
அதைத் துரத்துங்கள்
இல்லையேல்
எங்கள் வெள்ளையும் மாற்றுக்குறையும்

இரங்குதல் பொம்மைக்கும்
நிழல்கொடுத்தல் பிளாஸ்ரிக் மலருக்குமே.
கறுப்பனே உனக்கல்ல
செவிப்பறையில் ஓங்கியறையும் குரல்.

உமிழ்நீர்கள் சுரந்து
பெருவெள்ளமாகி
மோத்ஹவுஸன் வீதிகளையும் நனைத்து
யூதரத்தம் தோய்ந்த மண்ணிலும்.

அப்பாவின் மரணத்தை அம்மாவும்
அம்மாவின் மரணத்தை மகனும்
மகனின் மரணத்தை
மனைவியும் இரண்டுமாத மகவுமாக
கண்முன்னே தரிசித்து
முடிவில் யூதயினமாகவே
உயிரிழந்து போனது எத்தகையது?

மரணக்களிப்பில்...
தாயின் முகத்தினைப் பார்த்துப் பார்த்து
முலைகளைக் கவ்வி
எதுவுமே புரியாது
இரண்டு மாத பச்சை மழலை சிரித்தது.
யூதப்பூதங்களின் வேசமிட்டு
மரணம் கூத்தாடுதோ....
சிரி... சிரி....
மோத்ஹவுஸனுள் எழும் குரல் அமிழும்.

மீளவும் அரை நூற்றாண்டுக்குள்
பேய் உருக்கொண்டு
ஓங்கிவளர்ந்த நாசிச்செடிகளால்
நாடே நிரம்பி வழிகிறது.

மனிதம் ஒடுங்கிய உலகத்தினுள்
ஏதாவதொரு மோத்ஹவுஸனுள்
நானும், என் இலங்கையரும்
காற்றோடு காதலாய் புகுந்து
உயிர்தின்னும் நச்சுவாயுவின்
வரவுக்காய் காத்திருப்போம்
யூத சந்ததியாக....

—செல்வமதீந்திரன்

மோத்ஹவுஸன் என்பது ஒஸ்திரியா நாட்டிலிருக்கும் ஒரு முன்னாள் உயிர்வதைமுகாம். ஹிட்லரின் காலத்தில் இந்த முகாம் உலகப் புகழ்பெற்று விளங்கியது. இங்கு ஒரு இலட்சத்துப் பதினோராயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். கொலைகள் பலவிதமாக நடைபெற்றன. எனினும் 95,000 க்கு மேற்பட்ட யூத மக்கள்இங்கு நச்சுவாயு செலுத்திக் கொல்லப்பட்டார்கள். இன்று இந்த முகாம் சர்வதேச மாணவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மோர்கன், குட்தன்தாக் என்னும் இரு ஜேர்மனியச் சொற்களும் முறையே காலை வணக்கம், நல்லநாள் என்னும் கருத்தைப் பெறுகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# நகரமும் புலிகளும்

"கிளிநொச்சி நகர் கைப்பற்றப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளின் கடைசிக்கோட்டையும் வீழ்ச்சி கண்டுவிட்டது. இனிப் புலிகள் காடுகளுக்குள் செல்வதைத் தவிர வேறு வழியில்லை". இதுவே கிளிநொச்சி நகரினுள் பிரவேசித்ததும் சிறீலங்கா அரசின் பிரச்சாரத்தில் முக்கியமாக உள்ளது. யாழ் குடாநாட்டின் மீது 50 நாள் படையெடுப்பை நடாத்திவிட்டு விடுதலைப் புலிகளில் 70 வீதமானோர் ஒழிக்கப்பட்டுவிட்டனர். மீதமுள்ள 30 விகிதத்தையும் விரைவில் ஒழித்துக்கட்டி விடுவோம்" என சிறீலங்கா அரசு பிரச்சாரம் மேற்கொண்டது. ஆனால் முல்லைத் தீவு படைத்தளத்தை தாக்கி அழித்ததன் மூலமும் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையை தோற்கடித்ததன் மூலமும் இது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், தற்பொழுது சொல்லப்படும் பிரச்சாரமானது, முன்னையதைவிட மிகவும் பலவீனமானதாகும். யாழ். குடாநாட்டின் மீது இராணுவம் படையெடுத்தபோது புலிகள் தந்திரோபாய ரீதியில் விலகிக்கொண்டதை சில சமயம் சாதாரண மக்கள் புரிந்துகொள்ள முடியாது இருக்கலாம். ஏனெனில் பல இராணுவ ஆய்வாளர்கள் கூட இதனைச் சரியாக மதிப்பீடு செய்ய முடியாமலேயே இருந்தனர். ஆகையினால் அரசு மேற்கொண்ட பிரச்சாரம் சிறிது காலத்திற்காவது வாழக்கூடியதாக இருந்தது. ஆனால், தற்போது மேற்கொள்ளப்படும் பிரச்சாரம் மக்கள் உட்பட எவருக்குமே கூறித்தான் விளங்க வைக்கவேண்டிய விடயம் ஒன்றல்ல. கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களும், பரந்த நிலப் பரப்பைக் கொண்ட வன்னிப் பெரு நிலப்பரப்பின் ஒரு பகுதியில் குடியேறத் தொடங்கியுள்ளனர். ஒருவகையில் பார்த்தால் வன்னிப் பெருநிலப்பரப்பின் சில பகுதிகளில் செறிந்து வாழ்ந்த மக்கள் பரந்து பட்டு வாழவேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றே கூறலாம். இதேபோன்று மக்களின் இடப்பெயர்வுக்கு ஏற்ப வர்த்தக நிலையங்களும், சேவைத்துறைகளும் இடம் பெயர்ந்துள்ளது எனலாம். இந்த நிலையில், அதாவது மக்கள் இராணுவத்தினரிடம் இருந்து தப்பி புதிய குடியிருப்புகளையும், வர்த்தக நிலையங்களையும் அமைத்து வாழ முயன்று கொண்டிருக்கும் வேளையில் விடுதலைப் புலிகள் காட்டுக்குள் ஓடவேண்டிய நிலையுள்ளது என்னும் பிரச்சாரம் எத்தனை தூரம் எடுபடக்கூடியது?

இவை ஒருபுறம் இருக்க விடுதலைப் புலிகள் இரு மாதங்களுக்கு முன்னர் ஒரு மாவட்ட தலைநகரை மீட்டுள்ளனர் என்பது மறைக்க முடியாத உண்மையான ஒரு சம்பவமாகும். அதாவது, முல்லைத்தீவு நகரமானது புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருப்பதனாலும் இராணுவம் முல்லைத்தீவில் இருந்தபோது பிரதேசச் செயல்பாடுகளைக் கவனிக்க புதுக்குடியிருப்பு தலைநகராக இருந்ததினாலும் இரு நகரங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் தற்போது இருக்கையில், 'ஒரு நகரமும் புலிகள் கட்டுப்பாட்டில் இல்லை' என்பது அரசின் அர்த்தமற்ற பிரச்சாரமாகவே இருக்கும்.

இதைத் தவிர, நகரங்கள் எவையும் தானாக உருவாகுபவை அல்ல, ஒரு இடத்தில் குடியேறி வாழும் மக்களினால் உருவாக்கப்படுபவை. மக்கள் இன்றி நகரங்கள் இல்லை. ஆகையினால், மக்கள் இல்லாத சமயத்தில் நகரங்கள் உருவாகவோ, இயங்கவோ முடியாது. இந்த நிலையில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக செறிவாகத் தங்கியுள்ள பகுதிகளில் படிப்படியாக நகரங்கள் உருவாகுவதைத் தவிர்க்கமுடியாது. இந்த நிலையில் நகரங்கள் யாவும் தங்கள் கையில் வந்துவிட்டது என்பதும் இனிப் புலிகள் காட்டிற்குள் செல்லவேண்டும் என்னும் அரசின் பிரச்சாரம் சிறுபிள்ளைத்தனமானது மட்டுமல்ல, யதார்த்தத்திற்கு மாறானதும் கூட. வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள சேவைத் துறைகள் பல தொடர்ந்தும் புலிகளின் காட்டுப்பகுதியில் இருக்கின்றது என்பதே இன்றைய நிலையாகும். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, ஒரு விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளின் அனைத்து நிர்வாக அமைப்புக்களுக்கும் நகரங்களில் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்பதும் அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் செயலிழந்து போய்விடுவார்கள் என்பதெல்லாம் அர்த்தமற்ற பேச்சுக்களாகும். போராளி அமைப்புக்கள் இவற்றைக்கொண்டு தமது செயற்பாடுகளைத் திட்டமிடுபவையே ஒழிய அரச இராணுவங்களைக் கொண்டு தேவையான வசதிகள் கொடுக்கப்பட்டால் மட்டுமே செயற்படுபவை அல்ல.


காடாகிய நகரம்


நகரமாகும் காடு


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கை அரசின் பிரச்சாரமும் சர்வதேசக் கணணி வலையும்

கடந்த சில காலமாக பல்வேறு செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகளால் வெளியிடப்படும் பலதரப்பட்ட செய்திகளுக்கு *(source)* மூல இடமாக சர்வதேச கணணி வலை *(INTERNET)* சுட்டிக் காட்டப்படுவதை நன்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இச்செய்திகளை பாகுபடுத்திப் பார்க்கையில் சிலவற்றை வெறும் விஷமத்தனமான பிரச்சாரம் என அடையாளம் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. இதற்கான காரணம் பல்வேறு சக்திகளும் தமது சுயநல நோக்கிற்காக சர்வதேச கணணி வலையை பயன்படுத்துவதேயாகும். இலங்கை அரசும் சர்வதேச கணணி வலையை தனது சுயநல நோக்கிற்காக தவறாக பயன்படுத்தும் சக்திகளில் ஒன்று என்றால் மிகையாகாது. இவற்றை விரிவாக பார்க்குமுன் கணணி வலையும் அதில் செய்தி பரவும் முறைகள் பற்றியும் சற்று சுருக்கமாகப் பார்ப்போம்:



சர்வதேச கணணி வலை *(INTERNET)* என்பதை உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்டுள்ள ஒரு கணணி வலை *(Net work)* என்று கூறலாம். இதில் 150–இற்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 30,000 – 40,000 இணைக் கணணி வலைகள் *(Sub networks)* இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 40–90 மில்லியன் மனிதர்களுக்கு இதைப் பயன்படுத்தும் வசதி *(access)* உண்டு. கணணி வலையில் செய்தி ஊடகமாக விளங்கும் பகுதிகளைப் பார்ப்போம்:

1. இலத்திரனியல் கடிதம் *(E-Mail - Electronic Mail)*


இது கணணி வலையில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் பகுதியாகும். இதில் தினமும் ஏறக்குறைய 3 மில்லியன்களுக்கு அதிகமான கடிதங்கள் பரிமாறப்படுகின்றன. அத்துடன் 50 மில்லியன் மனிதர்களை இதன் மூலம் தொடர்புகொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இலத்திரனியல் கடிதத்தின் சிறப்பு எதுவெனில் பூமியின் எந்தப் பக்கத்தில் உள்ளவருக்கும் (கணணி வலை வசதியுடைய) கடிதங்கள், செய்திகள் மற்றும் படங்கள் என்பவற்றை கணநேரத்தில் அனுப்ப கூடியதாகவுள்ளதேயாகும்.

2. உலகளாவிய வலை *(WWW - World wide web)*

இது கணணி வலையில் மிகவும் பிரசித்தமான, மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு பகுதியாகும். இதில் ஒரு குறிப்பிட்ட கணணியில் *(server)* கட்டுரைகள், படங்கள், செய்திகள் அல்லது முழுதாக ஒரு தினப்பத்திரிகையை வைப்பதன் மூலம் அவற்றை உலகெங்கிலும் உள்ள கணணி வலையைப் பயன்படுத்துபவர்களினால் எட்டக்கூடியதாக இருக்கும். *(Home page system)*. ஆராய்வு நிறுவனமான IDC –இன் 23.09.1996 வெளியிடப்பட்ட கணெக்கெடுப்பின்படி 71.9 மில்லியன் இப்படியான பகுதிகள் *(Home pages)* உள்ளன.

3. கலந்துரையாடல் பகுதிகள் *(USENET, NEWS GROUP)*

இதில் ஏறக்குறைய 13,000–க்கும் அதிகமான கலந்துரையாடல் பகுதிகளில் பல்வேறு விடயங்களைப் பற்றி பல மில்லியன் மனிதர்கள் கலந்துரையாடக்கூடியதாக உள்ளது. கணணி வலையைப் பயன்படுத்தும் அத்தனை பேரும் இவற்றில் கலந்துகொள்ள முடியும். இதில் இலங்கைப் பிரச்சினை பற்றி உரையாடப்படுவது, குறிப்பாக, இரு கலந்துரையாடல் பகுதிகளில் எனலாம். அவை, *SOC. Culture.tamil* மற்றும் *Soc.culture.Sri-lanka* என்பனவாகும்.




www.tamileelamarchive.com

4. இலத்திரனியல் கடிதங்கள் மூலமாக அனுப்பப்படும் செய்திகள் (*circle, mailing list*)

ஒரு குறிப்பிட்ட செய்திக் குழுவிற்கு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி செய்தி தொடர்ச்சியாக வேண்டும் என விருப்பத்தை தெரிவிக்கும் பட்சத்தில் (*subscribe*) இலத்திரனியல் கடித மூலமாக செய்திகள் தொடர்ச்சியாக பெறமுடியும். (இப்படியாக கலந்துரையாடல்களும் செய்யலாம்)


இவ்வூடகங்களுக்கூடாக தினந்தோறும் பல்லாயிரம் விடயங்கள் பரிமாறப்படுகின்றன. அநேகமானவை குறிப்பிட்ட செய்திகளைப் பெற மிகவும் உதவியாயிருக்கின்றன. இதைவிட மாணவ / மாணவியர், பத்திரிகை நிருபர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுளோர் அத்தனை பேருக்கும் அவர்களுக்கு தேவையான கட்டுரைகள், செய்திகள், புள்ளி விபரங்கள், ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் பல்வேறு விடயங்களை கண நேரத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

இருந்த போதிலும் உண்மையான கட்டுப்பாட்டு விதிகள் எதுவும் இல்லாதபடியால் யார் வேண்டுமானாலும் இவற்றை தமற்கேற்ற முறையில் பயன்படுத்தி செய்திகளை திரிந்து வெளியிடவோ அல்லது இல்லாத ஒரு செய்தியை வெளியிடவோ கூடிய நிலையும் கணணி வலையில் உள்ளது. மொத்தத்தில் சர்வதேச கணணிவலையை கட்டுப்பாடற்ற குழப்பமான (*Chaotic*) ஒரு சமூகத்துடன் ஒப்பிடலாம்.

கணணி வலையில் செய்தி அனுப்புவர் / வெளியிடுபவர் கட்டாயமாக தமது சொந்தப் பெயரையோ அல்லது முகவரியையோ பயன்படுத்த வேண்டியதில்லை. இந்நிலையும் உருவாக்கப்பட்ட / திரித்த செய்திகளை வெளியிடுபவர்களுக்கு மிகவும் இலகுவான சூழ்நிலையையே தருகின்றது.

இலங்கை அரசு புலிகளுக்கெதிரான சர்வதேசப்பிரச்சாரத்தில் சர்வதேச கணணி வலையை நன்கு பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது. சிறிய நாடான இலங்கை சில பெரிய நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் மிகுந்த செலவில் பரந்த அளவில் கணணி வலையை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

மேலும் கணணி வலையின் கட்டுப்பாடற்ற தன்மையை இலங்கை அரசு நன்கு பயன்படுத்தி செய்திகளைத் திரித்தோ அல்லது உருவாக்கியோ சர்வதேச ரீதியில் புலிகளின் மேல் தப்பான அபிப்பிராயம் ஏற்பட மிகுந்த முயற்சி எடுப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதைவிட, ஒரு செய்தி உருவாக்கப்பட்டு கணணி வலையில் உலாவவிடப் படுகின்றது. பின் ஒரு பத்திரிகையாளரோ அல்லது ஒரு அரசியல்வாதியோ அச்செய்தியை "கணணி வலையை" ஆதாரம் காட்டி வெளிக்கொண்டு வரும் சாத்தியம் சமீப காலத்தில் பலரினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்படியான ஒரு அர்த்தமில்லாத, உண்மைக்குப் புறம்பான செய்தியை இலங்கை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் "கணணி வலையை" ஆதாரம் காட்டி சமீபத்தில் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.




இலங்கை அரசினால் இவ்வகையில் திரித்து மற்றும் உருவாக்கப்பட்டு உலா வரும் சில செய்திகளைப் பார்ப்போம்:

இலங்கை அரசுக்கு சொந்தமான டெய்லி நியூஸ் (*Daily News*) தினப் பத்திரிகை *21.09.96* அன்று "பயங்கரவாத குண்டு வெடிப்புக்கள் பற்றியும் அதற்கு எதிராக உலகளாவிய ரீதியில் ஒரு திட்டத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபை (*UN - United Nation*) ஒரு கூட்டத்தைக் கூட்டப்போவதாக" எழுதியது. மேலும் "பயங்கரவாதக் குண்டுகளினால் பாதிப்படைந்த நாடுகள் அமெரிக்கா, சிறீலங்கா, பாகிஸ்தான், சவூதி அரேபியா மற்றும் துருக்கி என்பனவாகும்" எனவும் எழுதியது.


செய்தியின் ஆரம்பத்தில் இப்பந்திகளையும் பின்வரும் பகுதியில் இக்கூட்டத்தைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபை பேச்சாளர் சில்வானா போ (*Sylvana Foa*) கூறிய விபரத்தையும் எழுதியிருந்தது. இச்செய்தியை படிக்கும் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையோ அல்லது ஒரு வெளிநாட்டவரோ "ஐக்கிய நாடுகள் சபையே புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகக் கருதுகின்றது" என்றே தவறாக விளங்கிக்கொள்வர். அத்துடன் இச்செய்தி சர்வதேச ரீதியில் மற்றைய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் போது பல மில்லியன் மக்களால் இச்செய்தி படிக்கப்பட்டு, தவறாக விளங்கிக்கொள்ளப்படும் அபாயமும் உள்ளது. டெய்லி நியூசில் இச்செய்தி கணணி வலையினூடாக உலகெங்கும் பரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேபோல சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் பல்வேறு செய்திகள் வெளிவிடப்பட்டுள்ளன; வெளிவிடப்படுகின்றன. இன்னொரு உதாரணமாக இலங்கை அரசு சார்பான "லங்கா வெப்" (*Lanka web URL:http: ilwww.Lankaweb.com1*) இன் பிரச்சாரங்களைக் குறிப்பிடலாம். லங்கா வெப் வழமையாக இலங்கைச் செய்திகளை சர்வதேச செய்தி நிறுவனங்களிடம் இருந்து எடுத்து கணணி வலையில், தம் பகுதியில் பிரசுரிப்பர். இச்செய்திகளில் புலிகளைப் பற்றி போராளிகள் (*Rebels - Guerillas*) என்று

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருப்பவற்றை மட்டும் "பயங்கரவாதிகள்" (*terrorists*) என லங்கா வெப்பினர் மாற்றிவிடத் தொடங்கினர். ஏனெனில் லங்கா வெப்பின் செய்திகளைப் படிக்கும் ஒருவர் சர்வதேச செய்தி நிறுவனங்களான AP, AFP, REUTER மற்றும் சர்வதேச பத்திரிகைகளை என்பன புலிகளைப் பயங்கரவாதிகளாகவே கருதி எழுதுகின்றன என்ற மாயையை உருவாக்குவதற்காகும். அதிர்ஷ்டவசமாக தமிழன்பர் ஒருவர் சர்வதேச செய்தி நிறுவனங்களிடம்




இம் மோசடியை எடுத்துரைக்க, லங்கா வெப்பும் செய்திகளை திரிப்பதை நிறுத்துமாறும் பணிக்கப்பட்டது.

இதைவிட இலங்கை அரசு சர்வதேச ரீதியில் புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டுவதற்கு பெரும் பிரயத்தனம் எடுத்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக உலகில் நடக்கும் பயங்கரவாதச் சம்பவங்களில் எல்லாம் புலிகளை தொடர்புபடுத்த முயற்சிப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வரிசையில் அமெரிக்க TWA விமானம் 'லாங் ஐலண்ட்'ற்கு (*Long Iland*) வெளியே விழுந்தவுடன் அமெரிக்க பெயர் கொண்ட ஒருவரால் (அநேகமாக மேற்கத்தைய போலிப் பெயர்களே பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில் செய்திகளைப் படிப்பவர்களுக்கு அது நம்பிக்கை அளிப்பதாக இருக்க வேண்டும்.) 28.07.1996 அன்று "விடுதலைப் புலிகள் சம்பவத்திற்கு உரிமை கோரியுள்ளதாக" ஒரு கட்டுரை பல்வேறு கலந்துரையாடல் பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.


இதேபோல 27.07.96ல் பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு சிங்களவரால் *soc.culture.usa, soc.culture.german, soc.culture.british, soc.culture.french, coc.culture.tamil, soc.history.war.misu* ஆகிய கலந்துரையாடல் பகுதிகளுக்கு புலிகளை அட்லாண்டா குண்டு வெடிப்பு மற்றும் TWA விமான விபத்துடன் இணைத்து ஒரு கட்டுரை அனுப்பப்பட்டது. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் இக் கட்டுரை தமிழர் அதிகமாக வாழும் நாடுகளில் கலந்துரையாடல் குழுக்களை தெரிவுசெய்து அனுப்பப்பட்டுள்ளமையாகும். இருந்தபோதிலும் இதற்கு பதிலளித்திருந்த இரு ஜெர்மனியர்கள் சிங்களவரை கண்டித்து எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமல்லாமல் இலங்கை அரசு தனக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு சிறு உதவிகளையும் பெரிதுபடுத்தி "புலிகளுக்கு எதிரான போருக்கு உதவி" என்று உலகெல்லாம் பிரச்சாரம் செய்வதையும் நன்கு அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பன்னிரண்டு அமெரிக்க இராணுவத்தினரின் இலங்கை வருகையை "விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அமெரிக்காவும் நேரடியாகப பங்குபற்றுகின்றது" என்ற ரீதியில் உலகமெங்கும் பிரச்சாரம் செய்ததும் மற்றும் சமீபத்தில் அமெரிக்க அரசின், பயங்கரவாதத்திற்கு எதிரான இணைப்பாளர் வில்கொக்சின் (*Wilcox*) கொழும்பு வருகையையும் நன்கு பயன்படுத்தி "புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அமெரிக்கா உதவுகின்றது" என்றதுமான மாயைகளை உருவாக்கி சர்வதேச ரீதியில் புலிகள் மேல் குழப்பம் உண்டாக்கப்படுகின்றன. இது இப்படியிருக்க திரு. வில்கொக்ஸ் தனது உரையில் புலிகளைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படியாக இலங்கை அரசால் உருவாக்கப்படும் மாயையில், வருத்தம் தரக்கூடிய விடயம் என்னவென்றால் சில செய்தி நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் என்பன ஆதாரமில்லாத நிலையிலும் உருவாக்கப்பட்ட / திரித்த செய்திகள் வெளியிடுவதாகும். உதாரணமாக 06.09.1996 ஏசியா வீக் (*Asia Week*) சஞ்சிகை தனது உலகப் பகுதியில் எழுதியிருந்த "*counter terrorist measure*" என்னும் சிறு கட்டுரையை குறிப்பிட்டலாம். இதில் விடுதலைப் புலிகள் ஏடு, 'அமெரிக்காவை இனப் படுகொலைக்கு துணைபோக வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதை இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சிச் செய்திச் சேவை திரித்து கூறிய "அமெரிக்கா இலங்கைக்கான உதவிகளை நிறுத்தாவிடில் யுத்தத்தை வாஷிங்டன் கொண்டு போவோம்" என திரித்துக்கூறப்பட்ட ரூபவாஹினியின் செய்தி மாத்திரமே பிரசுரிக்கப்பட்டு, அதன் பார்வையிலேயே முழுக் கட்டுரையும் எழுதப்பட்டிருந்தது. இச்செய்தியும் கணணி மூலம் உலகெங்கும் பரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக சர்வதேச செய்தி நிறுவனங்களையும் பத்திரிகைகளையும் குழப்ப நுணுக்கமாக உருவாக்கப்படும் செய்திகளை சர்வதேச செய்தி நிறுவனங்களும் பத்திரிகைகளும் அடையாளம் கண்டு தவிர்க்க வேண்டும். கணணி வலையினூடாக பரப்பப்




படும் பொய்ச்செய்திகளை ஆதாரம் காட்டி எழுதுதலும் தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு தமிழர் அனைவரும் ஒத்துழைத்து இவ்வகையான செய்திகளை அடையாளம் கண்டு அவற்றை உரிய செய்தி நிறுவனத்திற்கு பத்திரிகைக்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

—பிரேம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# இருண்ட உலகமாக யாழ். குடாநாடு



யாழ் குடாநாடு இருண்ட உலகம் போல் ஆக்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெறும் சம்பவங்கள் எவையும் வெளியில் வருவது மிகவும் அரிதாகவே உள்ளது. இதற்கு வெளியுலக்தினுடனான யாழ் குடாநாட்டின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதோடு குடாநாட்டினுள் பாதுகாப்பு என்ற ரீதியில் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கையும் ஒரு நிலை உருவாகக் காரணமாகும். யாழ் பிரதேசம் ஒரு குடாநாடாகும். இருப்பினும் கூட சிறிலங்கா இராணுவத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளது போன்ற நிலையே உருவாகியுள்ளது. அங்கு செல்லக் கூடிய தரைவழிப்பாதைகள் யாவும் இராணுவத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. சிலசமயத்தில் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படினும் அவர்கள் சுதந்திரமாக செய்திகள் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இராணுவ தரப்புள்ள இடத்திற்கு மட்டுமே செல்வதற்கும் இராணுவம் குறிப்பிடுபவர்களைச் சந்திப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அதாவது சகலதும் இராணுவத்தின் மேற்பார்வையிலேயே நடத்தப்படுகின்றது.

இவ்வாறாக வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளமை மட்டுமல்ல யாழ்குடாநாட்டுக்குள்ளேயே மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். இதனை ஒரு புறம் இராணுவம் அமைத்துள்ள மண் அணைகளும், காவல் அரண்களும் தடைசெய்வதாக இருக்கின்றன. மறுபுறம் பிரதேசம் விட்டு பிரதேசம் செல்ல இராணுவம் அறிமுகம் செய்துள்ள அறிமுக அட்டைகளும், இராணுவ விசாரணையும் பெரும் தடையாக உள்ளன. அதாவது பாதுகாப்பு என்ற பேரில் கிராமங்களை ஊடறுத்து இராணுவம் அமைத்துள்ள அரண்கள் வலிகாமம் போன்ற பிரதேசங்களை மட்டும் மூடுவதாக இருக்கவில்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரே கிராமத்தைச் சேர்ந்த மக்களை துண்டாடுவதாகவும் உள்ளது. அத்தோடு தகவல் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்துபவையாகவும் உள்ளது. இதே சமயம் ராணுவத்தின் காவலரண்கள் மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு தமது நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு கெடுபிடிமையங்கள் உள்ளன. அத்தோடு தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் எனப்பிரதேசத்துக்குப் பிரதேசம் பயணம் செய்வதனால் அமுல் செய்யப்பட்டுள்ள இராணுவத்தினரின் அனுமதி முறை 'பாஸ்' முறை மிகவும் கடுமையானது ஆகவும் உள்ளது. சகலரும் அவ்வாறு இடம் மாறிச் செல்ல அனுமதிக்கப்படாததோடு குறுகிய காலம் மட்டுமே அதற்கு வழங்கப்பட்டுள்ளது.



இதே சமயம் மக்களும் நேரடியாகத் தங்களைப் பாதிக்கும் தம்முடன் சம்பந்தப்பட்ட விடயங்களை தவிர வேறு விடயங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள விரும்புகின்றனர். இவ்வாறான பேச்சுக்கள், நடவடிக்கைகள் தமக்குப் பாதகமாக மாறி விடலாம் என உள்ள அச்சமும் இதற்கு காரணமாகும். இந்த நிலையில் யாழ் குடாநாட்டில் செயல்படுத்தப்படும் ராணுவ அட்டூழியங்கள் சில மட்டுமே வெளிவருகின்றன. அதுவும் காலம் கடந்தே வெளி வருபவையாக இருக்கின்றன. இதனால் இச்செய்திகள் வெளிவரும் போது அவை பழைய விடயங்களாய் ஆதாரம் தேட முடியாத பிரச்சினைகளாக இருக்கின்றன. இவ்வாறான சிறிலங்கா அரசின் நடவடிக்கையானது தமிழர்கள் மீதான ஒடுக்கல் நடவடிக்கை என்பதில் ஐயம் இல்லை. யாழ்குடாநாட்டை ஒரு இருண்ட உலகமாக ஆக்குவதன் மூலம் அங்கு இன ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு தனது பிடியை இறுக்கமாக்கவே விரும்புகின்றது. அரசின் இத்திட்டத்தை, தற்பொழுது அரையும் குறையுமாக வெளிவரும் செய்திகள் உணர்த்துபவையாக உள்ளன. கைதுசெய்தலும் காணாமல்போவதும் வழமையான நடவடிக்கையாக மாறி வருவது இதற்கு சிறப்பான உதாரணமாகும். ஆனால் 1990–களின் ஆரம்பத்தில் கிழக்கிலிருந்த நிலையை அரசு தோற்றுவிக்க முனைவது ஆரோக்கியமான நிலையாக சந்திரிகா அரசுக்கு உதவக் கூடியதாக நிச்சயம் இருக்காது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பௌத்த சிங்களப் பேரினவாதம்

## அறிமுகம்

ஈழத்தமிழரை ஒடுக்குவதற்கான ஆதாரச்சுருதியாய் ஒரு உண்மைக்குப் புறமான கருத்துலகை சிங்கள ஆட்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். கற்பனை ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இவ்வகையான வரலாற்றிலிருந்தே இவர்கள் தமது பொய்யான கருத்துலகத்தை இலங்கைக்கு உள்ளும் புறமும் உருவாக்கியுள்ளனர். இந்தப் புனைகதையானது இன அழிப்பிற்கான ஒரு சித்தாந்தம் என்ற வகையில் இது ஒரு பாரதூரமான குற்றச் செயலாகும். இந்தப் பொய்யான கருத்துலகக் குற்றச் செயலில் இருந்துதான் தமிழருக்கு எதிரான அனைத்துக் குற்றச் செயல்களும் சுவாலை விட்டு எழுகின்றன.

முற்றிலும் உண்மையான வரலாற்றிலிருந்து தமிழ் மக்களுக்கான நியாயமும் அவர்கள் போராட நேர்ந்த அவசியமும் இங்கு சிங்கள ஒடுக்குமுறை கூறும் கருத்துக்களுக்கு எதிரான பதிலுரையாக எழுதப்பட்டுள்ளன. இலங்கைத் தீவிலும் முற்றிலும் சிங்கள மயமாக்குவதே சிங்கள இனவாதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். தமிழரைச் சிங்களவராக இனமாற்றம் செய்வது *(Assimication)* அல்லது தமிழரை அழிப்பது என்பதே சிங்கள இனவாதத்தின் பண்பாகும். "சுதந்திரத்தைத்" தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர் அனைவரும் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் சிங்களமயமாக்கலை இலக்காக் கொண்டே அமைந்தன.

சிங்கள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க "சமாதானம்", "போர்" எனும் இருபதங்களையும் பிரயோகித்து வருகிறார். இதில் "சமாதானம்" என்பதன் அழுத்தம் தமிழர் சரணடைந்து சிங்கள மயமாக்கலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அதனை ஏற்க மறுக்குமிடத்து போர்மூலம் இன ஒழிப்பிற்கான முன்நிபந்தனையைத் தோற்றுவித்தல் என்பதுமே "போர்" என்பதன் அர்த்தமுமாகும். இதுவரை காலமும் சிங்கள இனவாதத்திற்குத் தலைமை தாங்கிய சிங்கள தலைவர்களிலிருந்து சந்திரிகா ஒரு வகையில் வேறுபடுகிறார். பழைய பாணியில் இனவாதத்திற்குத் தொடர்ந்தும் தலைமை தாங்கமுடியாது என்பதே இந்த உண்மையாகும். சாத்தான் வேதமோதுவது போல, சந்திரிகா சமாதானம் பேசி இனவாதத்தை அரங்கேற்றுகிறார். அந்த வகையில், சந்திரிகா நவ இனவாதியாக *(Neo Chauvinist)* காணப்படுகிறார்.




சிங்கள இனவாதம் விருப்பு வெறுப்புக்களைக் கடந்து நிறுவனமயப்பட்டுள்ளது. எந்தவொரு மனிதனின் நல்லெண்ணத்தினாலும் தணிக்கப்படக் கூடிய நிலையில் சிங்கள இனவாதம் இன்றில்லை. சந்திரிகா இனவாதத்தைத் தணிப்பதற்கான பாத்திரம் வகிப்பவருமல்ல. மாறாக, சிங்கள இனவாதத்தின் பழைய பாதை இன்றைய சூழலில் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள நிலையில் நெருக்கடியிலிருந்து இனவாதத்தைப் புதிய சூழலுக்கேற்ப முன்னெடுப்பவராய் உள்ளார். எனவே விமோசனத்திற்கான ஒரே வழி தமிழர் பிரிந்து செல்வது மட்டுமே என்பதைச் சமாதான விரும்பிகளும் சிங்களவர்களும் உணர்வார்களா?

**மு. திருநாவுக்கரசு**

இன்று பிரச்சினை சிங்கள ஒடுக்குமுறையே தவிர தமிழர் போராட்டமல்ல. சமாதானம் ஒடுக்குவோர் பக்கமிருந்தான் வரவேண்டுமே தவிர, ஒடுக்கப்படுவோர் பக்கமிருந்து அல்ல. ஒடுக்குமுறை தீர்ந்தால் சமாதானம் பிறக்கும். தமிழரின் பிரச்சனை வெறும் சட்டப் பிரச்சனை என்ற எல்லையை இப்போ கடந்து விட்டது. தமிழரின் பிரச்சினை வெறும் தனிமனித உரிமைப் போராட்டம் *(Individual right)* பிரச்சனை அல்ல. தேசிய இனம் என்ற வகையிலான கூட்டுரிமைப் *(Collective right)*. பிரச்சனை ஆகும். வெறும் சட்டப் பிரச்சினைகளுக்கு அப்பால் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையுமாகும். மொத்தத்தில், தொடர்ச்சியான நீண்டகால ஒடுக்குமுறையின் விளைவால் இனியும் இணைந்து வாழமுடியாத அளவிற்கு மனம் பிளவுபட்டு இருக்கும் பிரச்சினையாகும்.

★★★

இந்து சமுத்திரத்தின் முத்து என்றும் தீவுகளின் இராஜகுமாரி என்றும், சுவர்க்கபுரி என்றும் வரலாற்றறிஞர்களால் வர்ணிக்கப்பட்ட இலங்கைத் தீவு இன்று இந்து சமுத்திரத்தின் இரத்தத் துளியாய் மாறியுள்ளது. புத்த பகவான் அன்பு வழியாகிய அகிம்சையைப் போதித்தார். ஆனால் சிங்கள பௌத்தரோ வாளேந்திய சிங்கமாய்த் தமிழரை எதிர்ப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். புத்த பகவான் அரசைத் துறந்து அரசமர நிழலிலே தவமிருந்தார். ஆனால், சிங்கள இனவாதிகளோ அரசியல் அதிகாரம் பெறத் தமிழரின் இரத்தாற்றில் நீந்தி விளையாடுகின்றனர்.

சிங்கள அரசு தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து ஈழத்தமிழி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


னத்தை ஒடுக்கி வருகின்றது. அரச பலத்தையும் சகல உள்நாட்டு வளங்களையும் தமிழருக்கெதிராகச் சிங்கள அரசு ஒன்று திரட்டி உபயோகிப்பது மட்டுமன்றி அவற்றிற்கு அப்பால் அந்நிய தேசங்களிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதார இராணுவ உதவிகளைப் பெற்றும் தமிழ் இனத்தை ஒடுக்கி விடுகின்றது. தமிழினத்திற்கு எதிரான கருத்துலகைப் பாமரச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி அதனைச் சகல வகைகளிலும் பரப்புவதுடன் சர்வதேச ரீதியாகவும் பெரும் பிரச்சார யுத்தத்தைச் சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டுத் தமிழ் இனத்தைச் சட்டங்களினாலும் அரசியற் பொருளாதாரத் திட்டங்களினாலும், ஆயுதங்களினாலும், நிர்வாக நடைமுறைகளினாலும் மொத்தமாய் ஒடுக்கி வருகின்றது.

இலங்கைத் தீவில் தமிழரும் சிங்களவரும் இருவேறு தேசிய இயக்கங்களாய் வளர்ந்துள்ளனர். காலனித்துவ ஆதிக்கத்தின் பொருட்டு தமிழ், சிங்கள இனங்களை ஆங்கிலேயர் ஒரே அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ்க் கொண்டுவந்தனர். இதன் பின் எண்ணிக்கையில் பெரிய இனமாகிய சிங்களவருடன் இணைந்து ஐக்கிய இலங்கையிலே தமது தனித்துவங்களைப் பேணிக் கொண்டு அன்னியோன்னியமாக வாழத் தமிழர் முற்பட்டனர். ஆனால், சிங்கள பௌத்தரோ பிழையான ஐதீகத்தின் அடிப்படையில் ஓரினத் தன்மைக்குரிய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வற்புறுத்தியும் திணித்தும் வந்தனர். இதன் விளைவாக நவீன வரலாற்றில் சிங்கள– தமிழ் இன முரண்பாடு வளர்ந்து கூர்மை பெறத் தொடங்கியது.

ஆரம்பத்தில், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பல சிங்களத் தலைவர்கள் விளங்கியும் ஏற்றும் வாக்குறுதிகளை அளித்தும் அவற்றிற்கான வக்காலத்து வாங்கியும் வந்தனர்.

இதற்கான சில உதாரணங்களாவன;

1. சமஷ்டி அரசியல் அமைப்பு முறைதான் பல்லினத் தன்மை வாய்ந்த இலங்கைக்குச் சிறந்த தீர்வாகும் என 1926 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா வற்புறுத்தினார்.

2. தமிழ் மொழி ஒரு செழிப்பான இலக்கிய வளமிக்க மொழி என்றும், அதனையும் உத்தியோக மொழி ஆக்குவதில் தனக்கு எவ்வித ஆட்சேபனை

## 'ஓயாத அலைகள்' ஏற்படுத்திய அதிர்வலைகள்

முல்லைத்தீவு யுத்தம் உலகில் ஒரு போதும் நிகழ்ந்திராத இராணுவ சாதனையாக இராணுவ வல்லுனர்களால் பேசப்படுகிறது. இத்தகு சாதனைக்குப் பின்னால் உள்ள, விடுதலைப்புலி வீரர்களின் ஆற்றல், துணிவு, செயற்திறன் போர்க்குணங்களின் வெளிப்பாடு விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தம் போன்ற விடயங்கள். உலகை வியப்பிற்கு ஆழ்த்தியுள்ளதோடு ஆய்வுக்கும் உட்படுத்தி இருக்கிறது. இதன் பிரதிபலிப்புக்கள் உலகின் ஒவ்வொரு திசைகளில் இருந்தும் கட்டுரைகளாக, பாராட்டுக்களாக, வியப்புக்களாக, புகழ்ந்துரைகளாக எழுதவும், பேசவும்பட்டது. அமெரிக்காவில் இருந்து வெளியிட்ட வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை உலகிலேயே சிறந்த போராடும் கட்டமைப்பைக் கொண்ட இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கமே என்றும் மிகச் சிறந்த கட்டமைப்பைக் கொண்ட திறமையான போராட்டக்குழு என்றும் அது கூறியுள்ளது. மேலும் இராணுவ இலக்குகள் மீது தாக்குதலைத் துல்லியமாகத் திட்டமிட்டு நுணுக்கமான செயல் வடிவத்தை எதிர்பாராத் தன்மையே செயலாற்றுவதில் வல்லவர்கள் என்றும் அது எழுதி இருக்கிறது.

கைதேர்ந்த நுட்பத்துடன் விடுதலைப் புலிகள் போராடி வருகிறார்கள். அது உலகின் முதல்தர புரட்சிப் படையாக திகழ்கிறது என்றும் ரோஹான் குணரத்தின தனது விமர்சனத்தின்போது தெரிவித்திருக்கிறார்.

இதைவிட, பி.பி.சியின் செய்தி ஆய்வுப் பகுதியான 'நியூஸ் டெஸ்கில்' இராணுவ ஆய்வாளர்களும், அரசியல் விமர்சகரும் முல்லைத் தாக்குதல் பற்றி நீண்ட, ஆழமான கருத்துரைகளை வழங்கினர். பி.பி.ஸியின் உலக சேவை மணிக்கொரு தரம் ஒலிபரப்பும் "உலகச் செய்தியாளர்கள் லண்டன் தலைமையகத்திலிருந்து கொழும்பிலுள்ள பி.பி.ஸி முகவர் புளோரா பொல்வோட அடிக்கடி தொடர்புகொள்ளப்பட்டு நிலவரத்தை கூறுமாறு பணிக்கப்பட்டார்.

லண்டனிலிருந்து வெளியாகும் தினசரிகள் முதல் தமிழ் நாட்டில், சென்னையிலிருந்து வெளிவரும் தினத்தந்தி வரையும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை முதன்படுத்தின.

விடுதலைப் புலிகள் பற்றியும், ஈழவிடுதலைப் போராட்டம் பற்றியும் காட்டமாக விமர்சித்து இந்த "தஷிந்து", "இண்டியன் எக்ஸ்பிரஸ்" போன்ற பத்திரிகைகளும் தவிர்க்க முடியாமல் புலிகளின் தாக்குதலைப் பிரதானப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த வகையில், பூமிப்பந்தின் முடிவுவர – முல்லைத்தீவு படைத்தள தாக்குதல் பற்றி ஆராய்வும் முதன்மைப்படுத்தப்படவும் வேண்டிய அவசியம் எழுந்தமைக்கான காரணங்கள் யாவை எனப் பார்ப்போமாயின்:

விடுதலைப் புலிகளின் போராற்றல் பலவீனமடைந்து விட்டதாகவும் அவர்கள் யுத்தகளத்திலிருந்து விரட்டியப்படுகிறார்கள் என்றும் சிறீலங்கா அரசாங்கம் செய்து வந்த பிரச்சாரங்களை இச் செய்தி ஊடகங்கள் நம்பியமையாகும்.

விடுதலைப் புலிகளின் பலமான கோட்டையென கருதப்பட்டு வந்த, யாழ். குடாநாட்டிலிருந்து புலிகள் தந்திரோபாயமாக வெளியேறியமையும் அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமது தளங்களை அமைத்தமையும் – இச்செய்தி ஊடகங்களை பொறுத்த வரையில் "மீள முடியாத பின்னடைவாகவே கருத்திலெடுக்கப்பட்டது.

'புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் – ஏராளமான புலிவீரர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்' என்று சிங்கள அரசு பரப்பிய வதந்திகளை தமது கருதுகோளுக்கு வலுச்சேர்க்கும் ஆதாரங்களாகவும் இச்செய்தி ஊடகங்கள் ஏற்றுக்கொண்டமையும், சமாதானத்திற்கான யுத்தத்தை மேற்கொண்டு வரும் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் யோசனைகளை புலிகள் ஏற்றுக்கொள்ளாமல் விட்டமையால் – அவர்கள் மக்களிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு விடுவார்கள் என்றும் கருதியமையும்தான்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யும் இல்லை என்றும், எனவே தமிழ் மொழியையும்உத்தியோகமொழியாக்க வேண்டும் என்றும் 1944 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசாங்க சபையில் வற்புறுத்தி விவாதித்ததுடன் அது அரசாங்க சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றவும்பட்டது

3. நவீன ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்ப வேண்டிய பணி ஒரு மொழியாலன்றி இரு மொழிகளினாலுமே (தமிழ், சிங்களம்) ஆகும் என்று 1951 ஆம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்கா அழுத்தம் திருத்தமாய்க் கூறினர்.

4. தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனத்தவர் என்றும் அவர்கள் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள் என்றும் 1944 ஆம் ஆண்டு டாக்டர் விக்கிரம சிங்கா தலைமையிலான இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றி இருந்தது.

5. தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகள் ஆக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை 1955 ஆம் ஆண்டு கலாநிதி என். எம். பெரேரா நாடாளுமன்றிற் சமர்ப்பித்து வாதிட்டதுடன் அதற்காக அவரும் அவரது லங்கா சமசமாசக் கட்சியினரும் தீவளாவிய பெரும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வந்தனர்.

6. தமிழையும் உத்தியோக மொழியாக்கத் தவறினால் தீவு இரத்தப் பிளம்பாக எதிர்காலத்தில் மாறும் என்றும், தீவு இரண்டாகப் பிரிய நேரும் என்றும் சம சமாயஜக் கட்சித் தலைவர்களான கலாநிதிகள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா போன்றோரும் கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களான டாக்டர் விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன் போன்றோரும் 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து வாதிட்டனர்.

மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றும் இரு பெரும் சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற கொள்கையையே ஆரம்பத்திற் கொண்டிருந்தனர். ஆனால் இவ்விரு முக்கிய சிங்களக் கட்சிகளும் 1955 ஆம் ஆண்டு தமது கொள்கையையும் கருத்தையும் வாக்குறுதிகளையும் முற்றிலும் நேர் எதிர்மாறாய் மாற்றிக் கொண்டனர்.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த வேளை கல்லோயா எனப் பெயரிடப்பட்ட தமிழ் மண்ணில் டி. எஸ். சேனநாயக்கா வினாற் குடியேற்றப்பட்டிருந்த சிங்களக் குடியேற்ற வாசிகள் தமிழ்க் குடியானோர் 156 பேரை வெட்டிப் படுகொலை புரிந்தனர். பிரதமர் பண்டாரநாயக்கா இதற்கு எதிராய் நடவ


புத்தரிடம் தமிழ்த்தாயின் கேள்வி

டிக்கை எடுக்காதிருந்தார். இப்படுகொலையும் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையும், 1958 ஆம் ஆண்டு பாரிய தமிழ் இனப் படுகொலை நடாத்தப்பட்டதும், பிரதமர் பண்டாரநாயக்கா சமஷ்டி கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் 1957 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தை 1958 ஆம் ஆண்டு ஒருதலைப்பட்சமாகப் பண்டாரநாயக்காவினால் கைவிடப்பட்டமையும் போன்ற அனைத்தும் இணைந்து தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின. இதனைத் தொடர்ந்து தமிழர் சிங்களவருடன் இணைந்து வாழமுடியாது என்ற உணர்விற்குத் தள்ளப்படலாயினர்.

1958 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய இனப்படுகொலை பற்றி சிங்களவரான பிரபல பத்திரிகையாளர் தாசி வித்தாச்சி எழுதிய அவசரகால நிலை 58 (Emergency 58) என்ற தனது நூலின் முடிவில் தமிழர் சிங்களவர் ஆகிய இரு இனங்களும் பிரிந்து செல்லும் நிலைக்கு வந்துவிட்டனவா என்ற வினாவை எழுப்பியிருந்தார்.

தமிழர் சிங்களவருடன் இனியும் இணைந்து ஐக்கியமாய் வாழ முடியாது என்பதை 1955–ம் ஆண்டும் 1958–ம் ஆண்டிற்குமிடையேயான காலகட்டச் சம்பவங்கள் துலக்கமாய் எடுத்துக் காட்டின. இப்படி இருந்த போதிலும் தமிழர் சிங்களவருடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் வாழ்வதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். சிங்களவர் ஓரினத் தன்மை கொண்ட சிங்கள மேலாதிக்கத்தினைத் தொடர்ந்து வளர்ப்பதிலேயே அக்கறை செலுத்தினர்.

கால நேரம் தவறாது தமிழரின் இரத்தத்தாலும் கண்ணீராலும் சிங்கள பௌத்தத்திற்கு அபிஷேகம் நிகழ்த்தப்படும் தீவாக இலங்கை மாறிவிட்டது. இப்படி ஒரு துயரம் ஏன்? எப்படி இத் தீவைப் பீடித்தது? "இலங்கை சிங்கள பௌத்தருக்கே சொந்தமான தீவு; தமிழர் இலங்கைத் தீவின் அன்னியர்; தமிழர் சிங்கள– பௌத்த நாகரீகத்தின் முதன்மையான எதிரிகள் என்பன போன்ற கருத்துக்களே சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் விதைபட்டு ஆழமாக வேரோடியுள்ளன. சிங்கள – பௌத்த இன மதவாதிகளும் அரசியல் வாதிகளும் அரச, மத நிறுவனங்களைச் சார்ந்த தமது நலன்களைத் தக்கவைத்துள்ள புத்திஜீவிகளும் இணைந்து மேற்படி தவறான எண்ண ஓட்டங்களையும் கருத்துக்களையும் சாதாரண சிங்கள மக்களின் நெஞ்சங்களில் விதைத்துள்ளனர். தமிழருக்கு உரிய உரிமைகளை ஏற்றுக் கொள்வதென்பது சிங்கள– பௌத்தத்திற்கும் புதைகுழி தோண்டுவதாகவும் தமிழரை ஒடுக்குவதென்பதே சிங்கள பௌத்தத்திற்கு ஆற்றும் பெரும் கைங்காரியமாகவும் சாதாரண சிங்கள மக்கள் கருதும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

www.tamileelamarchive.com

பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கெனப் புத்தபிரானால் இலங்கைத் தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற "தம்ம தீப" கருத்தையும் இலங்கை சிங்களவருக்கே சொந்தமானது என்ற "சிங்க தீப" கருத்தையும் இணைத்து சிங்கள – பௌத்தருக்கே இலங்கை சொந்தமானது என்ற பொய்யானதும் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாததும் காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததும், கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்ததுமான ஐதீகக் கருத்திற்குச் சிங்களத் தலைவர்கள் புத்துயிரூட்டி அதன் அடிப்பையிலே தமிழரை ஒடுக்குகின்றனர்.

சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறுவதாக நம்பவைக்கப்பட்டுள்ள கற்பனைவளமும் கட்டுக் கதையும் மிக்க மஹாவம்சம் நூலை அடிப்படையாகக் கொண்டே மேற்படி தவறும் குற்றமும் மிக்க கருத்துருவம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பாளி மொழியில் எழுதப்பட்ட மஹாவம்ச நூலின்படி சிங்கத்தற்குக் கருத்தரித்த சிங்கத்தின் வழிவந்தோரே சிங்களவர் என்றும், அத்தகைய வழித்தோன்றலில் உருவாகி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய முதல் மனிதன் விஜயன் என்றும் இவனே இலங்கையின் முதன் மனிதன் என்றும் அப்போது இலங்கையில் "அரக்கர்" வாழ்ந்து வந்ததாகவும் அந்த "அரக்கரை" வெற்றி கொண்டு முதலாவது சிங்கள அரசை அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு விஜயன் நிர்மானித்ததாகவும் கூறப்படுகின்றது.

கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் விஜயன் அவனது எழுநூறு தோழர் சகிதம் இலங்கை மண்ணில் முதல்முறையாக கால்வைத்த நேரத்தில் புத்தபிரான் பரிநிர்மாணம் அடைந்து கொண்டிருந்தாராம். அவ்வேளை புத்தபிரான் 'இப்போது இலங்கையில் கால்வைத்துக் கொண்டிருக்கும் விஜயனின் வழித்தோன்றலே பௌத்தமத தர்மத்தைப் பேணி வளர்க்கவும் நிலைநாட்டவும் போகின்றவராவர் என்று கூறினாராம். அந்த வகையில் பௌத்த தர்மத்தைப் பூமியில் நிலைநாட்டப் புத்த பிரானாலே தேர்ந்தெடுக்கப்பட்ட "தம்மதீபமே" இலங்கைத் தீவு என்று மஹாவம்சத்தில் எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய மஹாவம்சக் கருத்துக்களை சிங்கள அரசு இந்த 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடப் புத்தகங்களில் எழுதியும் போதித்தும் வருகின்றது. இத்தகைய கட்டுக்கதைக்கு ஊடாகவே இலங்கைத் தீவு சிங்களவருக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும், கலை, இலக்கியங்களிலும், சமய சமூக அரசியற் பொதுக் கூட்டங்களிலும், சகல வெகுசனத் தொடர்புச் சாதனங்களிலும் மேற்கூறப்பட்ட கருத்துக்களே எடுத்துரைக்கப்படுகின்றன. இதனால் நல்லிதயம் கொண்ட சிங்களவர் கூட இலகுவாக மூளைச் சலவைக்குப் பலியாகி விடுகின்றனர். வெறும் அரச சார்பு சுயபதவி நோக்கங்களுக்கு அப்பால் மேற்படி சூழலால் மூளைச் சலவைக்குப் பலியான புத்திஜீவிகள் பலருள்ளனர். இந்த மூளைச் சலவை வியாதிக்கு அப்படியே பலியாகிவிடாத விதிவிலக்கான சில சிங்களப் புத்திஜீவிகள் இருக்கின்றனராயினும் அவர்களிடமும் குழலின் மூளைச் சலவைத் தாக்கம் குறைந்தபட்சம் இருக்கவே செய்கின்றது. அதாவது இத்தகையதோர் தமிழருக்குப் பிரச்சினை உண்டு என்று கூறுவார்கள். ஆனால் பிரச்சினைக்கான தீர்வில் வழவழத்து இறுதியில் சிங்கள இன வாதத்தின் பக்கம் இழுக்கப்பட்டுவிடுகின்றனர்.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனே இலங்கைத் தீவில் முதல் மனிதன் என்று கூறப்படுவதை ஆராய்ந்தோம். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையில் மனிதன் வாழ்ந்துள்ளமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. உதாரணமாக பலாங்கொட மனிதன் எனப் பெயரிடப்பட்டுள்ள எலும்புக் கூட்டினைக் கூறலாம்.

மேலும் இலங்கையின் தெற்கு, வடமத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைக் கொண்ட திஸமகாரம, அனுராதபுரம், பொம்பறிப்பு, ஆனைக்கோட்டை, திரியாய் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சான்றுகளின்படி கி. மு. 1000ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற் பண்பாட்டை உடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இப்பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழ்ந்தனர். இது இவர்களுக்கு அரிய சிறப்பான பண்பாடாகும். இது திராவிடப் பண்பாட்டின் ஒரு முக்கிய மூலக்கூறாகும். இப்பெருங்கற் பண்பாட்டு மக்களே இலங்கையில் தொல்குடியினர் என்ற கருத்தினைத் கெரணியகல சுசந்த குணதிலக, சேனகபண்டார போன்ற சிங்கள ஆராய்ச்சியாளர்களும், விமலா பேக்கினி போன்ற வெளிநாட்டு ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இவற்றின் மூலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற் குடியேறிய விஜயன் என்பவனே இலங்கையின் முதல் மனிதன் என்ற கருத்து அடியோடு கேலிக்கூத்தாகிவிடுகின்றது. சிங்கத்தின் வாரிசு என்பது எப்படிக் கற்பனைக் கதையோ

## தமிழருக்கெதிரான காடைத்தனங்கள்

கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். அச்சத்துடனும் துன்பத்துடனும் கொடிய சித்தரவதைக்குள்ளாகி வருகிறார்கள். சிங்களக் காடையர்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. திட்டமிடப்பட்ட இக்காடையர்கள் தமிழர்களின் வாழ்வில் பயங்கரமான ஊறுகளை விளைவித்து வருகிறார்கள்.

தமிழர்களின் வீடுகளுக்குள் மட்டும் கோஷ்டியாகப் புகும் இக் காடையர்கள் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி ஆயிரக்கணக்கில் பணத்தைப் பறித்துச் செல்கிறார்கள். சந்திரிகா இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதில்லை. 'காடையர்கள் நம்ம பையன்களல்லவா. அவர்கள் தமிழர்களிடம்தானே பணம் பறிக்கிறார்கள்' என்று பேசாமல் இருந்துவிடக்கூடிய தலைவி என்று காடையர்களுக்குத் தெரியும். சிறிய தொகையில் பணம் கொடுத்தால் அதனை வழங்க மறுக்கிறார்களாம். பணம் கொடுக்க மறுத்தால், "சிங்களவர்களைக் கொல்லத் தெரியும். பௌத்தர்களின் பண்டிகை கொண்டாட்டங்களிற்கு பணம் கொடுக்க முடியாதா?" எனக் கேட்டுப் பயமுறுத்தும் நடவடிக்கைகளிலும் அவர்கள் சுதந்திரமாக ஈடுபட்டு வருகின்றனராம். காடைக் கும்பல்களின் அதிகரிப்பும், கட்டற்ற செயற்பாடும் சமூக விரோதச் செயற்பாடுகளாக விளங்கிக் கொள்ளாது போகும் கட்டத்தில் இதன் ஆபத்தான விளைவுகளை சிங்கள மக்களும் விரைவில் சந்திப்பார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அப்படியே விஜயனே இலங்கையின் முதல் மனிதன் என்பதும் கற்பனைக் கதையாகும். விஜயன் முதல் மனிதன் என்பது மட்டுமல்ல, அப்படி ஒரு மனிதனோ அன்றி மனித குழுவோ இலங்கைக்கு வந்ததாக எத்தகைய தொல் பொருட்சான்றுகளும் இது வரை கிடைக்கவில்லை. விஜயன் கற்ப னைப் பாத்திரம் எனும் போது விஜ யனை மையமாகக் கொண்ட "தம்மதீப" கருத்தும் கட்டுக்கதை என்பது புலனா கிறது.

இந்தவகையில் இலங்கைத் தீவு சிங்கள–பௌத்தருக்கு மட்டுமே சொந் தமானது என்ற பிழையான ஆதார மற்ற கட்டுக்கதையை முதலில் நிராக ரிப்பதுடன் உண்மையான வரலாற் றைச் சற்று நோக்குதல் நலம். தமிழரா அன்றிச் சிங்களவரா இத்தீவிற்கு முத லில் வந்தனர் என்றோ மூதாதையருக் குத்தான் பூமி சொந்தமானது என்றோ, வாதங்களை முன்வைப்போமாயின் மனிதனுக்கு மூலமான குரங்கிற்குத் தான் பூமி சொந்தம் என்ற முடிவிற்குப் போக வேண்டும். அண்மையான வர லாற்றைத் தேடி அறிவதென்பது மனி தரின் சமூக வளர்ச்சி விதிகளைக் கண்டு கொள்வதற்காகவே தவிர வரட்டுப் பெருமைகளையும் பிடிவா தங்களையும் மேற்கொள்வதற்காக வல்ல.

இலங்கை முதலில், தென்னிந்தியா வின் தொடர் நிலப்பரப்பாக இருந் துள்ளது என்பதை கல்லுருவியல் ஆய் வுகள் நிரூபிக்கின்றன. காலகதியிலே பாக்குநீரிணையால் இலங்கை இந்தி யாவில் இருந்து பிரிக்கப்பட்டு ஒரு தீவாகியது. தீவாகும் முன்பு தென்னிந் தியாவில் வாழ்ந்த அதே மக்கள் கூட் டமோ அன்றி தீவான பின்பு தென் னிந்தியாவில் இருந்து வந்து குடியே றிய மக்கள் கூட்டமேதான் இலங் கைத் தீவின் மனித வாழ்விற்கான மூலக் கூறாகும்.

எவ்வாறாயினும் தென்னிந்தியா வில் கி.மு. ஆயிரமாம் ஆண்டளவில் இலங்கையிலும் நிலவிய பெருங்கற் பண் பாட்டைக் கொண்டிருந்த திராவிடப் பண்பாட்டு மக்களில் இருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஈழத்தமிழ், சிங்கள – பௌத்தம் எனும் பல கிளைப் பண்பாட்டுப் பிரிவுகள் தோன்றின. இவை காலகதியிலே தனித் தனி தேசிய இனங்களாய் விருத்திய டைந்தன.

கிறிஸ்துவிற்கு முற்பட்ட சகாப்தத் தில் பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட திராவிடப் பண்பாட்டு மக் கள் இலங்கைத் தீவின் பல பாகங் களிலும் வாழ்ந்து வந்தனர். கி. மு. 3ஆம் நூற்றாண்டளவில் தென்னிந் தியாவிற்கும் பௌத்தம் அரச மதமா கப் பரவத் தொடங்கியது. தேரவாத பௌத்தம், மகாயான பௌத்தம் எனப் பௌத்தத்திற் பெரும் பிரிவு இந்தியாவில் ஏற்பட்டு தென்னிந்தியா விற்கூடாக அப்பிரிவு இலங்கைக்கும் பரவத் தொடங்கியது. தென்னிந்தியத் தமிழ்ப் பிக்குவினால் மன்னன் மகா சேனன் மகாயான மதத்திற்கு மாற் றப்படக்கூடிய அளவிற்கு மகாயானம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கி யது. இதற்கிடையில் பௌத்தம் தென் னிந்தியாவில் முற்றிலும் அருகத் தொடங்கியது. தென்னிந்தியாவிற்கு அருகே இருந்த இலங்கையில் வடபகு தியிலும் பௌத்தம் அருகியது. ஆனால் வடமத்திக்கு அப்பால் பௌத்தத் தைப் பேணிக் காக்க மகாசங்கம் உறு தியூண்டு செயற்பட்டது. வடமத்திக்கு அப்பால், சூழல் காரணமாகவும், பௌத்தம் பாளி, வடமொழி ஆகிய வற்றின் நெருங்கிய தொடர்பு கார ணமாகவும் பெருங்கற்பண்பாட்டு மக் கள் கூட்டத்தின் மத்தியில் சிங்களம் எனும் மொழி கிளை விட்டது. இலங் கைத் தீவின் பெருங்கற் பண்பாட்டு மக்களில் ஒரு பகுதியினர் மீது வட இந்தியாவிலே தோன்றிய பௌத்தம் செல்வாக்குப் பெற, பெருங்கற்பண் பாட்டு மக்களின் மறு தொகுதியினர் மீது வட இந்திய பிராமணிய மதம் செல்வாக்குப் பெற்றது. ஒரே பொதுப் பண்பாட்டைக் கொண்டிருந்த ஒரே மக்கள் கூட்டத்தின் மீது இரு மதப் பிரிவுகளும், வேறுபட்ட புவியியல் மற் றும் அரசியற் காரணிகளும் செல்வாக் குச் செலுத்தியதன் தொடர்விளை வாக இலங்கையில் ஈழத்தமிழர், சிங் களம் எனும் ஒரு தனித்துவமான பண் பாட்டினங்கள் உருப்பெற நேர்ந்தது.

(மிகுதி அடுத்த இதழில்)

# போராயுதமாகும் மருந்துப் பொருட்கள்

சுவீடனைச் சேர்ந்த வைத்தியரான திரு. பீட்டர் ஒல்சோன் (*Peter Olsson*) கடந்த 5 மாதங்களாக மன்னார் – மடுவில் உள்ள ஒரு அகதிமுகாமில் 'எல்லையற்ற வைத்தியர்கள் (*Doctors without boundaries*)" எனும் உதவி நிறுவனத்திற்காக பணியாற்றி விட்டு நாடு திரும்பியுள்ளார். அவரை சுவீடனின் டாகன்ஸ் நீகெத்தர் (*Dagens Nyheter*) தினப்பத்திரிகை அளித்த பேட்டி 27.09.96 அன்று அத் தினப்பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அதிலிருந்து சில பகுதிகள்:

திரு. பீட்டர் ஒல்சோன் கூறுகின்றார்,

மருந்து மற்றும் மருத்துவக் கருவிகள் சிறிதே உள்ளபடி யால் இலகுவான முறைகளைக் கையாண்டே சிகிச்சை செய்கின்றோம். அநேக சந்தர்ப்பங்களில் ஒரு பாட்டரி விளக்கை (*torch*) பயன்படுத்தியே, கண்ணி வெடிகளா லும், குண்டுகளினாலும் காயமடைந்த மனிதர்களுக்கு சிகிச்சை செய்யவேண்டி இருக்கின்றது. இதைவிட மலேரியா, விசர்நாய்க்கடி போன்ற நோய்கள் முகாமில் சர்வசாதாரணம்.

முகாமில் உள்ள சொற்ப உணவை பகிரும் முறை இருப்பதனால், அங்கு வசிக்கும் சுமார் 5000 மனிதர்களும் பட்டினிச் சாவிற்கு அருகாமையிலேயே உள்ளதாக கூறலாம். இருந்தபோதிலும் மிக வேதனையான விடயம் என்னவெனில் அங்குள்ள மனிதர்களின் முகத்தில் தென்படுகின்ற எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற தன்மையும் எதிலும் விருப்பு அற்ற தன்மையுமாகும் (*hopeleessness and aparthy*). வெளிநாட்டு உதவி நிறுவனங்களைப் பொறுத்த வரையில், அவை சிறிலங்காவில் வேலை செய்வது மிகவும் கடினம். எங்களுடைய அமைப்பு பல தடவைகள் மருந்து வகைகளை மடு அகதி முகாமிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்தும் அனுமதிகள் மறுக்கப்பட்டதால் கொண்டு செல்ல முடியவில்லை. தமிழ்ப்பகுதிகளுக்கு எடுத்துச் செல் லப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களில் மிகுந்த கட்டுப்பாடு நிலவுகின்றது. ஒவ்வொரு ஊசி, ஒவ்வொரு பிளாஸ்டர் என்பன கூட அரச படையினரால் சோதனை செய்யப்படுகின்றன. இது சாதாரண மக்களையே பாதிப்ப தாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## அபாயச் சங்கொலிக்கிறது!

# மோசமாகி வரும் சிறீலங்காவின் பொருளாதாரம்

"எங்கட வாழ்க்கைச் செலவு அதிகரிச்சுப் போச்சு. பாணின்ர விலை என்னமாய் உயர்ந்து போச்சுது தெரியுமா? ஐயாயிரம் ரூபா சம்பளம் எடுத்தே வாழ்க்கையை ஓட்ட முடியவில்லை, ஒரே திண்டாட்டமாக இருக்கு, பயம் வேற, நிம்மதியில்லாத சீவியம், இராணுவத்தின்ர கெடுபிடிகள், வழிமறிப்புக்கள், சுற்றி வளைப்புக்கள், தேடுதல்கள், முடிவில்லாது தொடரும் போர் என்று நாங்களும்தான் அதற்குள் அகப்பட்டு நசிகின்றோம்; அதோட நாட்டைவிட்டே போறதெண்ட முடிவோட தான் நான் பிரான்சுக்கே அகதியாக வந்திட்டன்." என ஒரு சிங்களப் பொலிசார் தனது கவலையை இவ்வாறு கொட்டித் தீர்த்தார். இதில் எவ்வவளவு உண்மை இருக்கிறது என்பதை சிறிது அலச முனைவதே இக் கட்டுரையின் நோக்கம்.

சந்திரிகா அரசாங்கம் பல ஏமாற்றுக்களை சிங்கள மக்களுக்களித்திருக்கிறது. தேர்தல் கால வாக்குறுதிகளை இவ்வளவு மோசமாக வேறு ஒரு சிங்களக் கட்சிகளும் மீறவில்லை என்பதே சிங்கள மக்கள் பலரது அபிப்பிராயமாக இருக்கிறது. இதனால் சிங்கள மக்கள் மிகவும் வெறுப்புற்றுக் காணப்படுகிறார்கள்.

முல்லைத்தீவில் 'ஓயாத அலைகள்' ஏற்படுத்திய அலைகள் ஒரு போதும் ஓயப்போதில்லை. அது இராணுவ, அரசியல், பொருளாதார கட்டுமானங்கள் வரை சென்று உதைக்கிறது. ஆனால் தென்னிலங்கையில் சிங்கள மக்கள மத்தியில் சரிந்து கொண்டு போகும் செல்வாக்கை சரிக்கட்ட எங்காவது ஒரு போரை நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பது சந்திரிகா அரசுக்கு கட்டாயமானதாகவே அமைந்து விட்டது. போரின்மூலமான அதிர்வலைகள் வேறு சிங்கள மக்களின் ஒவ்வொரு வீட்டின் கதவுகளையும் உதைக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் இந்நிலைமைகளைக் கருத்தில் எடுக்காது போலியான, வரட்டுக்கௌரவமான, மனிதத்தன்மையற்ற, சர்வதேச சட்டவிதிகளுக்கு அப்பாற்பட்ட தன்மைகளில் நின்று போரைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதனால் யுத்தச் செலவீடு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இராணுவ மயமாக்கலிலேயே அவர்களது கவனம் குவிகிறது. நவீன யுத்தத் தளபாடக் கொள்வனவுக்காக பெரும எவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்தகால யுத்த செலவீனங்களை விட மிக அதிகமான அளவு யுத்தச் செலவீனம் அதிகரித்துள்ளது. எட்டுக்கோடியாக இருந்த நாளாந்த யுத்தச் செலவீடு 11 கோடியாக அதிகரித்திருக்கிறது. இந்த நிலையில் அரசு தொடர்ந்து யுத்தத்தை நடாத்த முடியுமா? என்ற கேள்வி அரசியல் அவதானிகள், இராணுவ ஆய்வாளர்கள், வெளிநாட்டு தூதரகங்கள், வெளிநாட்டு போர் ஆய்வாளர்கள் மத்தியில் கூட எழுந்து நிற்கிறது.

நாடாளவிய ரீதியில் எதிர்ப்பியக்கங்கள் தலைதூக்கியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியே இவ்வியக்கங்களை முன்னின்று நெறிப்படுத்துகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பாணின் விலைஉயர்வு, என்பன அரசாங்கத்தின் பொறுப்பற்ற கொள்கைகளாலும் ஆட்சித்திறன் இன்மையாலும் ஏற்பட்டன என்ற கருத்து பலமாகி வருகிறது.

'சந்திரிகா அரசு செயல்திறன்மையற்றது. அதன் திறமையின்மையால் நாடு பொருளாதார அழிவை நோக்கிச் செல்கிறது. கொழும்புத் துறைமுகத் தாக்குதலின் மூலம் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரம் வீழ்ச்சியைக் கண்டிருக்கிறது. உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சியைக் கண்டு வருகிறது. என ரணில் விக்கிரமசிங்கவே இந்த அபாயச் சங்கை எடுத்து ஊதிக்கொண்டிருக்கிறார் என்றால் அந்த சாதாரண சிங்களப் பொலிசாரின் அழுகையை சாதாரணமாக எடை போட்டு விட முடியாது.

சிறிலங்காவின் பொருளாதாரக் கட்டுமானச் சிதைவானது அபாயகரமான நிலைக்கு வந்து விட்டது என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் உணர்கிறார்கள். இருந்தும் அதிலிருந்து மீளுவதற்கான மார்க்கங்களை அவர்களால் காணமுடியாதுள்ளது. வெளிநாட்டுக்கடன்கள் மூலமும் சர்வதேச நிதி நிறுவனங்கள் உதவியின் மூலமும் கிடைக்கும் பொருளாதார உதவிகளை எவ்வளவு காலத்துக்கு தமிழின அழிப்புக்கே செலவிட்டு வரும் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. எனினும் இந்த நிலைகளில் இருந்து மீள அது அந்நிய சக்திகளிடம் சரணாகதியடைவதும் கண்கூடு. இந்நிலைமைகளை விடுதலைப்புலிகள் நன்கு நுணுக்கமாக அவதானித்து வருகின்றார்கள். இராணுவ அரசியல் ரீதியான பல்முனைப்பட்ட யுத்தங்களோடு புலிகள் பலநகர்வுகளைச் செய்கின்றனர். பரந்த இராணுவ அணுகுமுறையில் கெரில்லாத் தாக்குதல்கள் வழிமுறை ரீதியிலும், தந்திரோபாய ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளைத் தாக்குகின்றனர். பலவீனமான இலக்குகளையும் தாக்குகின்றனர்.

பொருளாதார இலக்குகளின் மீது விழுந்த அடியின் வலியை நாளாக நாளாக சிறிலங்கா அரசு அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறது. விரைவில் அதன் பிழையான அடித்தளப் போக்கில் மாற்றம் ஏற்படாதவரை பல்வேறான சிக்கல்களுக்குள் அது சிக்குண்டு மாண்டு போகும் அபாயம் இருக்கிறது.

சிறிலங்காவின் இன்றைய இந்த யதார்த்த சூழலை 'தஸ்ரேற்மன்' என்ற இந்தியப்பத்திரிகை 'அகதிகள் பெருக்கமும், போரும் சிறிலங்காவின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும் என்கிறது!

வெளிநாட்டு ஆய்வாளர்கள், அரசியல் அவதானிகள், உள்நாட்டு பொருளியில் அவதானிகள் எனப் பலரும் சிறிலங்கா அரசுக்கு பின்வருமாறு எச்சரித்திருக்கிறார்கள். அதாவது ' நாடு சந்திக்க இருக்கும் பொருளாதாரக் கட்டுமானச் சிதைவு மிகப் பெரிய சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்று

"ஆனால் எந்த ஆய்வுகளின் அடிப்படையிலான கருத்துக்களையும் சிறிலங்காவின் சந்திரிகா அரசு செவிமடுக்காது பொருளாதாரத்தின் மிக மோசமான இலக்கை அடைந்தே தீரும்.

**— வாசன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சுதந்திரத்தைத் தேடி

மெல்லிய ஒரு புன்னகை. அதனூடு ஆழ்ந்த ஒரு சோகம் அவளின் முகத்தில் தென்படும். அவளுக்கு அந்தப் பெயர் மிக்வும் பொருத்தமாக இருந்தது.

வளம் மிகு வன்னி மண்ணின் புதல்வியாக இருந்தவள் 1991 இல் தன்னை முழுமையான போராளியாக மாற்றிக் கொண்டாள். பயிற்சியில் மிகவும் திறமையுடன் செயற்பட்டு அனைத்திலுமே முன்னின்றாள். சிங்கள வெறியினரின் அகோரத் தாண்டவம் மணலாற்றுப் பகுதியில் 'மின்னலென' ஆரம்பிக்கப்பட்டது. உக்கிரத்துடன் காட்டினை எரித்துக் கொண்டிருந்தான் பகைவன்.

பயிற்சி முடிந்த வேளையில் அச்சமருக்காக அழைப்பு வந்தது. காவும் குழுவாக திறம்பட செயற்பட்டு அனைவரதும் பாராட்டுக்கு ஆளானாள். சில காலத்தின் பின்னர் மணலாற்றுப் பகுதியில் பதுங்கித் தாக்குதல் நடத்தவென பெண் போராளிகளில் சிலர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் பூமகளும் ஒருத்தி கனரக ஆயுதமான எல்.எம்.ஜிக்கு உதவியாளராகச் செயற்பட்டாள். அத்தாக்குதல் முடிவடைய எல்.எம்.ஜீ ஒன்று அவளது கையில் தவழ்ந்தது.

1992 இல் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட மகளிர் படைப் பிரிவில் இவளும் இணைந்தாள். மகளிர் படையணியின் அந்தச் சிறப்புப் படைப் பிரிவு அக்காலப் பகுதியில்தான் கட்டைக் காட்டிலிருந்த எதிரியின் பாரிய ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றியது. இவளது திறமை இதில் துல்லியமாகப் பளிச்சிட்டது. அடுத்து எதிரியால் நடாத்தப்பட்ட பலவேகய–2 இலும் முன்னின்று செயற்பட்டாள். தொடையில் பெரிய காயம் ஒன்றைப் பெற்றுக் கொண்ட போதிலும் சண்டைக் களத்தின் சிந்தனை சிறிதளவேனும் அவளிடமிருந்து விலகவில்லை. "காயம் எப்ப மாறும்? எப்ப நான் போகலாம்?" என அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருப்பாள்.

1992 இல் தொண்டமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான எதிரியின் காவலரண்களைத் தகர்க்கும் சண்டைக்கு எல்லோரும் தயாராக இருந்தவேளை, தளபதியால் இறுதியில் இவள் மறித்து விடப்பட்டாள். ஆனால் அவளோ அழுது அடம்பிடித்து தனது எல்.எம்.ஜீ உடன் களத்தில் இறங்கினாள். சண்டை மும்முரமாக நடந்தது. எதிரி எறிந்த டொங்கான் எறிகணையால் கையில் காயமடைந்தாள். "கையில் என்னடி பூஸ்" என யாராவது கேட்டால் "நெருப்புத் தணல் கொட்டுப்பட்டது" என்று கூறிவிட்டு தலையைச் சாய்த்துச் சிரித்துக் கொள்வாள். அந்தச் சிரிப்பினூடே தெரியும் சோகம் எதனால் என்பது எவருக்கும் புரியாத புதிராகத்தான் இருக்கும்.



**மேஜர் பூமகள்**

1993 இல் தளபதியால் முகாம் ஒன்றின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள். தேனீர் தயாரிப்பதிலிருந்து சமைப்பதுவரை அவள் கெட்டிக்காரி "பூமகளின் புட்டு பூப்போல இருக்குது" எனச் சப்புக் கொட்டியவாறு அனைவரும் ருசித்து உண்போம். மிகுதியாகும் உணவை பசிக்குது எனக் கேட்கும் யாருக்கும் கொடுப்பாள். தண்டனை கிடைக்கும் எனத் தெரிந்தும் இதனை அவள் செய்யாமல் விடுவதில்லை. முகாமில் ஏதாவது சிறப்பான உணவைத் தயார் செய்தால் பக்கத்திலிருக்கும் சிறுவர்களுக்கும் ஒரு பகுதி போய்ச் சேரும்.

முகாமை அழகுபடுத்த வேண்டும் என்பதில் அலாதியான விருப்பம் கொண்டவள். மழை வெய்யில் பாராது பாத்தி கட்டி நீரூற்றி பூக்களுடன் பொழுதைக் கழிப்பாள். அதே வேளை செய்வதை நிறைவாகவும் அழகாகவும் செய்ய வேண்டும் என்பதில் பிடிவாத குணமும் கொண்டவள். முகாமில் சக போராளிகள் விடும் சிறிய தவறுகள் அனைத்தையும் தானே முன்னின்று தீர்ப்பாள். அவர்கள் செய்யும் பிழைகளுக்குரிய தண்டனையை பொறுப்பாளரிடம் தானே வாங்கிக் கொள்வாள். வயதில் சிறியவளாக இருந்தாலும் வயது முதிர்ந்த ஒரு தாயின் உள்ளத்தை தன்னகத்தே கொண்டவள் எங்கள் பூமகள்.

ஆரம்பக் கல்வி மிகக் குறைவாக இருந்தாலும் தனது முயற்சியால் பலவற்றை அறிந்தும், எழுதியும், மிக அழகாக அச்சாக எழுதுவாள். போராளிகளுக்கு அறிவுரை கூறும் போது பூமகளை உதாரணம் காட்டி மற்றவர்கள் பேசும் அளவிற்கு அவள் முன்மாதிரியாக விளங்கினாள். போராளிகளில் அன்பு கொண்டாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில்தான் எங்கு சென்றாலும் தன்னையும் அதனூடே மாற்றி அங்குள்ள புதிய சூழ்நிலைக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் ஒரு வித்தியாசமான போராளி அவள்.

அவள் அடிக்கடி கூறும் வார்த்தைகள் "அக்கா நான் காயப்பட்டாலும் முகத்திலமட்டும் காயப்படக் கூடாதக்கா" இதனை உண்மையாக்கியபடி அந்த அழகான முகத்தில் சிறிதளவு சிதைவும் இன்றி நெஞ்சில் வீர வடுவைப் பெற்று சூரியக்கதிர்–2 நடவடிக்கையில் 1996.04.25 அன்று தன்னை இம் மண்ணுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டாள். எதனைத்தான் மறக்கினும் அந்தத் தூய முகத்தினை, மீளா உறக்கம் கொள்ளும் நிலையில்கூட மிக அமைதியாக அழகாக இருந்ததை எவ்வாறு மறக்க முடியும்?

தட்சாயினி அவள் ஒரு வித்தியாசமான போராளி. அவதானம் மிக்க போராளி. எதுதான் செய்ய மறந்தாலும் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து வாகனத்தைத் துடைத்து ஊதுவர்த்தி கொளுத்தி சாம்பிராணிப் புகை காட்ட மறக்கமாட்டாள். அதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பின்னர் தான் அவளுக்கு விடியும். பனிக்காலமானாலும்கூட தனது தொய்வு வருத்தத்தையும் பொருட் படுத்தாது எழும்பி விடுவாள்.


வாகனம் ஓட்டிய பின்னர் கொண்டு வந்து விடும் வாகனம் வழமை போல அதிகாலையில் பளிச்சென்று இருக் கும். அதேபோல தானும் மிகவும் நேர்த்தியாகவும் தூய்மையாகவும் இருப் பதில் அக்கறை கொண்டவள். எவ்வ ளவு வேலை இருந்தாலும் அவளுக் கென கொடுக்கப்பட்ட துப்பாக்கியில் பளீரிடும் அளவுக்கு தூய்மை இருக் கும். ஒரு சிறு தூசுகூட அதில் காண முடியாது.

மல்லாவியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவள் மட்டக்களப்புக்குச் சென்று திறமையுடன் பயிற்சி முடித்து முழுமையான ஒரு போராளியாக தன்னை மாற்றிக் கொண்டாள். மட்டு – வாகரைப் பகுதியில் இராணுவத் தின் ஒரு சுற்றிவளைப்புக்குள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. தனது முதல் களத்திலேயே திறமையுடன் செயற்பட்டாள். அதில் பெரிய காயம் அடைந்தும் வைத்திய சாலைக்கு வர மறுத்து களத்தில் நின்றே சிகிச்சை பெற்றுக் கொண்டாள்.

அதன் பின் வாகன ஓட்டுனராகப் பயிற்சி எடுத்தாள். திறம்படப் பயிற்சி முடித்ததும் மீண்டும் சண்டைக் களம் அவளை அழைத்தது. *1992* இல் கட்டைக்காட்டிலுள்ள எதிரியின் ஆயுதக் கிடங்கை கைப்பற்றுவதற் கான சண்டைக்கு சிறப்புப் படைப் பிரிவிலுள்ள சில போராளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அதில் ஒரு பகு திக்கு இரண்டாவது பொறுப்பாள ராக களத்தில் இறங்கி தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினாள்.

அதன் பின் தொண்டமானாற்றி லிருந்து ஒட்டகப்புலம் வரையிலான காவலரண்களைத் தகர்க்கும் சண்டை யில் மிக முன்னே நின்று சண்டை யிட்டது இவளது அணி. அந்தச் சண்டையில் தன் முத்திரையைப் பதித்தாள். தனது உடலில் வீரத் தழும்பை அச்சண்டையில் சாய்சியா கக் கொண்டாள். சண்டைக்களத்தில் அனைத்திலுமே ஒரு தலைவியாக நடத்தும் பாரிய திறமை அவளிட முண்டு. தனியே விட்டாலோ தட் சாயினி கண்ணில் தட்டுப்படவே மாட்டாள். முன்னுக்குப் போய்விடு வாள். காயம் ஆறிய பின்னர் ஓட் டுனர் பணி அவளை நாடி வந்தது.

"தட்சாயினி பத்து நிமிஷத்தில



**கப்டன் தட்சாயினி**

வாகனம் ரெடியாக இருக்க வேண் டும்" என்றால் அதற்கு முன்னதாகவே வாகனத்துடன் நிற்பாள். மழைகாலங் களில் அவளுக்கு இழுப்பு அதிகமாக இருக்கும். ஆனால் ஒருநாள்தானும் தனது வருத்தத்தை வாய் திறந்து கூற மாட்டாள். வாய் பேசாது வாகனம் ஓட்டுகின்றாள் என்றால் 'இழுக்கின் றது' என்பதை புரிந்து கொள்ளலாம். வாய் திறந்தால் சத்தம் கேட்குமோ என்ற நினைப்பில் இறுக்க மூடியபடி பனி, மழை ,இரவு, பகல் பாராமல் அவளது கை இயங்கிக் கொண்டே இருக்கும்.

தன்னைப் பற்றி, தனது பசியைப் பற்றி சிறிதேனும் அவள் கவலைப்படு வதில்லை. அதனால் ஒவ்வொரு நாளும் தண்டனையாக முட்டை குடித்து வந்தாள். தன்மானம் மிக்க வள். "ஏனக்கா நாங்கள் இதைத் தனிய செய்ய இயலாதா? எங்கட முயற் சியால நடக்க முடியாதா?" எனப் பல கேள்விகளை எந்த நேரமும் கேட்டுக் கொண்டிருப்பாள். மிகவும் எளிமை யான சுபாவம் கொண்ட இவள் தலை வரிலும் இயக்கத்திலும் அபரிதமான விசுவாசம் மிக்கவள்.

பரிவு மிக்க தோழியாய் பாசத் துடன் அணுகும் தன்மை அவளுக் கென்றே சிறப்பாக அமைந்துள்ள குணமாகும்.

சூரியக்கதிர்–1 இன்போது அச்சு வேலிப் பகுதியில் முன்னேறிய இரா ணுவத்தினரை வழிமறிக்கவெனப் பொறுப்பாளர் சென்றதை அறிந்ததும் துப்பாக்கியைக் கொளுவியபடி மறு நிமிடம் அங்கு போய்ச் சேர்ந்து விட் டாள். "உன்னை யார் இங்கு வரச் சொன்னது போ" என்று அவர் வற் புறுத்தலாக அனுப்பிய பின்னர்தான் பின்னே வந்தாள்.

குழைத்த சோறு உண்ணுவதில் அலாதியான விருப்பம் கொண்டவள் அடிக்கடி *1991* இல் வீரச் சாவைத் தழுவிய தனது தம்பியை நினைத்து கவலை கொள்வாள். ஆனாலும் வாய் திறந்து சொல்லமாட்டாள். கடை மையே கண்ணாக, இயக்கமே தனது வாழ்க்கையாக தன்னை மாற்றிக் கொண்ட ஒரு வித்தியாசமான போராளி அவள். "கனநாள் நான் சண்டைக்குப் போகவில்லை. இந்த முறை வீரச்சாவுதான்" என சிரித்த படி கூறிச் சென்றதை உண்மையாக் கியபடி *1996.04.25* அன்று கச்சாய் மண்ணில் விதையாகிப் போனாள் ....வாகனத்தில் புகையும் ஊதுவர்த்தி யும் சாம்பிராணியும் அவளது உருவை அடிக்கடி எமக்கு நினைவுபடுத்தியபடி.

**பொன்னிலா**

'சுதந்திரப் பறவைகள்'

## அமைச்சர் சொன்ன கதை

அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி, நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக் கான காரணங்களை தான் அவதானித்த போது, தாம் பாவிக்கின்ற சொற்பிர யோகம்தான் கருவாக இருக்கிறதென்கிறார். எனவே பெரும்பான்மை, சிறுபான்மை என்று அழைப்பதை விடுத்து புதியதொரு சொல் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றாராம் சிறுபான்மையினர் என்று அழைப்பதால் தமிழ், முஸ்லீம் மக் களிடையே தாம் தாழ்ந்தவர்கள் என்ற மனோநிலை உருவாகியிருப்பதனாலேயே சமாதானத்திற்கு அது பெரும் பங்கம் விளைவிக்கிறது என்றும் அவர் கவலை கொண்டிருக்கிறாராம். அழைப்பதில் என்ன இருக்கிறது, 'பனங்கொட்டைத் தமிழா' 'களுத்தமிழா' என்றெல்லாம் சிங்கள இனத்தவர்கள் அழைப்பதில்லையா?

பெரும்பான்மையினர் நடந்துகொள்வதில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக் கின்றன. இரண்டாம் தரப் பிரசைகளாக, அடிமைகளாக, எண்ணினாலும் தமிழ் மக்களை ஆக்கிரமிக்கும் எண்ணப் பாங்கு தகர்வதிலேயும் மாற்றம் வேண்டும் என்பது ஜெயக்கொடி அறியாதிருப்பாரா. சும்மா ஒரு கதைக்கு சொல்லியிருப்பார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மக்கள் உணர்வுகளை மீறிய யுத்தம்



"விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து போராடுவதற்கு மேலும் பலரை இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளது". இவ்வாறு தெரிவிக்கின்றார் சிறிலங்கா இராணுவ தளபதி றொகான் தலுவத்த. இதே சமயம் யுத்தத்தில் காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு இரத்த தானம் வழங்க முன்வரவேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பகிரங்க அறிவிப்பொன்றை விட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இராணுவ தரப்புக்கு எதிர் பார்த்ததை விட பெருந் தொகை இராணுவத்தினர் காயமடைந்ததைத் தொடர்ந்து இந்த நிலை அரசுக்கு ஏற்பட்டது. கிளிநொச்சித் தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினருக்கு பெருந்தொகை இரத்தம் தேவைப் பட்டதனால் இரத்த வங்கியின் கையிருப்பு ஒரு சில நாட்களிலேயே பெருமளவு வீழ்ச்சி கண்டது. இதனால் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இடம் பெற இருந்த சத்திரசிகிச்சைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இரண்டாம் ஈழப்போர் இடம்பெற்ற காலப்பகுதியிலேயே சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஆள்சேர்ப்பு கடினமான விடயமாக ஆகியிருந்தது. இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் பலர். சிங்கள இளைஞர்கள் பலர் இராணுவத்தில் சேரத் தயாராக இருக்கவில்லை. இதைத்தொடர்ந்து பெரும் சலுகை அறிவிப்புக்களும், தகமைக் குறைப்புக்களும் செய்த போதும் இது இளைஞர்களைக் கவரவில்லை. மேலும் ஒரு காலத்தில் கௌரவமானதும், பாதுகாப்பானதும் எனக் கருதப்பட்ட விமானப்படை கடற்படை ஆகியவற்றில் கூட இளைஞர்கள் சேர முன்வரத் தயங்கினர். இதன் காரணமாக மேலும் பல சலுகைகளை வழங்கி அவற்றை விளம்பரப்படுத்த தொலைக்காட்சிகளில் பெருமெடுப்பில் விளம்பரங்களும் செய்ய வேண்டி இருந்தது. ஏறத்தாழ இதற்கொத்த உணர்வே இராணுவத்தினருக்கென இரத்த தானம் செய்யும் விடயத்திலும் ஏற்பட்டது போல் இருக்கிறது. இல்லாது போனால் இரத்த தானம் செய்யும் படி ஜனாதிபதி கோரும் நிலை உருவாகியிருக்காது. ஏனெனில் இவ் விடயமானது மக்கள் சித்தத்திற்கு சார்பான உணர்வைக் கொண்டிருப்பின் கீழ் மட்டத்திலேயே தீர்த்து வைக்கக்கூடிய விடயமாகும். ஆனால் தற்போது பார்த்தால் ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கைக்குக் கூட மக்கள் செவி சாய்ப்பதாக இல்லைப் போல் தெரிகின்றது. இல்லாவிடில் 'சத்ஜய' 111 நடவடிக்கையில் படுகாயமடைந்த இராணுவத்தினரின் தேவைக்கென 200 க்கும் மேற்பட்ட ஏற்கனவே போரில் ஊனமடைந்துள்ள இராணுவத்தினரிடம் இரத்தத்தைப்பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு ஏற்பட்டிருக்காது. இந்த நிலையில் சந்திரிகா அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் யாவும் அவர்களின் அரசியில் நலன் கருதியதே ஆகும். இல்லாது விட்டால் மக்கள் யுத்தத்தில் பெரும் ஊக்கம் காணாத நிலையில் அரசாங்கம் இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை எதுவும் ஏற்பட்டிருக்க மாட்டாது.

அரசாங்கம் அதற்காக தொடர்ச்சியான பொய்களை கூறிக்கொண்டிருக்க வேண்டிய தேவையும் ஏற்பட மாட்டாது. ஆனால் யுத்தம் தொடர்பாக சந்திரிகா அரசாங்கம் தற்போது வெளியிட்டு வரும் இராணுவ வெற்றி குறித்த அறிவிப்புக்களை எத்தனை காலத்துக்கு அதனால் தொடர முடியும் என்பது முக்கியமான கேள்வியாகும். ஏனெனில் யுத்தத்தில் இராணுவத்தினர் வென்று விட முடியாது என்பது மட்டுமல்ல நாளாந்தம் தொடர்ந்து இழப்புக்களையும் இடையிடையே பெருமிழப்புக்களையும் தவிர்க்க முடியாது சந்தித்து வரவேண்டும் என்று துணிந்து கூற முடியும்.

> எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்தில் இருந்தே பிறக்கின்றது.
>
> தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அப்பாவும் சமகாலமும்

வீடே பயத்தில் உறைந்து போயிருந்தது..... அனைத்து முகங்களும் உயிரிழந்து... அச்சம் தோய அம்மாவின் குரல் ஏங்கிப்போய் அமைதியைக் குலைத்தது.

'என்னடா தம்பி செய்வம்'.

'என்னத்த செய்ய... இப்படியே கிடந்து சாகிறதுதான்....' அழுகையில் உடைந்தது அக்காவின் குரல்.

'விசர்க் கதை..' நான் அவர்களைத் தேற்ற முனைந்தேன்.

'சந்தியில விழுந்த ஷெல் எங்கட வீட்டுக்கு வர எவ்வளவு நேரமாகும்... இண்டைக்கு இரவே வந்தாலும் வரும்'

'வராது எண்டு நான்சொல்லேல்ல.. கொஞ்சம் நிதானமா இருங்கோ... யோசிச்சு சில ஒழுங்குகளைச் செய்து கொண்டு அடுத்த கட்டத்தைப்பாப்பம்'.

'அடுத்த கட்டமெண்டா... என்னத்தைச் சொல்லுறாய்..?'

'இந்த இடத்த விட்டு கொஞ்சம் தள்ளியெண்டாலும் இருக்கிறதச் சொல்லுறன்..'

'அப்ப இந்த வீட்டில கிடக்கிற சாமான்களை என்ன தம்பி செய்யிற'

கனடாவிலிருந்து சின்னண்ணா சம்பாதித்த காசில் கட்டிய மாளிகை மாதிரி வீடு.... வீட்டை நிறைக்கும் நவீனமான பொருட்கள்...

சீதனமாய்க் கொண்டு செல்லவென அக்காவின் ரசனைக்கு ஏற்ப தெரிவு செய்தவை இவை ஒவ்வொன்றும்... இவற்றை இப்படியே அனாதைகளாக விட்டுப் பிரிய அக்காவின் மனசு சம்மதிக்காது தான்.

'ஐயோ என்ர பிள்ளை கனடாவில நொந்து சம்பாதிச்ச காசடா எல்லாம்...' அம்மா அரற்றினாள்.

நான் மௌனமாக எழுந்து உள்ளே போனேன்.

அப்பாவின் அறையில் பெரியசாமி அப்பாவின் படுக்கை விரிப்பை மாற்றிக் கொண்டிருந்தார்.

சற்றுமுன்னர் எமது வீட்டிலிருந்து கிட்டத்தட்ட அரைமைல் தொலைவில் ஷெல் விழுந்த பாதிப்பு எதையும் பெரியசாமியின் முகத்தில் காண முடியவில்லை.

அருகிருந்த சக்கர நாற்காலியில் தூக்கி உட்கார வைக்கப்பட்டிருந்த அப்பா மட்டும் எதையோ சொல்ல எத்தனித்தார்.

'என்னப்பா..?' ' என்று கேட்டபடி அவரை அணுகினேன். பாரிசவாதத்தில் ஒரு பக்கம் இழுத்துப்போன வாயோடு அவர் சொன்னதை விளங்கிக் கொள்ள முனைந்தேன்.



'இ...இள்..ளையும் மெழல்...ல் வ... மு... மா..' என்று சொற்கள் குழம்பி... அவரது தவிப்பை அந்த விழிகளும் கையொன்றும் வெளிப்படுத்தத் துடிக்கையில்...

'இங்கையும் ஷெல் வருமா எண்டு கேக்கிறார் தம்பி...'

பெரியசாமி அப்பாவைப் புரிந்து கொண்டு கூறினார்.

இந்த எட்டு வருடங்களில் அப்பாவை முழுதாய்ப் புரிந்து கொண்ட ஒரே ஒரு ஆத்மா பெரியசாமி தான்.

சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டிருந்த போதும் வெறும் கடன் கழிப்பாய் எண்ணாமல் ஒரு பொறுப்புள்ள தாதியாய் துணையாய் அவரது மலசலத் துணிகளையும் எந்த வித அசூசையும் காட்டாமல் துவைத்துப் போட்டு ஒரு குழந்தை போல அப்பாவைப் பராமரிக்கும் மனிதர் இந்தப் பெரியசாமி.

அம்மாவோ அக்காவோ அருகில் வரவே தயங்கியபோது ஆளொரு கோலமும் துணியொரு கோலமுமாய் மலசலங் கழித்துக் கிடந்த அப்பாவை.

"ஒரு கைபிடி தம்பி...'' என்று என்னையும் அழைத்து அவரைத் தூக்கிக் கழுவி அமர்த்தி -- துணிகளைக் கழுவி அறையை நேர்த்தியாக மாற்றி – தனது படுக்கையையும் அருகில் இட்டுக் கொண்ட பெரிய சாமி வெறுமனே ஒரு நோயாளியைப் பராமரிக்க நியமிக்கப்பட்ட ஒய்வு பெற்ற தாதியாக மாத்திரம் செயற்படவில்லை. மனித நேசத்தின் ஒரு தூதுவனாக விளங்கிய அந்த மனிதர் என் மனசில் ஒரு மேலான மானுடனாய் விசுவரூபம் கொண்டவர்.

'ஒண்டுக்கும் நீங்கள் யோசிக்க வேண்டாமப்பா. வலுகெதியா ஏதும் ஒழுங்கு செய்வம்..'

அப்பாவைத் தேற்றும் விதமாய் அவரது கைபற்றி ஆறுதலாய்ச் சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

ஆளுக்கொரு மூலையாய் அமர்ந்து கொண்டு அழுதபடியிருந்தனர் அம்மாவும் அக்காவும்.

இப்போதைக்கு மாற்றாகச் செல்லக்கூடிய இடமென்றால்...... அக்காவுக்கு பேசி ஒழுங்கு செய்திருக்கும் மாப்பிளை வீட்டாரின் வீடுதான் – நல்லூர் இப்போதைய நிலமைக்கு நல்ல பாதுகாப்பு இடந்தான், எங்கள் நெருங்கிய உறவினர் யாவருமே உரும்பிராயிலும் ஏழாலையிலும் என்று இருக்கும்போது, பாதுகாப்பான தொலைவு நல்லூர் என்றே எனக்குப்பட்டது.

எனது யோசனையை மெல்ல வெளியிட்டேன், அம்மா ஏதுமே கூறவில்லை.

அக்காதான் துள்ளினாள். கலியாணப்பேச்சு சரிவந்தாப் போல நாங்கள் அவையிற்ற இப்படிப் போகலாமே... அது மரியாதையில்லை நானென்றால் மாட்டன்.

அக்கா தனது வழமையான பிடிவாதத்தோடு... 'வேற எங்க பிள்ளை போறது' அம்மா கேட்டாள்.

'எங்கேயெண்டாலும் போவோம் அங்க வேண்டாம்'.

'அப்ப கோயில் பள்ளிக்கூடங்களில் வந்து இருப்பியளோ?'

'கோயில் பள்ளிக்கூடத்தில அகதியோளட நாங்கள் வந்து இருக்கவோ?'

அம்மாவின் பழைய பரம்பரைத் திமிர் பேசியது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

'கோயில் பள்ளிக்கூடங்களில உங்கட ஆலை வந்து இருக்கேலாது எண்டால் உங்கட ஆட்களிட்ட உரும்பிராய்க்கோ அல்லது அப்பாட ஆட்களிட்ட ஏழாலைக்கோதான் போக வேண்டும். அந்த இடங்களில செல்லடிப்பயத்தில சனமெல்லாம் எழும்பி வேற இடங்களுக்குப் போயிட்டுது. இப்ப உதவியெண்டு போகக்கூடிய இடம் நல்லூர் தான்.'

முடிவில் நான் நல்லூரில் அவர்களின் வீட்டைச் சென்றடைந்த போது மாலை நாலு மணிக்கு மேலிருக்கும்.

நிலைமையை விளக்கி எப்படியும் அப்பாவுக்கு ஒரு தனியிடம் வேண்டுமென்பதையும் கூறியபோது அந்த விஷயம் தான் எல்லோருக்கும் சங்கடம் தந்தது போல பட்டது.

எதற்கும் அன்றைய இரவே வருவதாகச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்தேன்.

'அப்பாவைக் கொண்டு போறது அவையளுக்கு விருப்பமில்லை எண்டு சொல்லுறாய். பிறகு என்னெண்டு கொண்டு போறது.... அவையள் தான் என்னெண்டு ... அரையண்டங்களைத் தாங்குவினம்..?

அக்கா பெரிதாய் சத்தம் போட்டாள்.

'அங்க போயிருந்து கொண்டு வேணுமெண்டால் ஒரு தனி வீடு பாப்பம்..'

'அப்ப இந்த வீடு?'

அக்கா பெரிய ஏக்கத்தோடு கேட்டாள்.

அம்மா பெரிதாய் மூச்செறிந்தாள்.

நான் வாகனமொன்று ஒழுங்கு செய்யப் புறப்பட்டேன்.

'தம்பி ஒருக்கா அப்பா வரட்டுமாம்' பெரியசாமி புறப்படத் தயாரான என்னிடம் ஓடி வந்தார்.

'கூப்பிட்டனீங்களா அப்பா' என்றபடி நான் அறைக்குள் நுழைந்தேன்.

பெருத்த தவிப்புடன் எதையோ சொல்ல முனைந்து அதைமீறிப் பெருகிய கண்ணீருடன் வெதும்பும் அவரைக்காண இதயம் விண்ணென வலித்தது.

முதுமை கொடியது. செயலிழந்து சுமையாய் நோய் வாய்ப்பட்டு அடுத்தவரின் வெறுப்புக்கு ஆளாகி மனிதன் வெதும்பும் நிலைமை...

ஓ.. அது மிகத்துயரமானது. எனது முதுகைத் தட்டிப் பெரியசாமி தான் பேசினார்.

'நீங்கள் கதைச்சதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தவர் தன்னால எல்லோருக்கும் ஒரே கரைச்சல் எண்டு இப்பத்தான் என்னட்டையும் சொல்லி அழுதவர்'

தலை கவிழ்ந்து அழும் எனது தந்தையைப் பார்த்து நிற்கும் மனத் திண்மையற்றவனாக நான் வெளியேறினேன். பெரியசாமியை மட்டும் அழைத்து நான் மேற்கொள்ளப் போகின்ற நடவடிக்கைகளைப் பற்றி விளக்கி விட்டு மீண்டும் சைக்கிளில் ஏறினேன்.

தொலைவில் மீண்டும் எங்கோ 'ஷெல்' விழுந்து அதிர்வு பரவிற்று.

வாகனத்தை ஒழுங்கு செய்து வீட்டுக்கு வரச்சொல்லி விட்டுத் திரும்பினேன். மிகவும் அவசியமான பொருட்களை மட்டும் தெரிவு செய்து பொதிகளாகக் கட்டிக் கொண்டு அன்றைய இரவு உணவைப் பொதி கட்டிக் கொண்டிருந்த அம்மாவிடம் போனேன்.

'அவையள் ஒண்டும் பெரிய சந்தோஷத்தோட எங்களை வரச் சொல்லயில்ல. பார்க்கப் போனால் நாங்கள் வீட்டை இப்படியே விட்டு வெளிக்கிடுவமெண்டு அவையள் எதிர்பார்க்கேல்ல. ஆனால் இதையெல்லாம் இப்ப பார்க்க முடியாது. ஏலுமெண்டால் ஒன்றிரண்டு கிழமைக்குள்ள தனி வீடாப் பாக்க முடிஞ்சாலும் நல்லது'

அம்மாவின் முகம் மேலும் விசனத்தால் கறுத்துப்போனது.

'உங்களை இண்டைக்கு ராவு அங்க கொண்டு போய் விட்டிட்டு ஏலுமெண்டால் நாளைக்கு ஒரு வாகனம் பிடிச்சு இந்தச் சாமான்களை ஏத்திக் கொண்டு வாறன்.'

நான் தொடர்ந்தேன்.

'எங்களை அங்க விட்டுப் போட்டு நீ தனிய இஞ்ச நிக்கவோ... நல்ல கதை... உன்னை இந்த வீட்டில தனிய விடமாட்டான்' அம்மாவின் குரல் தீர்மானமாய் மறுத்தது. அதே போதில்,

'தம்பி.. இஞ்ச ஒருக்கா வந்திட்டுப் போங்கோ'

பெரியசாமியின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

அப்பாவின் அறைக்குள் நுழைந்த என்னை அம்மா பின் தொடர்ந்தாள்.

பெரும் திணறலுடன் மூச்சு விடப் பெரிதும் சிரமப்பட்டபடி படுக்கையிற் கிடந்து உழலுகின்ற அப்பாவைக் காண ஏதோ விபரீதம் நேரப் போவதாய் மனசு அடித்துக் கொண்டது.

அம்மா பெரிதாய்க்குரல் எடுத்து அழத் தொடங்கினாள்.

'டொக்டரை ஒருக்காக் கூட்டிக் கொண்டு வாங்கோ தம்பி' பெரிய சாமி கவலையிலும் நிதானம் தவறாமல் பேசினார்.

அவசரமாய்ச் சட்டையை மாட்டிக் கொண்டு சைக்கிளை எடுக்கையில்

மிகப்பெரிய சத்தத்துடன் ஒரு ஷெல்..

பதட்டத்தில் எடுத்த சைக்கிளைக் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடினேன். 'ஐயோ தம்பி வெளியில ஓடு.. எங்கையோ வலுகிட்டத்தான் விழுந்திருக்கு நிக்காமல் ஓடு.'

'வெளி முற்றத்தில் விழுந்து படு'

அக்கா குளறியபடி அம்மாவையும் இழுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்து கொண்டிருந்தாள்.

அவர்களை லட்சியம் செய்யாமல் நான் அப்பாவின் அறைக்குள் ஓடினேன்.

அப்பாவின் நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார் பெரியசாமி.

'கட்டிடத்துக்குள்ள இருக்கிறது புத்தியில்ல பிடியுங்கோ அப்பாவை வீல் செயரில் இருத்தி வெளியில கொண்டு போவம்'

'வேண்டாம் தம்பி அவரை இப்ப சிரமப்படுத்த வேணாம். நீங்கள் வேணுமெண்டால் போங்கோ அப்பாவோட நான் இருக்கிறேன்' பெரியசாமி உறுதியாக மறுத்தார்.

என்னையும் அறியாமல் நான் வெளியே வந்தேன். அடுத்தடுத்து எங்கேயென்று சொல்ல முடியாது ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. எங்களின் வீட்டைத் தாண்டியும் அதன் எதிர்ப் புறத்திலும் அவை வீழ்ந்து வெடித்தன.

சிறிதுநேர இடைவெளியில் நான் மீண்டும் உள்ளே போனேன்.

அப்பாவின் கட்டிலருகேயிருந்த நாற்காலியில் பெரியசாமி அமைதியுடன் அமர்ந்திருந்தார். படுக்கையில் அப்பா அமைதியாய்க் கிடந்தார். திடுக்கிட்ட மனதோடு நான் பெரிய சாமியை ஏறிட்டேன்.

கவலை தோய்ந்த ஒரு தலையசைப்புடனன் பதிலளித்தார்.

'ஒருவரையும் கரைச்சல் படுத்த விரும்பாமல் பெரியய்யா போயிற்றார் தம்பி.'

— ந. சத்தியபாலன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







சுவிஸ்



சுவிஸ்




அமெரிக்கா




பிரான்ஸ்



# புகலிட நிகழ்வுகள்...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப் பதிப்பு: வாசன் அச்சகம், லண்டன். 0181 640 4366

www.tamileelamarchive.com